VISIT…

இல்லை. உனக்காகவும்தான் என்பதுபோல, ''நீயும் நன்றா
கத் தூங்கு அம்மா. வருங்கால மாமியார் என்ன நினைப்
பாளோ என்று அவசரப்பட்டு எழ வேண்டாம்... கண்ணா,
தாயம்மாவிடம்...'' என்ற சிவகாமி மேலே பேச இயலாமல்
நிறுத்திப் பெருமூச்சுவிட்டார்.

அனுபமாவின் கையை ஒருதரம் வருடிக் கொடுத்துவிட்டு
விடுவித்தார்; செல்லுங்கள் என்பதுபோல ஜாடை காட்டிவிட்டு
விழிகளை மூடிக் கொண்டார்.

சத்தமின்றி இருவரும் அறையைவிட்டு வெளியேறினர்.

அவர்களின் பின்னே கதவு தானாக மெல்லச் சாத்திக்
கொண்டபின், அவனாக ஏதாவது சொல்லுவானோ என்று
வித்யாதரனைப் பார்த்தாள் அனுபமா.

ஆனால் அவனது வெறித்த பார்வையும் விழிகளில் லேசான
நீர்த்திரையின் பளபளப்பும் அவனது மனநிலையை உணர்த்
தவே அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

சட்டென அவனை நெருங்கி அவனது கரத்தின் மீது கை
வைத்து, ''அம்மாவுக்கு ஒன்றும் ஆகாது. கவலைப்படா
தீர்கள்'' என்றாள் கனிவுடன்.

அவளது கையின் மேல் அவனது மறு கையை வைத்து
அழுத்தினான் வித்யாதரன். இருவேகமான மூச்சுகளின் பின்
''இதேபோல டாக்டரும் சொல்லிவிட்டால் நானும் கவலை
பட மாட்டேன்'' என்றவன் தலையைத் திருப்பி, அவளை
குனிந்து நோக்கி, ''தாங்ஸ்'' என்றான் ஒரு வருத்தமா
முறுவலுடன்.

தொடர்ந்து, ''இந்த நல்ல வார்த்தைகளுக்கு மட்டுமல்
எல்லாவற்றுக்குமோ, நன்றி அனுப.... அனுராகா'' என்றவ
திடுமெனச் சுய உணர்வு வந்தது போல நிமிர்ந்தான்.

அனுபமாவும் அதே போல சிலிர்த்து விலகி நின்றாள்.

''தாயம்மா'' என்று அழைத்து, ''இவர்களுக்கு ஏற்பாடு
செய்திருக்கிற அறைக்கு இவர்களை அழைத்துப் போ.
அவர்கள் கேட்பதைச் செய்துவிட்டு நீயும் தூங்கப் போ.
உன்னைக் காலையில் எழுப்ப வேண்டாம் என்று மணியிடம்
சொல்லிவிடுகிறேன்'' என்று வேலைக்காரியிடம் கூறினான்.

''சரீங்கய்யா'' என்று பற்களைக் காட்டிய தாயம்மா, ''என்
கூட வாங்க, சின்னம்மா'' என்று வழிகாட்டி நடந்தாள்
தாயம்மா.

'சின்னம்மா' என்ற அழைப்பில் மீண்டும் அதிர்ந்தாள்
அனுபமா. ஆட்டம் தொடங்கிவிட்டது என்பதை அது
உணர்த்தியது.

அரிதாரம் பூசி ஆட வந்தாயிற்று. கால் பிறழாமல் ஆடி
முடிக்க வேண்டும்...

தாயம்மா காட்டிய படுக்கையில் விழுந்ததுதான் அனுபமா
வுக்குத் தெரியும். திரும்பவும் அவள் கண் விழித்தபோது
மணி ஒன்பதையும் தாண்டி வெகு நேரமாகிவிட்டிருந்தது.

[illegible]தான் சிவகாமி அம்மாள் நன்றாகத் தூங்குமாறு
கூறினாலும், அவர் சொன்ன நேரத்துக்குச் சற்று முன்னதாகவே
[illegible] நிற்கவில்லை என்றால் வித்யாதரன் அவளைச் சும்மா
[illegible]வானா?

[illegible]முறுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பல் துலக்கி,
[illegible] புஞ்சிதறலாய் விழுந்த வெள்ளரை விட்டு விலகவே
[illegible] மனம் இல்லை. உடை மாற்றி முடித்தபோது மணி
[illegible]

[illegible] விரிந்து உதவிக்கென்று உள்ளே வந்த தாயம்மா,

அனுபமாவின் அவசரத்தைக் கண்டு, காலைச் சிற்றுண்டியை அறைக்கே கொண்டு வந்து கொடுத்தாள்.

விக்க விக்க வாயில் திணித்து, காபியோடு சேர்த்து விழுங்கி முடித்து ஓட்டமும் நடையுமாய் சிவகாமி அம்மாளின் அறையைச் சென்று அடைந்தபோது, அறை வாயிலில் கூண்டுப் புலி நடை போட்டுக் கொண்டிருந்தான் வித்யாதரன்.

அவளைக் கண்டதும் 'குட்மார்னிங்' என்றான் மொட்டையாக.

காலை வாழ்த்துச் சொல்லும் பாவனை இதுவல்ல என்று எண்ணமிட்டபடி, அவசரமாகப் பதிலுக்குக் குட்மார்னிங் சொல்லிச் சற்று மூச்சு வாங்கிக் கொண்டு, ''அம்மா எப்படி இருக்கிறார்கள்?'' என்று விசாரித்தாள் அனுபமா.

தோளைக் குலுக்கினான் அவன். ''இன்னமும் பார்க்க முடியவில்லை. டாக்டர் வருமுன் யாரையும் - முக்கியமாக என்னை உள்ளே விடக்கூடாது என்று உத்திரவு தருமலிங்கம் அங்கிளிடம் - அவர்தான் காரியக்காரர் - அவரிடம் இரவே சொல்லி அனுப்பிவிட்டார்கள். அப்படி உத்திரவு போடாவிட்டால் இரவெல்லாம் சரியாகத் தூங்காமல் காலையிலேயே வந்து நிற்பேனாம்...'' உச்சுக் கொட்டினான் அவன்.

''தூங்கினீங்களா?'' என்று மெதுவாகக் கேட்டாள் அனுபமா.

''உம்... மரக்கட்டைதான். விழித்தபோது மணி ஒன்பது. வேகமாகக் குளித்து சாப்பிட்டு... நீ எப்படி? புது இடத்தில் சரியாகத் தூக்கம் வந்ததா? ஏதாவது சாப்பிட்டாயா?''

உள்ளூர வியப்புதான் அவளுக்கு. இப்படிக் கேட்குமளவுக்கு அவனுக்கு அவள்மீது அக்கறை இருக்கிறதே!

அக்கறையா அல்லது சற்று முன் 'குட்மார்னிங்' சொன்னது போலப் பழகிவிட்ட பண்பாடு உந்தி விருந்தாளியாகக் கருதி விசாரிக்க வைக்கிறதா?

எப்படியோ அவன் கேட்டதே திருப்தி அளிக்கப் பெரிதாகத் தலையை உருட்டினாள் அனுபமா.

முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி பதினோரு மணிக்கு டாக்டர் வந்து சேர்வதற்குள் வித்யாதரன் தவித்துப் போனான்.

ஒரு நாற்காலி கொண்டு வரச் சொல்லி அவளை அமரும்படி பணித்தான்.

ஆனால் அவனுக்கு மட்டும் குறுக்கும நெடுக்குமாக அதே புலி நடைதான்.

இடையே இரண்டுதரம் டெலிபோன் வந்தது. அவனது அலுவலகத்திலிருந்து என்று அனுபமா ஊகித்தாள்.

ஒருதரம், ''வழக்கமாக என்ன செய்வீர்களோ, அதைச் செய்யுங்கள்'' என்று கூறி மேலே பேச இடம் கொடாமல் வைத்து விட்டான்.

சற்றுப் பொறுத்து இரண்டாம் முறை வந்தபோது அவன் குரலில் கடுமை தொனித்தது.'' ''என்னது? புகார் என்றால் பரிசைப்படிதானாமா? ஆபீஸ் என்றால் அப்படித்தான் சொல்வார்கள். நீங்கள் அந்த லைனில் வருகிற அடிமட்ட ஆளைப் பிடியுங்கள். பிடித்து அவன் கையில் நூறு... இல்லை, நூறு ரூபாயைக் கொடுத்தால் வேண்டுமென்றே வெட்டிவிட்டு மீண்டும் தினமும் நூறு ரூபாய்க்கு வந்து நிற்பான். அதனால் பத்து ரூபாய் கொடுங்கள்... மாதம் முழுவதும் தடைபடாமல் சம்பளம் வந்தால் மாதா மாதம் நூறு ரூபாய் தருவதாகச் சொல்லுங்கள்'' என்று முடித்தான்.

பணத்தைக் கொடுத்து மற்றவர்களைப் பாதை விலகச் செய்வது இவனுக்கு ஒரு கெட்டபழக்கமாகி விட்டது என்று நினைத்தாள் அனுபமா. அவளை ஆள்மாறாட்டம் செய்ய வைத்தான், இப்போது...

''உனக்கு இவ்வளவு வெறுப்பாக இங்கே, இப்போது என்ன நேர்ந்து விட்டது?''

வித்யாதரனின் முன்னிலையில் முகத் தோற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று எண்ணியதை அதற்குள் மறந்ததற் காகத் தன்னையே திட்டிக் கொண்டு பேசாதிருந்தாள் அவள்.

ஆனால் விடாமல், ''கேட்கிறேனே?'' என்று அவன் அதட்டியது எரிச்சலைக் கிளப்ப, ''அந்த மின்துறைப் பணியா ளுக்கு லஞ்சம் கொடுக்கிறீர்கள்'' என்றாள் நிமிர்ந்த பார்வையு டன்.

''லஞ்சம் என்பானேன்? அவன் செய்ய வேண்டிய வேலையை ஒழுங்காகச் செய்வதற்காக ஓர் ஊக்க 'போனஸ்' என்று சொல்லக் கூடாதா? நான் என்ன சட்டத்துக்குப் புறம்பாக எனக்குச் சலுகை காட்டச் சொன்னேனா அல்லது மின்தடை நேரத்தில் திருட்டுத்தனமாகத் தொடர்பு தரக்கேட் டேனா?'' என்று வாதிட்டான் வித்யாதரன்.

விதண்டவாதம் என்று அனுபமாவுக்குத் தோன்றியது. அவன் என்னதான் சொன்னாலும் இந்தப் பணம் அந்தக் கடைநிலை ஊழியனின் நேர்மையைக் கெடுப்பது நிச்சயம் என்று நினைத்தாள் அனுபமா. வாங்குகிற சம்பளத்துக்கு வேலை செய்ய இனி அவனுக்கு மனம் வராது. எல்லாரிடமும் ஊக்கப்பணம் எதிர்பார்ப்பான்!

ஆனால் தாயைப் பற்றிய கலக்கத்தில், யார் மேல் பாயலாம் என்று முட்டு மாடு மாதிரி நிற்கும் வித்யாதரனிடம் வாய்

கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ள விருப்பம் இன்றி, ''அதுவும் சரிதான்'' என்று முடித்துவிட்டாள்.

ஆனால் அவளது மனதைப் படித்துவிட்டவன் போலச் சில கணங்கள் ஆத்திரமாக அவளை உறுத்து விழித்தான் வித்யாத ரன். பிறகு லேசாகத் தலையசைத்து, ''சரி'' என்றான். தணிவாக, ''நேற்று இரவு தூக்கம் கெட்டதில் அம்மாவுக்கு உடம்பு மேலும் மோசமாகி விட்டிருக்குமோ என்று கவலை யாக இருக்கிறது. காலையில் வந்து சேரும்படியாகக் கிளம்பா மல் ஏன்தான் வீணாக அவசரப்பட்டேனோ என்றிருக்கிறது...'' என்று தன் உறுத்தலை வித்யாதரன் வெளிப்படையாக உரைக்கவும், சற்று முன் இருந்த எண்ணம் மாறி அவனிடம் அவளுக்குப் பரிதாபம் உண்டாயிற்று.

சிவகாமியைப் பரிசோதித்துவிட்டு வந்த டாகடர் மகனின் கவலை அவசியமற்றது என்றார்.

''நல்லதோ கெட்டதோ எந்தவிதமான பாதிப்பும் இல்லை, வித்யா. அவர்களுக்கு... உன்னிடம் ஏதோ பேச விருப்பம் போலத் தெரிகிறது. எதுவானாலும் அவர்கள் மனம் நிம்மதியு றும் வண்ணம் அவர்களை ஒட்டியே பேசு'' என்றவர் அனுபமாவை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்தார். ''உனக்கும் சேர்த்துத்தானம்மா சொல்கிறேன். இதமான பேச்சுதான் அவர் களுக்கு இப்போது தேவை'' என்று இயம்பிவிட்டுக் கிளம்பி னார்.

டாக்டர் போனபின் தாயாரைப் பார்க்க சென்ற வித்யாதரன் சிவகாமியிடம் வற்புறுத்திக் கேட்டபின் அவர் மெதுவாகக் கூறினார்- ''இது உன் தாத்தா காலத்துத் தொழில் வித்யா. ஆரோ, என்னால் ஆனவரை இன்றளவும் கட்டிக் காத்து விட்டேன். இனி முன்போல் ஓடியாட என்னால் இயலாது. அதனால் இனி... இனி நீ... நீ இங்கே இருந்து பார்த்துக்

கொள்வாயா கண்ணா?''

தாயின் கையைப் பற்றி, ''நிச்சயமாய்ச் செய்வேன்?'' என்று உறுதி கூறினான் மகன்.

சிவகாமியின் அரைக்கண் மூடிய சோர்ந்த பார்வை அனுபமாவிடம் திரும்பியது. ''நீ என்ன சொல்கிறாய்? உனக்கும் சம்மதம்தானே?''

அனுபமா பிரமித்தாள். சற்றும் சம்பந்தம் இல்லாத மூன்றாம் மனுசி அவள். அவளது சம்மதம் எதற்கு?

''இதில் நான் என்னம்மா சொல்ல முடியும்'' என்றாள் அவள் ஆச்சரியத்துடன்.

சிவகாமியின் பாதி மூடிய விழிகள் மேலும் இடுங்கின. ''என் மகனுடைய வருங்கால மனைவி, உன் விருப்பம்தானே முக்கியம்!'' எனவும் அனுபமா திணறிப் போனாள்.

நடிக்க வந்த பாத்திரத்தை மறந்து உளறிவிட்டாளே! யாரும் கண்டு கொண்டிருப்பார்களோ! இப்போது என்ன செய்வது?

அனிச்சைச் செயலாக, ''ஆதிமூலமே!'' என்பது போல வித்யாதரனைப் பார்த்தாள் அனுபமா.

அவனது முகக் கடுப்பிலிருந்து குறைந்தபட்சம் அவன் கண்டு கொண்டான் என்பது புரிந்தது.

தான் செய்த தவறைத்தானே சீர்த்திருத்துகிறவளாகி, அவசரமாக, ''நீங்களே போகச் சொன்னால்கூட இனி நான் இங்கிருந்து நகரப் போவதாக இல்லை அம்மா'' என்றாள் அவள்.

உதட்டால் முறுவலித்த சிவகாமியின் விழிகள் மெல்ல உயர்ந்து அனுபமாவின் முகத்தில் பதிந்தன.

13

வெறும் பார்வைதான். ஆனால் அது அவளது முகத்திரையைக் கிழித்து, உள்ளே புகுந்து துழாவுவது போல உணர்ந்தாள் அனுபமா.

சட்டெனப் பேச்சை மாற்றி, எப்போதும் சிவகாமியுடன் இருக்கும் நர்சை நோக்கி, ''சா... சாப்பாடு பற்றி... அம்மாவுக்கு என்னென்ன கொடுக்கலாம் என்று டாக்டர் சொன்னாரா?'' என்று விசாரித்தாள்.

சிவகாமியை ஒருதரம் பார்த்துவிட்டு, ''காய்ச்சல், வயிற்று வலி என்று எதுவும் இல்லாததால் சாதாரண உணவே சாப்பிடலாம். கொழுப்புச் சத்து இல்லாததாக, உப்பைச் சற்றுக் குறைத்துக் கொடுக்கச் சொன்னார் மேடம்'' என்றாள் நர்சு.

முந்திய நாள் 'சின்னம்மா'வைப் போலவே இந்த 'மேடத்'தி லும் அனுபமாவின் இதயம் ஒருதரம் குலுங்கியது.

இவர்கள் எல்லாருக்கும் அனுபமா இந்த வீட்டின் வருங்கால மகாராணி. சிவகாமி அம்மாள் சற்று முன் சொன்னது போல வருங்கால மருமகள்.

இவர்கள், அவளிடம் காட்டும் மரியாதை, மதிப்பெல்லாம் வேறொருத்திக்கு உரியது என்கிற உண்மை உள்ளூர ஏதோ செய்தது.

கதவைத் திறந்து கொண்டு, கையில் மூடியிட்ட கண்ணாடித் தம்ளருடன் தாயம்மா வந்தாள். ''அம்மாவுக்கு பழச்சாறு'' என்றவள், வழக்கம் போல அதை நர்சிடம் கொடுப்பதா, அல்லது புதிய 'சின்னம்மா'விடம் கொடுப்பதா என்று புரியாத வள் போல இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''அம்மா சாத்துக்குடிச் சாறு குடிக்கிற நேரம்'' என்றாள் நர்சு அசையாமல் நின்றபடி.

''உம்'' என்று சிவகாமியைப் பார்த்தாள் அனுபமா. படுத்துக் கொண்டு எப்படிக் குடிப்பாள் என்று தோன்றவும் குனிந்து, ''நான் தூக்குகிறேன். என் மேல் சாய்ந்து அமர்ந்து குடிக்கிறீர் களா. அம்மா'' என்று கனிவுடன் வினவினாள்.

மீண்டும் அவளை ஏறிட்டுப் பார்த்தார் சிவகாமி. அடுத்து மகனை நோக்கவும், தாயாரின் விருப்பத்தை உணர்ந்து அருகில் வந்தான் வித்யாதரன்.

அவன், குனிந்து தாயாரைத் தூக்க, அவசரமாய் சிவகாமி யின் பின்னே முட்டுக் கொடுத்தார்போல அவரை ஒட்டி அனுபமா அமர, அவள் மேல் சிவகாமி சாய்ந்து கொள்ளவும் தாயம்மாவிடமிருந்து தம்ளரை வாங்கித் தாய்க்குப் புகட்டி னான் மகன்.

சிவகாமி பழச்சாற்றைக் குடித்து முடிக்கவும், தம்ளரைத் தாயம்மாவிடம் கொடுத்துவிட்டு மீண்டும் தாயின் அருகில் வந்து தூக்க முனைந்தான்.

அவனைத் தடுத்தாள் அனுபமா. தன் கைக்குட்டையால் சிவகாமியின் வாயைத் துடைத்துவிட்டு, ''குடித்த உடனே படுத்தால் எருக்களிக்கும். ஓர் ஐந்து நிமிடம் இப்படி இருந்தால் நல்லது'' என்றாள்.

அவன் சந்தேகத்துக்குத் தாயாரைப் பார்க்கவும் அது சரியே என்பது போலத் தலையசைத்தார் அவர்.

அனாவசியமாக எதையாவது எடுப்பதும் வைப்பதுமாக அறையைச் சுற்றி வந்தான் வித்யாதரன்.

சிவகாமி மீண்டும் படுத்துக் கொண்டதும், ''நான் கிளம்புகி றேன். அம்மா. உங்களுக்கு ஏதாவது வாங்கி வரவேண்டுமா?'' என்று கேட்டான்.

அவனிடம், ''ஊகூம்'' என்றவர் அனுபமாவிடம், ''அவன் தொழிற்சாலைக்கு போனபிறகு, நீ இங்கே வந்து கொஞ்ச நேரம் இருக்கிறாயாம்மா?'' என்று கேட்டார்.

''ஓ!'' என்று உடனே தலையாட்டியவளுக்கு அந்தப் பார்வை நினைவு வர உடனே தயக்கம் பிறந்தது. ''வந்து... வந்து... நீங்கள் ஓய்வு எடுக்க வேண்டாமா?'' என்று இழுத்தாள்.

''ஓ... ஓய்வா...? அதுவும் சரிதான். சற்று பொறுத்து... அல்லது மதியம் சாப்பிட்ட பிறகு வாயேன். நீ சாப்பிட வருவாயா, வித்யா?'' என்று மகனிடம் விசாரித்தார் சிவகாமி.

''கிளம்பவே பனிரண்டாகப் போகிறது. இனி எங்கே வருவது? மாலையில்தான் திரும்புவேன். வரட்டுமா, அம்மா'' என்று தாயிடம் விடை பெற்றுக் கொண்ட, அனுபமாவை ஒரு பார்வையால் உத்திரவிட்டு வெளியேறி னான் வித்யாதரன்.

சிவகாமியிடம் லேசாக முறுவலித்துவிட்டு, அவனைப் பின் தொடர்ந்தவளுக்கு உள்ளுரப் புகைந்தது. ''சற்று வருகி றாயா?'' என்று கேட்டால் வாய் முத்து உதிர்ந்து எங்கேனும் போய் விழுந்து விடப் போய்விடுமா? அந்த அளவு நாகரீகம் கூட

அவளிடம் காட்டத் தேவையில்லை என்று எண்ணமா?

அவன் அவளுக்குமேல் கொதித்துப் போயிருந்தான் போலும். அவளது அறைக்கே அவளை அழைத்துச் சென்று கதவைச் சாத்தியவன் படபடவென்று பொழிந்து விட்டான். ''என் காதலியாக நடிக்க ஒப்புக் கொண்டுதானே வந்தாய்? காதலி என்றால் வருங்கால மனைவி என்கிற அளவு யோசிக்கத் தெரியாதா? அம்மா மட்டும் முன்போல நன்றாயி ருந்தால் வினாடியில் கண்டுபிடித்திருப்பார்கள். அவர்களின் நிம்மதிக்காக என்று செலவைப் பாராமல் அழைத்து வந்தால் அவர்கள் முன்னிலையில் என்ன மடத்தனம்?''

செய்தது தப்புதான் என்பதை உணர்ந்திருந்தபடியால் தணிந்து போனாள் அனுபமா. ''சாரி'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

ஆனால் அந்த ஒரு 'சாரி'யில் அவனது சினம் அடங்குவ தாக இல்லை. கூடவே, ஒரு விழி அசைவதில் விஷயத்தைக் கொள்கிற கூர்மையான அறிவை உடைய அன்னை இந்தப் பிழையைக் கண்டு கொள்ளவில்லை என்றால் அது, அவரது புலன்களும் புத்தியும் அடங்கி ஒடுங்கி முடிவை நெருங்குவ தைத் தானே காட்டுகிறது என்கிற தவிப்பும் சேர்ந்துகொள் ளவே அவன் மேலும் கோபமாகப் பேசினான்.

''சாரி'' தளுக்காக ஒருவார்த்தை சொல்லிவிட்டால் செய்த தப்பு இல்லை என்று ஆகிவிடுமா? ஒரு பாத்திரத்தை எற்று நடிப்பது என்றால் அதை உள்ளும் புறமும் ஒன்றிச் செய்ய வேண்டும். இந்த நாடகமே அம்மாவுக்காகத் தான். கடைசி காலத்தில் மனதில் நிம்மதியோடு போக.... கடைசிக்காலத்தி நிம்மதியோடு கழிக்கட்டும் என்பதற்காகத்தான். பணம் எ றால் வாயைப் பிளந்து கொண்டு வரத் தெரிகிறதே. மாறு

ஆயிரம் ரூபாயும், ஒரு இலட்சமும் சும்மா மடியில் வந்து விழும் என்று எண்ணமா?''

மன்னிப்புக் கேட்ட பிறகும் அவன் பேசிய விதத்தில் அவளுக்கும் ஆத்திரம் வந்தது. ''என்னைச் சொல்கிறீர்களே, நீங்கள் மட்டும் என்ன ஒழுங்கு? நேற்று அனுபமா என்று அழைக்கத் தொடங்கவில்லையா?'' என்று திருப்பிக் கேட்டாள்.

ஒரு கணம் திகைத்து விட்டு, ''அ... அப்போது அங்கே வேறு யாரும் இல்லை. நாம் மட்டும்தான்'' என்றபோது அவள் குறுக்கிட்டு ''தாயம்மா இருந்தாள். கொஞ்ச தூரத்தில்தான் என்றாலும் கூர்ந்து கேட்டிருந்தால் கட்டாயம் அவள் காதில் விழுந்துதான் இருக்கும்'' என்றாள் அனுபமா விடாமல்.

''அவள் கவனித்திருக்க மாட்டாள்'' என்றான் அவன் நிச்சயமானமாக. ''அப்படியே கேட்டிருந்தாலும், இரண்டும் இரண்டும் நாலு என்கிற அளவுகூடத் தெரியாத அவளுக்கு எதுவும் புரிந்திராது. ஆனால் என் அம்மா அப்படியா? அத்தோடு நான் உடனே 'அனுராகா' என்று திருத்திவிட்டேன்'' என்றான் அலட்சியமும் விடாமல்.

''நானும்தான் உடனே திருத்திக் கொண்டு விட்டேன்'' என்றாள் அனுபமா பதிலுக்கு. ''திருத்திக் கொண்டேன். அதற்குமேல் உங்களிடம் மன்னிப்புக் கேட்டாயிற்று. அதற்கு மேலும் ஒரு முறை சொல்லிக் கொண்டே போவதைப் பார்த்தால் [illegible], வேறு சந்தேகம் வருகிறது'' என்றாள் வேண்டு [illegible].

'[illegible] சந்தேகம்?''

''[illegible] தொகையைக் கொடுக்காமல் ஏமாற்றப் பொய்க்

காரணம் தேடுகிறீர்களோ என்னவோ?'' என்றாள் அனுபமா துடுக்காக. நியாயமற்ற பேச்சு என்று மனம் இடித்தபோதும் அவனும் அநியாயமாகத்தானே பேசினான் என்று சமாதானப் படுத்திக் கொண்டாள். அதற்குள் ஏய்.... என்று ஆத்திரத்துடன் அவளது தோளை அழுந்தப் பற்றினான் வித்யாதரன்.

கன்றியிருந்த முகமும் கைகளின் அழுத்தமும் அளவு மீறிப் பேசிவிட்டோமா என்று அவளை எண்ண வைத்தன.

இவன் அவளை உலுக்கி எடுக்கப் போகிறானா. அடிக்கப் போகிறானா என்று அவள் அஞ்சிய போது ''சை!'' என்று அவளை விடுவித்தான் வித்யாதரன்.

ஒரு பெரிய மூச்செடுத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். பிறகு நிதானமான குரலில், ''சொன்ன சொல் மாறுகிற வழக்கம் எனக்குக் கிடையாது என்று முன்பே சொன்னேன். அதை நீயும் விரைவிலேயே உணர்ந்து கொள்வாய்'' என்றான் அழுத்தமான குரலில் நிதானமாக.

ஒரு சிறு அமைதியின் பின் அவனே தொடர்ந்தான், ''இனிமேல் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அத்தோடு என் மேல் உள்ள கோபத்தை என் அம்மாவிடம் காட்டிவிட வேண்டாம். அவர்கள்.... அவர்கள் முடிவை நெருங்கிக் கொண்டு இருக்கிறவர்கள். அவர்களிடம் சற்று பிரியமாக... சற்று முன்போலச் சிறு உதவிகள் செய்தால் அதிலேயே மகிழ்ந்து போவார்கள்...''

அதற்குள் அனுபமாவும் தணிந்து போயிருந்தாள்.

அவள் இந்த மாதிரி யாரிடமும் கோபம் காட்டியதில்லையே! இவன் முன்னிலையில் மட்டும் ஏன் கட்டுப்பாடின்றிப் பேசினாள்! அதுவும் அவனது கோபமும் தாபமும்

அவனுடைய நோய்வாய்ப்பட்ட தாயாருக்காக என்கையில் அவள் பொறுத்துப் போக வேண்டாமா?

''சிறு உதவி என்ன? எல்லா வேலைகளையும் நானே செய்வேன்'' என்றாள் அவசரமாக.

அவன் அதை ஏற்கவில்லை. ''அதற்கு நர்ஸ் இருக்கிறாள். நீ ஒத்துக் கொண்ட வேலையை மட்டும் ஒழுங்காகச் செய்தாலே போதும்'' என்று மீண்டும் ஒரு குட்டு குட்டி விட்டு வெளியே சென்று விட்டான்.

அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு சற்று நேரம் அப்படியே நின்றாள்.

வித்யாதரன் எதற்காக அவளிடம் இப்படிக் கடுமை காட்ட வேண்டும்? இப்போது மட்டும் என்று இல்லை; முதல் முதலாக அவளைப் பார்த்ததில் இருந்தே இப்படித் தான் நடந்து கொள்கிறான்; அபூர்வமாக ஏதோ ஓரிரு சமயங்கள் தவிர எப்போதுமே கடுமைதான்.

ஒருவேளை அவளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்கவில்லையோ? கண்டதும் காதல் மாதிரி கண்டதும் வெறுப்பாகி விட்டதோ?

காதலும் வெறுப்பும் ஒரே மாதிரிதான் என்று எங்கோ படித்த நினைவு வந்தது. அப்படித்தான் முதல் பார்வையிலேயே வெறுத்துவிட்டான் போல. ஆனால் வெறுப்பு என்றால் இருமுறை காப்பாற்றி, வேறு போக்கிடம் இல்லை என்று அறிந்ததும் வேலை கொடுத்து, உணவு, உடை, உறைவிடம் எல்லாம் தந்து இங்கே அழைத்து வருவானேன்?

ஓ! சட்டென அவளுக்கு எல்லாம் வெளிச்சமாயிற்று. இங்கே அவளை அழைத்து வருவதற்காகத் தான் காப்பாற்றி,

வேலை கொடுத்தது எல்லாம்.

அவனே அன்று சொல்லவில்லையா? 'தேவை ஓர் அழகான இளம் பெண்' என்று. அப்படி ஒருத்தி கிடைக்கக்கூடிய இடம் என்றுதான் அந்த மட்ட ஓட்டலுக்குச் சென்று தங்கியிருக்கி றான். காசுக்காக எதற்கும் துணிகிறவர்கள் இவ்வளவு பணத் துக்காக இந்த நடிப்பு நடிக்க இலகுவாக வரக்கூடுமல்லவா?

ஆனால் எதற்கும் துணிகிற பெண் இந்த நாடகத்தைப் பயன்படுத்திக் கொண்டு உடும்பாய் பற்றிவிட்டால் என்ன செய்வது என்று பயத்தில் தயங்கிக் கொண்டு இருந்திருப்பான்.

அதே நேரத்தில் அவனுக்கு வசதியாக அவன் அறைக்கே அனுபமா போய்ச் சேர்ந்திருக்கிறாள்.

அவனுக்குத் தேவையான இளம்பெண்; அழகி என்றால்.... பாதையில் செல்வோர் திரும்பிப் பார்க்கிற அழகுதான்; அனாதை; புகலிடம் தேடுகிற நிலையில் இருப்பவள். தப்பு தண்டா செய்கிற இனம் இல்லை. அதற்கு மேல் அவனுக்கு என்ன வேண்டும்?

காப்பாற்றுகிற மாதிரிக் காப்பாற்றி அடுத்து உதவுகிற மாதிரி வேலை தந்து அழைத்து வந்தாயிற்று.

தேவைக்குத் தகுந்தவள் என்பதால் அழைத்து வந்து விட்டவனுக்கு ஆளைப் பிடிக்காததால் கண்களில் விளை கெண்ணை விட்டுக் கொண்டு குற்றம் தேடி கண்டுபிடித்து காய்கிறான்.

இதுபோலக் காரணமற்ற கோபங்களும் நியாயமற்ற குற் சாட்டுகளும் அனுபமாவுக்குப் புதியவை அல்ல. சித்தி வீட்டி தினம் தினம் அனுபவித்தவைதான்.

அனால் அப்போதெல்லாம் தொண்டையில் துடிக்கிற ரோஷம் உதடு தாண்டாமல் அடக்கிக் கொள்வாள். இப்போது அது முடியவில்லை. திருப்பிப் பேசினாள். அதுவும் எப்படி? ஏமாற்றுக்காரன் பொய்யன்... சேச்சே!

சித்தி, சித்தப்பா என்ன கொடுமை செய்தாலும் அந்த நேர வேதனையின் பின், இதற்கெல்லாம் கடவுள் கூலி கொடுப்பார் என்று ஒதுக்கியும் விடுவாள். இங்கே அதுவும் முடியவில்லை. வித்யாதரனுக்குக் கூலி கொடுக்கும் பொறுப்பைக் கடவுளிடம் ஒப்படைக்கும் அளவுக்கு மனம் வரவில்லை.

ஏன் என்பது புரியாத புதிராக நின்றுவிட்டது.

அத்தோடு, வித்யாதரன், அவளுக்காக உதவவில்லை; அவனது கய லாபம் கருதித்தான் அவளுக்கு உதவினான் என்கிற விஷயம் அவளைத் தாக்கிய விதமும் அவளுக்குப் புரியாமல்தான் போயிற்று.

எதிலோ ஏமாந்துவிட்டாற்போல, எதையோ இழந்து விட் டாற் போல அவள் மனம் தவிப்பானேன்?

என்ன இழப்பு?

வித்யாதரனும் அப்படி ஒன்றும் உத்தமன் அல்ல என்பது அவளுக்கு எப்படி இழப்பாகும்?

வித்யாதரனுடைய அன்னையைப் பற்றியும் அனுபமாவுக்கு ஏற்கெனவே தெள்ள தெள்ளத் தெளிவாய் இருந்தது என்று சொல்வதற்கு இல்லைதான். ஆனால் அவர் சம்பந்தப்பட்ட தொடர்புகளை அவளாகவே யோசித்துத் தெளிவு படுத்திக் கொள்ள முடிந்தது.

முதல்நாள் இரவு அவரது கண்களில் காணப்பட்ட பளபளப்புக்கு, அவருடைய வருங்கால மருமகள் அவரைக் காண வென்று கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் கிலோமீட்டர் தூரம் கடந்து பறந்தோடி வந்திருக்கிறாள் என்கிற பூரிப்பே காரணமாக இருக்கலாம். கடைசிக் காலத்தில் ஒரே மகனும் அவனுடைய வருங்கால மனைவியுமாக அவருடைய மிக மிக நெருங்கிய சொந்தங்கள் அருகில் இருப்பதே வாழ்வில் வெற்றி பெற்று விட்ட உணர்வைத் தந்திருக்கலாம்.

அன்றைய முற்பகல் பார்வைக்குக்கூட, அமெரிக்காவிலேயே வளர்ந்த பெண், அவரது வார்த்தைக்கு கட்டுப்பட்டு இங்கேயே இருக்கப்போவதாகச் சொல்கிறாளே, இது மெய்தானா என்கிற சந்தேகம் காரணமாக இருக்கலாம்.

மொத்தத்தில் அவரிடம் அனுபமாவுக்கு நல்லெண்ணம்தான் உண்டாகியிருந்தது.

சிறுவயதிலேயே கணவரை இழக்க நேர்ந்தபோது அதில் ஒடிந்துபோய் விடாமல் தொழிலையும், குடும்பத்தையும் கட்டிக் காத்து வளர்த்த அவரது மன உறுதி அவளது மனதில் மரியாதையை உண்டாக்கியிருந்தது.

அப்படிக் கட்டிக் காத்தவர் ஒரு வாய்தண்ணீருக்கு அடுத்தவர் உதவியை நாடி கிடக்கும் நிலை அவரிடம் அனுதாபத்தையும் ஏற்படுத்தியது.

சுறுசுறுப்பாய் அலைந்து திரிந்தவருக்கு இந்த இயலாமை எவ்வளவு வேதனையாக இருக்கும்!

வித்யாதரன் தரும் ஆயிரம் ரூபாய் அவளைப் பொறுத்தவரையில் ஆள் மாறாட்டம் செய்வதற்குச் சரியாகவே இருக்கலாம். ஆனால் சும்மா உண்டு உறங்குவதை விட தாய்க்குப் பணிவிடை செய்வதன் மூலம் வாங்குகிற சம்பளம்

சரியென்பதோடு அவளுக்கு மன நிம்மதியும் கிட்டக்கூடும்.

சற்றுப் பொறுத்து, மதிய உணவை முடித்துக் கொண்டு வருமாறு சிவகாமி அம்மாள் கூறியது அனுபமாவுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

உணவுக்காக அழைக்கத் தாயம்மா வந்தபோது, வேதனை, குழப்பம் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, அமைதியான தோற்றத்துடன் உணவருந்தவும், அதன் பின் சிவகாமியின் அறைக்குச் செல்லவும் முடிந்தது.

சிவகாமியின் அறைக் கதவைத் தட்டி, அனுமதி பெற்றுக் கொண்டு உள்ளே சென்றபோது வரவேற்பின் அறிகுறியாகவே அவரது வலக்கரம் உயர்ந்தது மனதிற்கு மிகவும் இதமாகவும் இருக்கவே, ஓடிச் சென்று அவரது கையைப் பற்றிக் கொண்டு கட்டிலின் அருகில் கிடந்த குஷன் நாற்காலியில் அமர்ந்தாள்.

அவள் வருவாள் என்று அவளுக்காகப் போடப்பட்டிருந்த மேசையான இருக்கை!

அகமும் முகத்தோடு சேர்ந்து மலர, ''சாப்பிட்டீர்களா, அம்மா?'' என்று வினவினாள் அனுபமா.

''ம்ம்'' என்று சிவகாமி பதிலளித்துக் கொண்டு இருக்கும் போதே, பையிலில் நிழலாடியது.

தாயம்மாங்கம் பணிவுடன் உள்ளே வந்தார். ''அய்யா [illegible] கையெழுத்துக்காகப் பேப்பர் அனுப்பியிருக்கி[illegible] அம்மா கணக்கு தொடங்க வேண்டுமாம்...'' என்று [illegible]யும் காகிதத்தை நீட்டிக் கையெழுத்திட வேண்டிய [illegible]காட்டினார்.

[illegible] பரியாவிட்டாலும் ஏதோ பாங்கில் கணக்கு [illegible] தெரிந்து கையெழுத்திடத் தொடங்கிய

அனுபமா நிறுத்தி உதட்டைக் கடித்தாள். தன் போக்கில் கையெழுத்திடத் தொடங்கிய கை 'அனு'விற்குப் பின் அனுரா காவுக்குரிய 'ர'க்குப் பதிலாக அனுபமாவுக்குரிய 'ப'வை எழுதி விட்டிருந்தது.

அவள் திகைத்து விழிப்பதைக் கண்ட தருமலிங்கம். ''என்னம்மா, ஏதாவது கைதவறித் தப்பாகி விட்டதா? பரவாயில்லை. எதற்கும் இன்னும் இரண்டு 'பார'ங்களும் எடுத்து வந்தேன். இந்தாருங்கள். இதில் கையெழுத்துப் போடுங்கள்'' என்று கூறி இன்னொரு காகிதத்தை அவளிடம் கொடுத்தார்.

கவலை தீர்ந்தவளாய் ஒழுங்காக மூன்று இடங்களிலும் கையெழுத்திட்டுக் கொடுத்த அனுபமா நல்ல வேளையாக வித்யாதரன் இங்கே இல்லை என்று நிம்மதியோடு நினைத் தாள்.

அவன் இருந்திருந்தால் முன்பு வாய்த் தவறுதல், இப்போது கைத் தவறுதலா என்று பாடத் தொடங்கியிருப்பான். அந்தத் தப்புக் காகிதத்தை அவன் அறியாமல் கிழித்தெறிந்துவிட வேண்டும் என்று எண்ணி அதைத் தேடியபோது அந்தக் காகிதம் சிவகாமியின் கையில் இருப்பதை கண்டு அவளது நெஞ்சு ஒருதரம் நின்று பின் வேகமாகத் துடித்தது.

'ப' என்று ஏன் எழுதினாய் என்று கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்?

14

கைத் தவறுதலாக என்று சொல்வதற்கில்லை. நடித்தும் பழக்கமில்லாததால் ஏற்ற பாத்திரமாக மாறிவிடத் தெரியாத மனத் தவறுதலால் தன் உண்மைப் பெயரை எழுதத் தொடங்கி, தவறென்று கழித்த அந்தக் காகிதம் இருக்கும் சுவடே தெரியாமல் அழித்துவிட வேண்டும் என்று நினைத்து அதைத் தேடினாள் அனுபமா.

படுக்கையின் அருகே இருந்த வட்ட வடிவக் கண்ணாடி முக்காலியின் மேல் இருக்கக்கூடும் அல்லது காற்றில் நழுவிக் கீழே விழுந்திருக்கக் கூடும் என்று பார்வையைச் செலுத்தியவ ளுக்கு அந்தத் தாளைச் சிவகாமியின் கையில் காணவும் பேயறைந்தாற் போலாயிற்று. அதையும் அவர் சும்மா வைத்தி ராமல் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருக்கவும் இவளுக்கு மயக்கம் போடாத குறைதான். பெரியவருக்கு சந்தேகம் வந்துவிட்டது.

பெரியவர் என்ன கேட்கப் போகிறாரோ என்று கலங்கி னாள். வேறு என்ன கேட்பார்? நடப்பதுபோல, நீந்துவது போல, சைக்கிள் விடுவதுபோல கண் பார்க்க முடியாத இருளிலும் கூடக் கை தானாகச் சரியாக எழுத வேண்டிய வார்த்தை பாதியில் பிழையானது, எப்படி சாத்தியம் என்று கேட்பார். மேலே ஒருபடி சென்று மெய்யாகவே உன் பெயர் அனுராதானா என்று கேட்கக்கூடுமோ?

வித்யாதரன் சொன்ன அந்த அறிவுக்கூர்மையும் கெட்டிக்கா [illegible]றமும் அவன் தாயாருக்கு அப்படியே இருக்குமானால்,

அனுபமாவின் தலைமுடியைப் பிடித்து உலுக்கி 'யாரடி நீ?' என்று அதட்டக்கூடும். ஊகூம்... சிவகாமி நாகரீகம் அறிந்த வர். படிப்பறிவு அற்ற பாமரப் பெண் போல நிலையிறங்கி நேரடியாகத் கைகால் நீட்ட மாட்டார்.

மாறாக கையில் போனை எடுப்பார். ஒரு சொல் போலீசு வரும். ஆள்மாறாட்டம் செய்தவள் என்று அலட்டிக் கொள்ளா மல் அழகாக ஒப்படைத்துவிடுவார்.

அப்புறம்... ஆள் மாறாட்டத்துக்கு எத்தனை ஆண்டு சிறையில் போடுவார்கள்? வித்யாதரனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படியும் அனுபவிக்கும் போது தெரிந்து விட்டுப் போகிறது.

இமைத் தட்டும் நேரத்தில் ஈரேழ் உலகம் சுற்றிவரக் கூடிய ஆற்றல் படைத்தது மனம். அனுபமாவும் ஏதேதோ எண்ணி, அச்சமும் கலக்கமுமாக முகம் வெளுத்துப் போனாள்.

ஆனால் இவைகளில் எதையும் சிவகாமி செய்தாரில்லை, ஒருவேளை வித்யாதரன் வருத்தத்துடன் உரைத்தது போல அவரது சக்திகள் நோயினால் வெகுவாக மழுங்கிக் போய்த் தான் இருந்தனவோ, என்னவோ; அவள் எண்ணிப் பயந்த எந்தக் கேள்வியும் கேளாமல், அந்த வங்கிக் கணக்கு விண்ணப்பத்தாளை நிதானமாக மடித்து அருகிலிருந்த குப் பைத் தொட்டியில் போட்டார்.

மனதில் யோசித்துக் கொண்டு இருந்ததன் தொடர்ச்சி போல, ''ஒரு சமயத்தில் மூன்று கையெழுத்து வாங்குகிறார் கள். இனி இந்தக் கணக்கின் காலம் முழுவதும் இதே கையெழுத்துதான். இடையில் கையெழுத்து மாறாதா? அதை விட ஆண்டுக்கு ஒருதரம் 'ஸ்பெசிமென்' கையெழுத்து வாங்குவது நல்லது என்று வித்யா சொல்வான்'' என்றார்.

'அப்பாடி...' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு இருக்கை யில் சாய்ந்தாள் அனுபமா.

''உனக்கு என்னம்மா தோன்றுகிறது?'' என்று கேட்டபடி பார்வையை உயர்த்திவர் புருவங்கள் உயர, ''என்னம்மா... இரவு தூக்கம் போதவில்லையா? வேண்டுமானால் போய்ப்ப டுத்து இன்னும் கொஞ்ச நேரம் தூங்கிட்டு அப்புறமாக வாயேன்... வருவாய் அல்லவா?'' என்று கையை நீட்டினார்.

இரவு தூங்காததால் ஓட்டல் அறையில் பகலில் தூங்கும்படி வித்யாதரன் சொன்னது அனுபமாவுக்கு நினைவு வந்தது. அவனாவது ஒரு அமைதியான மன நிலை வேண்டும் என்பதற்காக உறங்கச் சொன்னான். ஆனால் இந்த அள்ளை அவளது சோர்வைக் கவனித்து விட்டல்லவா சொல்கிறார்?

சற்றுமுன் அனுபவித்த சில நிமிடத் தவிப்பில், கிட்டிய வாய்ப்பை விட்டு விடாமல் ஓய்வெடுக்கும் சாக்கில் இப்போ தைக்கு ஓடி ஒளிந்து கொள்ளலாமே என்று தான் அனுபமா வுக்கு முதலில் தோன்றியது.

ஆனால் சிவகாமி அனுபமாவைவிட இருமடங்குக்கும் அதிக வயதானவர். நோயினால் பாதிக்கப்பட்ட, முடிவை எதிர்நோக்கி இருப்பவரும் கூட. ஆனால் இந்த நிலையிலும் அவளது வரவுக்காக இரவு விழித்திருந்தவர். இப்போதும் வந்தினாற்போல அந்தக் கையைப் பார்க்கும்போதே ஒரு துணைக்காக அவர் ஏங்குவது தெரிகிறதே! இவரைத் தனியே ஏங்கவிட்டுவிட்டு அனுபமா சொகுசாக உறங்குவதா?

பாதம் ஆயிரம் ரூபாய் எப்படிச் செரிக்கும்?

கூடவே, பூதம் என்று பயந்து ஒன்றுமில்லை என்று ஆனதால் உண்டான மகிழ்ச்சியும் சேர்ந்து கொள்ள, சிவகாமி நீட்டிய கையைப் பற்றி, ''நான் ஒன்றும் உங்களைத் தனியே விட்டுவிட்டுப் போகப்போவது இல்லை. இங்கேயே

உட்கார்ந்து, உங்களைப் போரடிக்கப்... ஆகா... மறந்தே போனேனே.... நீங்களும் இரவில் சரியாகத் தூங்கவில்லைதா னேம்மா? இப்போது உங்களுக்கு உறக்கம் வந்துவிட்டதா? அதைச் சொல்லாமல், பக்கத்து இலைக்குப் பாயசம் போடச் சொன்ன கதை போல என்னை ஓய்வு எடுக்கச் சொன்னீர்களா! அடேயப்பா! நீங்கள் மகா கெட்டிக்காரர் என்று உங்கள் மகன் கும்மா சொல்லவில்லையம்மா!'' என்று சிரித்தாள் அனுபமா.

பச்சரிசிப் பற்கள் மின்ன அவள் சிரிப்பதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த பெரியவரின் முகத்திலும் மெதுவாக இனநகை அரும்பியது.

''திருமணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்த என் மகன் எப்படி மயங்கினான் என்பது இப்போது நன்றாகப் புரிகிறது'' என்று கூறி சிவகாமி மேலே நகைத்தபோது, அனுபமாவுக்கு முகத்திலிருந்த முறுவலை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

''அனுராகா! உன்னிடம் ஒன்று சொன்னால் தப்பாக எடுத் துக் கொள்ள மாட்டாயே? அமெரிக்காவின் நாகரீகம் வேறுவி தம். அவரவர் விருப்பம்தான் அங்கே முக்கியம். இங்குள்ள மாதிரி சமூகக்கட்டுப்பாடுகளுக்கு அங்கே மதிப்பு கிடையாது. ஆனால் அங்கே மாதிரி இங்கே இருக்க முடியாது. நான் சொல்வது புரிகிறதா இல்லையா? அதனால்தான் வித்யாதரன் அறையிலிருந்து இவ்வளவு தூரமாய் என் அறைப் பக்கமாய் உனக்கு அறை ஏற்பாடு செய்யச் சொன்னேன். அதி உனக்குக் கோபம் இல்லையேம்மா?'' என்று மெல்லிய குரலி வினவினார்.

சிவகாமியின் பேச்சின் பொருள் உடனே புரிந்தது அனுபமாவின் முகம் கன்றிச் சிவந்தது. ரோஷமாக, ''நா ஒன்றும்...'' என்று தொடங்கியவள் சிவகாமியின் குறிப் மறுக்க முடியாது என்பதை உணர்ந்து, வெறுமனே ''இல்ல ற்று தரையைப் பார்த்தபடி முணுமுணுத்தாள்.

சிவகாமியின் பார்வை சின்னவளின் முகத்தில் இருக்க, பற்றியிருந்த கையை ஆறுதலாய் வருடி, ''நீளமான ஒல்லி விரல்கள் உனக்கு. இந்த மாதிரி விரல் அமைப்பு உடையவர் கள் கலைகளில் சிறந்தவராக இருப்பார்கள். உனக்கு என் னென்ன கலைகள் நன்றாகக் கைவரும்?''

அவளது சங்கடத்தை உணர்ந்தோ என்னவோ, சிவகாமி பேச்சை மாற்றுவது அனுபமாவுக்குப் புரிந்தது. ஆனால் இதற்கும்தான் என்ன பதில் சொல்வது?

பளபளவென்று மின்னும் விதமாகப் பாத்திரங்களைத் துலக் கும் கலை என்பதா?, அல்லது இட்டிலி மெத்து மெத்தென்று வரும் விதமாக மாவாட்டுவதில் வல்லவள் என்பதா?

வெறுப்பையும் கசப்பையும் உள்ளே விழுங்கி ''எதிலும் பெரிதாகப் பேர் சொல்ல ஒன்றும் இல்லையம்மா... ஒரு வேளை பெற்றவர்கள் இருந்திருந்தால் எதெது வரும் என்று கண்டுபிடித்து கற்றுத் தந்திருப்பார்களோ என்னவோ? எனக் கும்.... பிறவித் திறமை என்று எதுவும் இருக்கவில்லை என்று நினைக்கிறேன்'' என்று சமாளித்தாள்.

வித்யாதரன் வந்ததும், அவன் என்னதான் முகத்தில் அடித்தாற்போலப் பேசினாலும் பிடிவாதமாக அந்த அனுராகா வைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் யோசித்து, மூளையைக் கசக்கி கற்பனை செய்து கூறுவது மிகவும் கஷ்டம்.

சிவ வினாடிகள், கண்களை இறுக மூடிக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்தார் சிவகாமி.

இவ்வளவு நேரம் பேசிக் கொண்டே இருந்ததால் சோர்ந்து விட்டாரோ என்று அனுபமா கவலையுறும் நேரம் தானாகவே கண்கள் திறந்து, ''பெற்றோர் பற்றி நீ சொன்னது பெருமளவு

சரிதானம்மா. உன் பெற்றோர்..... அவர்களைப் பற்றி நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று மிருதுவான குரலில் இதமாக வினவினார்.

தாய் - தந்தையரைப் பற்றிய பேச்சு இன்னுமும் உள்ளூர வேதனையை உண்டாக்கியபோதும் இது தெரிந்த விஷயம் என்கிற ஆறுதலோடு சொல்லத் தொடங்கினாள் அனுபமா. வித்யாதரன் சொன்னதை அப்படியே நினைவுக்குக் கொணர்ந்து, ''என் அப்பாவும் அம்மாவும் என் சின்ன வயதிலேயே இறந்து போனார்கள் விபத்தில்'' என்று ஒப்புவித்தாள்.

''உன் அப்பா-அம்மாவும் கூட என்றால், வேறு யாருடைய அப்பா-அம்மாவும் கூட எப்படி விபத்தில் இறந்து போனார்கள், அனும்மா?'' என்று அதே மென்மையான குரலிலேயே சிவகாமி கேட்கவும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் அனுபமா.

தனியே நின்று தொழிலைப் பன்மடங்கு பெருக்கினார்கள் என்றால் கம்மா அல்ல; என்ன மாதிரிபிடித்து விட்டார்கள் என்று மனதிலுள் அதிசயித்தாள். ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அனுபமா சிறைக்களி தின்றேதான் தீரப் போகிறாள்.

''அ... அது.... அது வந்து...'' என்று தடுமாறி, ஒருவாறு சுதாரித்து, ''அது, என் சினேகிதியுடைய அம்மாவும் அப்பாவும் வி... விபத்தில் இறந்து போனார்கள். ஆனால் அது பஸ் விபத்து'' என்றாள் குரல் கம்ம.

முன்புறமிருந்து திரும்பிப் பார்த்த தாயாரின் குங்கும முகம் அப்போதும் அப்படியே நினைவு வர நெஞ்சை அடைத்தது.

''அப்புறம்?'' என்று மென்மையாக ஊக்கியது சிவகாமி.

குரல்.

''அப்புறம் சித்தப்பா வீட்டில் வளரும்படி ஆயிற்று.''

''உம்''

''அங்கே சித்தப்பா வீட்டில் எப்போதும் வேலை. வேலை வேலைதான். செய்ய முடியாது என்றால் காலில் சூடு போட்டு...'' உதட்டின் மேல் பற்களால் அழுத்திய வண்ணம் மவுனமானாள் அனுபமா. இந்தத் தன்னிரக்கத்தை அடக்கியாக வேண்டும். முடிந்து போனதை நினைத்து வருந்துவது மூடத்தனம்.... தன்னை அடக்கிக் கொள்ளப் பாடுப்பட்டாள் அவள்.

பிடியில் இருந்த கையை லேசாகத் தட்டிக் கொடுத்தார் சிவகாமி.

அவளுக்குள் இப்படி ஒரு பலவீனம் இருந்தது அனுபமாவுக்கே ஆச்சரியம்தான். ஆனால் கண்ணீர் விடுகிறோம் என்று கண்டு, கட்டுப்படுத்த முயற்சிக்கு முன்பாகவே பொலபொலவென்று கண்ணீர் சொரிந்து விட்டது.

அய்யோ, என்ன இது என்று குழப்பமும் அடுத்தவர் முன் அழுத வெட்கமுமாக அவசரமாகக் கைக்குட்டையைத் தேடினாள். இயல்பாகப் பயன்படுத்தும் வலக்கை சிவகாமியின் பிடியில் இருந்ததால் இடது கையால் அவள் தடுமாறிக் கொண்டு இருந்தபோது, சிவகாமியே தன் மறு கையால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டார்.

என்னவென்று புரியாமல் மனதை உறுத்தத் தொடங்கிய ஏதோ ஒன்று சிவகாமியின் மிருதுவான வெண்ணிறக் கைக்குட்டையை வாங்கி கண்களோடு முகத்தையும் அழுந்தத் துடைத்தபடி இந்த அழுகைக்கு என்ன காரணம் சொல்வது என்று லேசுத்தோடு யோசிக்கையில் மறைந்தது.

என்ன சொல்வது என்று புரியாமல், ''வந்து... என் தோழி'' என்று அவள் தடுமாறியபோது, ''நட்பு என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். அனுபமா அந்தப் பெண்... அந்தச் சித்தப்பா வீடு இருப்பது சென்னையிலா?'' என்று மீண்டும் தலையணையில் சாய்ந்தவாறு வினவினார் சிவகாமி.

''ஆமாம்'' என்று பதிலிறுத்தவள் உடனே யோசித்து, ''அவ்வப்போது எனக்குக் கடிதம் எழுதுவாள். அந்தக் கடிதங்கள் மூலம்தான் எ... எல்லாம் தெரிந்து கொண்டேன்'' என்று சமாளித்தாள் சின்னவள்.

''பாவம்தான். அடுத்தது நீ அந்தத் தோழிக்குக் கடிதம் எழுதும்போது நான் அவளுக்காக மிகவும் வருத்தப்பட்டதாக எழுதம்மா. வேற ஏதாவது உதவி தேவைப்பட்டாலும் எழுதச் சொல்லு. ஒரு வேலையோ, உதவி பணமோ, ஏதோ நம்மால் ஆனதைச் செய்வோம். இப்போது... இந்த சோகம் மறக்கக் கொஞ்சம் நேரம் வீடியோ பார்ப்போமா? அதோ அந்தப் பக்கத்து அலமாரியில் வீடியோ காசட்டுகள் இருக்கும். அதில் 'எஸ் மினிஸ்டர்' என்று இருக்கும்பார். நல்ல நகைச்சுவை காசட்டுகள். ஒன்றை 'டெக்'கில் போட்டு விட்டு என் பக்கத்தில் கட்டிலிலேயே உட்கார்ந்து பார்.''

முதல் முறையாக 'வீடியோ டெக்'கைக் கையாள நேர்ந்த போதும், டெக்கின் பட்டன்களின் மேல் எழுதி இருந்தவற்றைக் கொண்டே அதிகம் தடுமாறாமல் வீடியோவில் படத்தை ஓடவிட்டுவிட்டு சிவகாமியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள் அனுபமாவும்.

குப்பைக் கூடையில் கிடக்கும் அந்தக் காகிதத்தை எப்படியா வது எடுத்து அழித்துவிட வேண்டும் என்று ஒரிருமுறை நினைத்தது தவிர மற்றபடி பொழுது மிகவும் இனிமையாகக் கழிந்தது.

படத்தின் நடிப்பும், வசனமும் இரு பெண்களுக்குமே ஒத்ததாயிருந்த ரசனையுமாக விரைவிலேயே அந்த அறையில் சிரிப்பொலி கேட்கத் தொடங்கியது. கதை வேகத்தில் அனு பமா கவனியாது விட்ட ஒரிரு சிரிப்பு வெடிகளை ஏற்கனவே இதே காசட்டைப் பார்த்து ரசித்திருந்த சிவகாமி விளக்கவும், அந்த இடங்களை மீண்டும் ஓடவிட்டுப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

வெகு நேரம் இதே நிலை நீடித்தது.

மாலை மயங்குகிற நேரத்தில் வித்யாதரனும் வீடு வந்து சேர்ந்தான்.

அவன் வருகையோடு அன்றைய அன்னியோன்யமும், ஆனந்தமும் கூட அடங்கிப் போயின.

ஐந்து மணி ஆனதுமே ''வித்யா ஐந்தரைக்கு வந்து பிடுவான். நீ போய் முகம் கழுவிக் கொஞ்சம் அலங்காரம் செய்து கொண்டு வாம்மா. உடை மாற்றுவதானாலும் மாற்றிக் கொண்டு வா'' என்று அனுப்பினார்.

வித்யாதரனுக்காக ஒப்பனை செய்து கொள்ள அவளுக்கு விருப்பமில்லை. ஆனால் சொல்பவர் சிவகாமி ஆயிற்றே!

வேறு வழியின்றி எழுந்து செல்கையில் ஓரக்கண்ணால் குப்பைக் கூடையை கவனித்தாள். அந்தக் காகிதமும் மேலாகத் தான் கிடந்தது.

தனிமையில் எடுத்துவிடலாம். ஆனால் ஏன் எதற்கு என்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. திரும்பவும் இங்கேதானே வர வேண்டும். அப்போது பார்த்துக் கொள்ள லாம் என்று எண்ணியபடியே சென்றாள் அவள்.

கண்ணாடியைப் பார்த்ததும் குளிக்கலாமே என்று தோன்றியது.

எத்தனை தடவை வியர்த்து விறுவிறுத்திருக்கிறாள்!

உடம்புக்குக் குளித்து உடை மாற்றி, லேசான ஒப்பனையு டன் அவள் சிவகாமி அம்மாளின் அறைக்கு சென்றபோது அங்கே வித்யாதரனும் வந்திருந்தான்.

அவனது கண்களில் கடுமையைக் காணவும் அன்றைய இனிமை துணி கொண்டு துடைத்தாற்போல மறைந்தது அனுபமாவுக்கு.

அத்தோடு அவளது மனம் மேலும் கலங்கும் விதமாக, சிவகாமியின் கட்டிலின் அருகே இருந்த குப்பைக் கூடையும் காலியாக இருந்தது. அவளைக் காட்டிக் கொடுக்கக்கூடிய அந்தக் காகிதம் இல்லாமல்.

15

அலுவல் முடிந்து வந்த வித்யாதரன் முகம் கழுவக் கூட செல்லாமல் நேரே தாயிடம் வந்திருந்தான் போல அவ கைப் பெட்டி கூடக் கண்ணாடி மேசை மேல்தான் கிடந்

அன்னையின் அருகே குனிந்து எதையோ சொல் கொண்டிருந்தபோது அனுபமாதான் முதலில் அவ பார்த்தாள்.

'பாகாய் உருகி' என்பார்கள். அப்படி ஒரு முகபா அவள் வியந்து கொண்டிருக்கையிலேயே, வாயிலில் நி வதை உணர்ந்து யாரென்று பார்த்தவனின் விழிகளில்

மாறிக் கடுமை பரவியது.

அவனது வெறுப்பு பற்றி மதியம் நினைத்தது சரிதான். மற்றபடி இப்போது அவள் என்ன செய்துவிட்டாள் என்று இப்போது முகம் சுருக்க வேண்டும்?

செய்த ஒரு பிசகு நினைவு வர, அது அவனுக்குத் தெரியாமலே போய் விட வேண்டுமே என்று எண்ணியபடி குப்பைக் கூடையைப் பார்த்தவளுக்குப் பகீரென்றது.

கூடை காலியாக இருந்தது.

ஒரு கணம் பதறிய அனுபமா உடனே அமைதியானாள். இங்கே காலை மாலை இரு வேளைகளிலும் குப்பைக் கூடை உட்பட சுத்தம் செய்வார்கள் போலும். குப்பை கொட்டும் இடம் வரை சென்று கிளறி இந்தக் காகிதத்தைக் கண்டெடுக்கப் போகிறானா என்ன?

இனி தருமலிங்கமோ, சிவகாமியோ வித்யாதரனிடம் சொன் னால் தவிர அவளது தவறு வெளிப்பட வழியில்லை. தருமலிங்கம் அனாவசியமாகப் பேசுகிறவராகத் தெரிய வில்லை. சிவகாமியோ சர்வ நிச்சயமாகக் கோள்மூட்டுகிறவர் அல்ல. அதுவும் அவளிடம் அவ்வளவு கனிவு காட்டுகிறவர். அவளுக்கு எதிராக எதையும் சொல்லக் கூடுமா என்ன?

நிம்மதியுற்றவளாக அனுபமா சிவகாமியை நோக்க அவ ளையே பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் முறுவலித்தபடி வரவேற்பாய்க் கையை நீட்ட, நீ எப்படி முகம் திருப்பினாலும் என்ன, மகிழ்ச்சியோடு வரவேற்கவும் ஆளிருக்கிறது தெரி யுமா என்பது போன்ற நிமிர்வுடன் அவர் அருகே சென்று முன் போலவே அவரது கட்டிலிலேயே அமர்ந்து கொண்டாள்.

முன்போலவே அவளது கையைப் பற்றி வருடிய சிவகாமி, மெல்லிய குரலில், "உனக்குத் தெரியுமா, வித்யா? அனுராகாவுக்கும்

என்னைப்போலவே 'எஸ் மினிஸ்டர்' பிடித்திருக்கிறது. அந்த செட், அடுத்து 'எஸ் பிரைம்மினிஸ்டர்' செட் எல்லாம் வரிசையாகப் பார்க்கப் போகிறோமாக்கும்... ஆனால் அனும்மா, இவன் எழுதியதை வைத்து மிகவும் உணர்ச்சிகர மான காதல் கதைதான் உனக்குப் பிடிக்குமோ என்று நினைத்திருந்தேன்'' என்று நிறுத்தினார்.

சற்று மூச்சு வாங்கிக் கொண்டு, ''நல்லவேளையாக உன் ரசனை என்னோடு ஒத்துப் போகிறது'' என்று அவர் முடிக்கவும் அனுபமாவுக்கு ஒழுங்காக மூச்சு வந்தது.

இதையெல்லாம் சொல்லியிருக்க வேண்டாம் என்பது போல வித்யாதரனைப் பார்த்து விட்டு, ''எனக்கு எல்லாமே - எல்லாவகை ரசங்களுமே பிடிக்கும் அம்மா'' என்று சிவகாமி மிடம் கூறிவிட்டு மீண்டும் ஒரு பார்வையை வித்யாதரனிடம் செலுத்தினாள். பார், உன் தவறைக்கூட நான் எப்படிப் பூசி மெழுகி விட்டேன் என்பது போல்.

அவன் அவளது பார்வைகளைச் சற்றும் கவனியாதவன் போல, ''இவ்வளவு நேரம் பேசக்கூடாது அம்மா. மூச்சு வாங்குகிறது. பாருங்கள்'' என்று தாயிடம் கரிசனம் காட்டி னான்.

அனுபமாவிடம் கண்சிமிட்டி முறுவல் செய்தார் சிவகாமி. அதே சிரிப்புடன், ''இந்தச் சேலை நன்றாக இருக்கிறதல்லவா, வித்யா?'' என்று மகனிடமே அபிப்பிராயம் கேட்டார். ''இ எங்கே வாங்கியது?''

''சென்...''

''அமெ...''

வித்யாதரனும் அனுபமாவும் ஒரே நேரத்தில் பதில் சொ வத் தொடங்கி இருவரும் வேறுபடுவதை உட

உணர்ந்து, உடனடியாகப் பேச்சை நிறுத்தினர்.

முகம் மாறாமல், ''பெண்கள் துணி பற்றி உனக்கு என்ன தெரியும்? ஏன் அனும்மா, காலையில் கட்டியிருந்த சேலை கூடச் சென்னையில் வாங்கியது என்றுதானே... நீ சொன் னாய்?'' என்று யோசிப்பது போலக் கேட்டார் பெரியவர்.

அனுபமா திகைத்துத் தயங்க, வித்யாதரன் அனாயாசமாகப் பதில் சொன்னான். ''அவசரத்தில் கிளம்பியதால் அங்கிருந்து சரியாக ஒன்றும் எடுத்து வரவில்லை என்று இங்கே ஓட்டல் காம்ப்ளக்சில் சிலது வாங்கினாளம்மா. எதெது என்பது... இப்போது நீங்கள் சொன்னதுபோல இதில் எனக்கு என்ன தெரியும் சொல்லுங்கள்?'' என்று தோளைக் குலுக்கினான்.

வசதியாகச் சாய்ந்து கொண்டு, ''அப்படித்தான் இருக்கும் என்று நானும் நினைத்தேன்....'' என்ற தாயார், தலையணை யைச் சரி செய்த அனுபமாவின் கைகளில் பார்வையைப் பதிந்து, ''உன் கடிதத்தை வைத்து அனுராகாவின் நகங்களை யும் நீளமாய், குறைந்த பட்சம் 'ஓவல் வடிவத்தில் எதிர் பார்த்தேன் வித்திம்மா இவ்வளவு ஒட்ட வெட்டியிருக்கி றாளே!'' என்று மெலிதாக ஆச்சரியப்பட்டார்.

மறுபடியும் அனுபமாவின் பார்வை வித்யாதரனின் உணர்ச் சியற்ற முகத்தில் பதிந்தது.

அவளது பார்வையை மறுபடியும் கண்டு கொள்ளாமல், நகம் ஒடிந்துவிட்டதம்மா. உங்கள் பெண்களின் 'பேஷ்' நகம் நீளமாய் இன்னொன்று குட்டையாக இருக்கக் கூடாதோ! ஒன்றரை மணி நேரம் உட்கார்ந்திருந்து எல்லா யையும் ஒரே மாதிரித் திருத்தியிருக்கிறாளாக்கும்! இது வேலை என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்; அப்புறம் கண்ணீர் கடலில் நாம் இருவரும் மிதக்க வேண்டியது

தான்'' என்று கூறி சிரித்தான் அவன்.

''பெண்களின் பேஷனா? ஏன், உங்கள் ஆண்களின் நாகரீகத்தில் மட்டும் ஒவ்வொரு நகம் ஒவ்வொரு நீளத்தில் விட்டு வைப்பீர்களாக்கும்?''

''அம்பேல்!'' என்று கைகளை உயர்த்தினான் மகன்.

'என் அம்மா சினேகிதி போல' என்று வித்யாதரன் கூறியது நினைவு வந்தது அனுபமாவுக்கு. பட்டுப் பட்டென்று நன்றாகத் திருப்பிக் கொடுப்பார்கள் போலும். உடம்பு சரியில்லாதபோதும் அவர் பழைய வழக்கத்தில் பேசி விட்டுப் பெருமூச்சு வாங்குவதைப் பார்க்க அவளுக்கே பரிதாபமாக இருக்கையில் அவனைப் பற்றிக் கேட்பானேன்?

உயர்த்திய கைகளை அப்படியே நீட்டிச் சோம்பல் முறித்தான் மகன். ''பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருங்கள், அம்மா. வீடியோ பார்க்கிறேன் என்று கூட உடம்பை அலுப்புப் படுத்திக் கொள்ள வேண்டாம். பக்கத்து அறையில் நர்சு இருப்பாள். கூப்பிடு, அனு. அம்மா நான் அனுவை அழைத்துப் போகிறேன். அவளிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது'' என்று எழுந்தான்.

நர்சை அழைப்பதற்கென அனுபமா செல்லத் தொடங்கிய போது, ''அனுராகா அமெரிக்காவில் வளர்ந்த பெண் என்று நம்பவே முடியாது, வித்யா'' என்று சிவகாமி கூறவு திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள் அவள்.

மேலே செல்லுமாறு அவளிடம் கையைக்காட்டி விட் ''ஏன்? அமெரிக்காவில் வளர்ந்த பெண்களுக்கு எ தனியாக ஏதாவது முத்திரை குத்தியிருக்குமாம்மா?'' எ வேடிக்கையாக தாயிடம் கேட்டான் வித்யாதரன்.

''ச்சு, அதில்லையடா. புத்திமதியாய் ஒரு வார்

சொன்னால் மறுக்காமல் ஒத்துக் கொள்கிறாளே'' என்றார் தாயார்.

''ம்கூம்! அப்படியானால் அமெரிக்காவில் வளர்கிற பெண்கள் சொல் பேச்சு கேட்பதில்லை என்றா சொல்கிறீர்கள்? ரொம்பவும் அநியாயம் அம்மா'' என்று புருவங்களை உயர்த்தினான் வித்யாதரன். ''அப்படி உங்கள் அருமை அனுராகா என்ன புத்திமதியை எழுத்து பிசகாமல் ஏற்றுக் கொண்டாளாம்?''

''அதை அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளேன்.''

அவள் முகம் சிவக்க அந்த விவரம் சொன்னபோது 'ஒரு பிரச்சினை கேள்விக்குறியாகிவிடாமல் தானாக விலகியது' என்று தோளைக் குலுக்கியதற்கு மேல் அவன் அதைப் பெரிதாக மதிக்கவில்லை.

ஆனால் அவனது சினம் வேறு திசையில் குவிந்திருந்தது. ''இதோ பார், முதலில் இப்படி எதற்கெடுத்தாலும் என் முகத்தைப் பார்க்கிற பழக்கத்தை விடு. விடைகளை நான் என் முகத்திலா எழுதி வைத்திருக்கிறேன்? உனக்காகத் தெரிய வேண்டாம்? உனக்கென்று ஒரு மூளையில்லை? கொஞ்சம்.... யோசிக்க முடியாதா? என் முகத்தை... என் முகத்தைப் பார்த்தால் என்னவோ நான் சொல்லிக் கொடுப்பதைத் திருப்பிச் சொல்கிற மாதிரி ஆகிவிடாது? அனுபமா, நீ அனுராகா இல்லை என்பது இங்கே யாருக்கும் தெரியாது. இவர்களின் சின்னச் சின்னக் கேள்விகளில் நம் கடந்த காலத்தை அறிந்கொள்ளும் ஆர்வம் இருக்கிறதே தவிர நீ வேறு பெண்ணோ என்று சந்தேகப்பட்டு அவர்கள் உன்னை சோதிக்கவில்லை. நீயாக, என் அப்பன் குதிருக்குள் இல்லை இது நேற்றியில் எழுதி ஒட்டிக் கொள்ளாத வரையில் ஒன்றும் தெரியாது'' என்றான்.

''நான் ஒன்றும் எதையும் நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அந்த அனுராகா பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரிவிக்காமல் அவளாக நடிக்கச் சொன்னால் நீங்களே அப்படி ஒட்டிவிட்ட மாதிரிதான்'' என்றாள் அனுபமா பதிலுக்கு.

முறைத்துப் பார்த்து விட்டு, ''அவளைப் பற்றி உனக்கு என்ன தெரிந்தாக வேண்டும்'' என்று வினவினான் அவன்.

''எனக்கு என்று ஒன்றுமே தெரிய வேண்டியது இல்லை. தெரிந்து கொள்ளும் ஆசையும் எனக்கு இல்லை. ஆனால் உங்கள் அம்மாவுக்கு இருக்கிறதே. என் கை விரல்களைப் பார்த்துவிட்டு, இப்படி மெலிதாக நீண்ட விரல் இருப்பவர்க ளுக்குக் கலைகளில் லயிப்பு இருக்குமே, உனக்கு என்னென்ன வரும் என்கிறார்கள். எனக்குப் பாட்டுக் கேட்க, கேட்பதைப் பாடிப் பார்க்கப் பிடிக்கும். நாட்டிய போஸ்களில் நின்று பார்க்கப் பிடிக்கும்: காகிதமும் பென்சிலும் கையில் இருந்தால் ஏதாவது இலை பூ என்று வரைந்து பார்க்கப் பிடிக்கும். நேரமும், பணமும் இருந்திருந்தால் கற்றுக்... ச். போகட்டும், உங்கள் அனுராகாவுக்கு இதில் என்னென்ன பிடிக்கும் என்று தெரியாமல் நான் என்ன பதில் சொல்வது? அதுவும் நீங்க அவளைப் பற்றி உங்கள் கடிதங்களில் என்னென்ன புகழ்பா வைத்திருக்கிறீர்கள் என்றும் தெரியாமல்?'' என்று வேகத்து னேயே பேசி முடித்தாள் அவள்.

தொடர்ந்து அவனது சிடுசிடுப்பை எதிர்பார்த்தவள், நேரம் ஏதும் சத்தமில்லாது போகவும் அவன் முக நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு வியப்புடன் அவளது கை விரல்களைப் பார் கொண்டிருந்தான் அவன்.

சட்டென அவள் கைகளைப் பின்னிழுக்கவும், ''

சொன்னது சரிதான் போல இருக்கிறது...'' என்றவன் சற்றுத் திகைத்தாற்போல நிமிர்ந்தான். ''அனுராகாவுக்கு எந்தக் கலை களிலும் விருப்பம் இருந்து நான் பார்த்ததில்லை. விளையாட்டு களிலும்... ஊகூம். பொதுவாக டி.வி. முன் சோபாவில் சுருண்டு படுத்து எதையாவது கொறித்தபடி ஏதாவது கதைத் தொடர், படம் என்று பார்த்துக் கொண்டிருப்பாள்...'' என்றான் யோசனையோடு.

சோம்பேறி என்று உள்ளுக்குள் கடுத்தாள் அனுபமா. ''அப்புறம் அங்கே உங்கள் வீடுபற்றிக் கேட்டார்கள். அங்கே சமையல் எப்படி, 'மைக்ரோவேவ் ஆவன்' இருக்கிறதா... என் சித்தி வீட்டில் 'காஸ்' அடுப்புக் கூடக் கிடையாது. நான் என்னவென்று பதில் சொல்லட்டும்? முதலில் இதெல்லாம் பற்றி அம்மாவுக்கு நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்பதே எனக்குத் தெரியாதே! ஏதோ, தொடர் இருமல் வந்த மாதிரி நடித்து, பேச்சை மாற்றிச் சமாளித்தேன். நீங்களானால் என்னவோ, நான் வேண்டுமென்றே உண்மை யைக் காட்டிக் கொடுப்பதுபோல் பேசுகிறீர்கள். உண்மையில் தேவையான தகவல்கள் தராதது நீங்கள்தான்'' என்று அவ னைக் குற்றவாளியாக்கினாள்.

''என்ன சொல்லவில்லை? நான் வசித்தது 'அப்பார்ட் மெண்ட்'டில் என்று சொல்லியிருக்கிறேன். அதை வைத்து முழுவது சொல்லி சமாளிக்க முடியாதா? ஸ்டார் டி.வி.யில் பார்த்ததை என காட்டுகிறார்கள்?'' என்று திருப்பினான் அவன்.

''ஆகா!'' என்று ஏளனமாகச் சிரித்தாள் அனுபமா. ''கல்லூ சென்று திரும்பியதும் டி.வி. பார்த்துக் கொண்டு என் வீட்டில் சொகுசாகக் காலம் கழித்தேன் என்றா என்றாள் எகத்தாளமாக.

அதோடு அவள் நிறுத்தியிருக்கலாம்.

ஆனால் அவன் முகம் கன்றுவதைக் கண்ட பிறகும் மேலே ''என் சித்தி வீட்டில் நான்...'' என்று தொடங்கவும் அவன் எரிச்சலோடு குறுக்கிட்டான். ''தெரியும். அங்கே நீ ஒய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைத்துக் கொட்டினாய் என்பது ஞாபகம் இருக்கிறது. அதை இப்போது இன்னொருதரம் விவரிக்கத் தேவையில்லை'' என்று அவள் பேச்சை வெட்டி விட்டு, ''நன்றாகக் கேட்டுக் கொள். அம்மா அறிந்தவரையில் என் 'அபார்ட்மென்ட்'டில் ஒரு பெரிய அறை, சோபா, டி.வி., ஒரு புறம் படுப்பதற்கு வசதி; சின்ன சமையல் அறை - காஸ்தான். தீப்பெட்டி தேவையில்லாமல் குமிழைத் திருப்பினால் எரியும்; குளியல் அறை- ஷவர், பாத்டப் வசதி உள்ளது; அங்கேயே உடை மாற்ற முடியும். இவ்வளவுதான். தெரிந்தவர்கள் என்று எங்கும் அவளை அழைத்துச் சென்றது இல்லை. செல்ல அவளுக்கு விருப்பமும் இல்லை. எல்லாம் ஏற்கெனவே தயார் செய்து டின்னில் அடைக்கப்பட்ட உணவுதான். பசிக்கும்போது சூடுபண்ணிச் சாப்பிடுவோம். இதை இனி சமாளித்துக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் நான் உன்னிடம் பேச விரும்பியது வேறு இதோ பார்'' என்று கைப்பெட்டியைத் திறந்தான்.

ஒரு பாங்க் 'பாஸ்' புத்தகத்தையும் செக் புத்தகத்தையும் எடுத்துக் காட்டினான்.

இரண்டையும் அவளிடம் கொடுக்காமலேயே அட்டையில் அவள் பெயர் எழுதி இருப்பதைக் காட்டினான். பிரித்து ஒரு லட்சம் ரூபாய் அந்தக் கணக்கில் போடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிவிட்டு, இரண்டு புத்தகங்களையும் மீண்டும் அவனது பெட்டிக்குள்ளேயே வைத்து மூடினான்.

''நான் சொன்னபடி ஒரு லட்சம் ரூபாய் உன் பெயரில் போட்டுவிட்டேன். இந்தப் பணத்தை உன் கையெழுத்து இல்லாமல் இனி எடுக்க முடியாது. ஆக, நான் [illegible]

மாறுகிறவன் இல்லை என்று நிரூபித்து விட்டேன். ஆனால் உன்னை நான் அப்படி நம்புவதற்கு இதுவரை எந்த முகாந்திரமும் இல்லை. எனவே, இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நீ இடையில் ஓடிவிட மாட்டாய் என்று என்ன நிச்சயம்? அதனால் ஒப்பந்த காலம் முடிகிறவரையில் இவை இரண்டும் என்னிடம் இருக்கட்டும். இன்னும் ஒன்று. 'செக்' புத்தகம் தொலைந்து போயிற்று என்று சொல்லி வேறு புத்தகம் வாங்கிப் பணத்தை எடுத்துவிடலாம் என்று எண்ண வேண்டாம். பாங்கில் இருப்பவர் நான் அறியாமல் இந்தக் கணக்கில் பெரிய தொகை எதுவும் கொடுத்துவிட மாட்டார்'' என்று முடித்தான் அவன்.

அவளைப் பற்றி எவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் அவனுக்கு!

உள்ளே இருந்த வேதனையும் வெறுப்பும் வெறித்த பார்வையில் வெளியாயினவோ?

''ஏன்? ஒரு லட்சம் ரூபாய் கிடைத்த முகமா, இது? இரவு உனவை அம்மா அறைக்கே கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். அங்கே கொஞ்சம் சிரித்த முகமாகவே வா'' என்றான் அதிகாரமாகவே.

நிலையை நிமிர்த்தி, ''இங்கே ஒரு கூடை நிறையத் தணல் வேண்டுமா?'' என்று விசாரித்தாள் அனுபமா.

''என்?''

''நினைவை வாரி உங்கள் தலையில் கொட்டத்தான். அதன் பிறகு நீங்கள் சொல்வது போல முகத்தைச் சிரித்தார் போல வைத்துக் கொள்ள உங்களால் முடிகிறதா என்று பார்க்கத் தனக்கு மேலே பதிலுக்குக் காத்திராமல் திரும்பி, மடமட வென்று சென்று விட்டாள் அவள்.

16

வித்யாதரன் அவளைக் கேவலமாக எடை போட்டதற்குச் சரியான பதில் கொடுத்துவிட்டதாகத் திருப்திப்பட்டுக் கொண்ட போதும் அனுபமாவுக்கு உள்ளூர வதைப்புத்தான்.

ஒன்றும் இல்லாதவளுக்கு, உண்ண உணவும், தங்க நிழலும், அதற்கும் மேலாகப் பிற்கால வாழ்வுக்கு ஒரு பொருளாதார அடிப்படையும் சேர்த்துத் தருகிறவன் என்றாலும் அவனுடைய தாயாருக்காக அவனுக்கும் அவளின் தேவை மிகவும் அவசியம் என்பதை அடிக்கடி நினைவு படுத்திக்கொண்ட போதும், சாதாரணமாக நடந்து கொள்ள அவள் பாடுபட வேண்டியிருந்தது.

தனலை வாரித் தலையில் கொட்டுவேன் என்ற பிறகும் கோபம் கொள்ளாதிருக்க அவன் புலன்களை அடங்கிய முனிவர் அல்ல. சொல்லப்போனால் 'இம்' என்னும் முன் எகிறுகிறவன்தான். இப்போது கோபத்தை எப்படிக் காட்டப் போகிறானோ என்று பயந்து கொண்டேதான் அவள் உணவு இருந்த சிவகாமியின் அறைக்குச் சென்றாள்.

ஆனால் அவள் அஞ்சியதற்கு நேர்மாறாக, அவன் மிகவும் இலகுவாகப் பழகினான்.

சிவகாமியின் தலைப்புறம் தலையணைகள் உயரமாக அடுக்கப்பட்டு அதில் அவர் சாய்ந்திருந்தார்.

சிவகாமியின் கட்டிலை மிகவும் ஒட்டினாற்போல

சின்ன சாப்பாட்டு மேசையும் எதிர் எதிராக இரு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன.

அனுபமாவைக் கண்டதும், அவளுக்காக ஒரு நாற்காலியை இழுத்துவிட்டு அமரச் சொல்லிவிட்டு, தாயின் தலைப்பக்கமிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் வித்யாதரன்.

உணவில் கட்டுப்பாடு அதிகம் கிடையாது என்பதால், சப்பாத்திக்குப் பருப்பு அல்லது காய் கூட்டி தாயின் வாயில் ஒரு வில்லல் கொடுப்பதும் அடுத்துத் தானும் உண்பதுமாக வித்யாதரன் சாப்பிட்டதைப் பார்க்க அனுபமாவின் மனதுக்கு இதமாக இருந்தது. ஏதோ, பெற்றவளிடமாவது இளக்கம் காட்டுகிறானே!

அன்று அலுவலகத்தில் நடந்த 'ஜோக்' ஒன்றைச் சொல்லி மற்றவர்களைச் சிரிக்க வைத்தான்.

''அமெரிக்காவில் டிஸ்னி உலகத்தில் தங்கியபோது பெரிதாக அந்த அறைச்சாவியைப் பார்த்ததும் அனுவுக்கு ஒரே ஆச்சரியம், ''அம்மா'' என்று அமெரிக்காவையும் அவளையும் சேர்த்துப் பேச்சில் நுழைத்தான்.

குறிப்பறிந்து, ''ஆமாம் அம்மா. அந்தச் சாவி ரொம்பப் பெரியதாய் இருந்ததா, இந்தக் குட்டிச் சாவிகளைப் பயன்படுத்திப் பழகிவிட்டு அதைப் பார்த்தபோது ஆச்சரியமாய் போயிற்று'' என்று அவனை ஒட்டிப் பேசினாள் அனுபமா.

''ஆனால் மொத்தத்தில் இவள் சரியான வீட்டுப் பறவை அம்மா. வெளியே போகவே பிடிக்காது. இங்கேயும், வெங்களூர் கோயிலுக்குப் பிடித்து இழுத்துக் கொண்டு போனேன். அவ்வளவுதான்'' என்றவன் உடனே வேறு விஷயத்துக்கு மாறிவிட்டான்.

விவரம் போதும் போலும் என்று எண்ணினாள் அனுபமா.

''ஊகூம். போதுமடா பையா. இதற்கு மேலே சாப்பிட்டால் நீ இருந்த இடம் வெடித்துவிடுமாக்கும்'' என்று வேடிக்கையாக சிவகாமி முடிக்கையில் திடுமென, ''நம் வீட்டில் தனல் இருக்குமா, அம்மா?'' என்று விசாரித்தான் மகன்.

''தனல்? வெள்ளிக் கிழமை வீடு முழுவதும் சாம்பிராணிப் புகை காட்டுவதற்காகத் தனல் போடுவது உண்டு. மற்றபடி சமையலுக்கு 'காஸ்' அடுப்பும், மின் அடுப்பும்தான். ஆனால் தனல் எதற்கு?''

''ம்ம்... வெள்ளிக்கிழமை எவ்வளவு தனல் போடுவார்கள்?

''சாம்பிராணிக் கரண்டி நிறைய.... அதாவது இந்தக் குழம்புக் கரண்டி மாதிரி நாலு கரண்டி அளவு இருக்கும். ஆனால்...''

''போதாதே!'' என்று இடைப்பட்டான் மகன். ''ஒரு கூடை நிறையத் தனல் அல்லவா தேவைப்படுகிறது!''

''ச்சு... எதற்கடா?''

''எனக்கு என்னம்மா தெரியும்? உங்கள் வருங்கால மருமகள்தான் கேட்டாள்'' என்று அவளைக் கைகாட்டிவிட்டு கமுக்கமாகச் சிரித்தான் வித்யாதரன்.

''எதற்கம்மா?'' என்று ஆச்சரியப் பார்வையை அனுபமா டம் திருப்பினார் பெரியவர்.

தனல் பேச்சை வித்யாதரன் எடுத்ததுமே அனுப உஷாராகி விட்டதால், ''தலைக்குக் குளித்ததும் முடி வைப்பதற்காகத்தான், அம்மா. சாம்பிராணி போட்டுக்

வைத்தால் முடி வாசனையாக இருக்குமே என்று...'' இலகுவாகவே அவளால் சமாளிக்க முடிந்தது.

ஆனால் ''பாரேன், இங்கே உள்ளவர்கள் எல்லாம் ஹேர் டிரையரைத் தேடுகிறார்கள். ஆனால் அங்கே இயந்திர உலகத்தில் வளர்ந்த நீ பழைய காலத்து சாம்பிராணி பயன்படுத்துகிறாய்!'' என்று அதற்கும் அந்த அம்மாள் ஆச்சரியப்படவே, ''எப்போதும் இல்லையம்மா, இங்கே வந்த பிறகு ஒரு பத்திரிகையில் இந்தமாதிரித் தலை உலர்த்துவது நல்லது என்று படித்தேனா.. செய்து பார்க்கலாமே என்று நினைத்தேன். அவ்வளவுதான்'' என்று மீண்டும் சமாளிக்க நேர்ந்தது.

உணவு வேளை நல்லபடியாகவே கழிந்தது. மூவருமாக கொஞ்சநேரம் டி.வி. பார்த்தபின், சிவகாமி அம்மாளுக்குத் தூங்குகிறவேளை என்று நர்சு மருந்து மாத்திரைகளுடன் உள்ளே வரவும், வித்யாதரனும் அனுபமாவும் பெரியவருக்கு 'குட்நைட்' சொல்லிக் கிளம்பினர்.

அவளை அவன் நிறுத்திப் பேசியது அவள் எதிர்பார்த்தது தான். ஆனால் அவன் பேச்சில் கோபம் இல்லை. ''அனாவசியமாக உணர்ச்சிவசப்படுவது பெண்களுக்கு இயல்புதான். ஆனால் நாவை அடக்கப் பழகிக் கொள்'' என்று பெரிய மனிதனாய்ப் புத்தி சொன்னான்.

''என்ன அனாவசியம்? என்னை என்னவெல்லாம் சொன்னீர்கள்?'' என்றாள் அனுபமா ஆத்திரமுற்று.

''தப்பாக ஒன்றும் சொல்லவில்லையே. இரண்டே நாள் பழக்கத்தில் உன்னைப் பற்றி எனக்கோ என்னைப்பற்றி உனக்கோ என்ன தெரிய முடியும்? நீ என் மீது சந்தேகப்பட வில்லையா? அது அவசியமற்றது என்று நிரூபித்தேன். நீ [illegible], தவறாக ஏதாவது திட்டம் போட்டால் ஏமாறுவாய் என்று எச்சரித்தேன். உன்னைப் பற்றிச் சரிவர அறிந்திராத

நான் எச்சரிக்கையோடு இருப்பதில் என்ன தப்பு? இதற்காக நீ கோபப்படுவானேன்?''

அவன் பிட்டு வைத்துக் கேட்டபோது அவளுக்குத்தான் ஆத்திரப்பட்டது பிசகோ என்று கூடத் தோன்றிவிட்டது. உடனேயே ஒன்று நினைவு வர, ''காலையில் இதே மாதிரி நான் கேட்டபோது நீங்கள் மட்டும் சினம் காட்டவில்லையா?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''கோபம் வந்தது உண்மைதான். ஆனால் அறியாமல் பேசுகிறாய் என்று அதை நான் உடனே அடக்கிக் கொள்ளவில் லையா? உன் ஐயம் தவறு என்றும் காட்டிவிட்டேன். நீயும் அதேபோல் நடந்து கொள்ள வேண்டியது தானே?''

''எப்படிக் காட்டுவது? நர்சின் வேலையையும் நானே செய்வதாகச் சொன்னாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில் லையே!'' என்று ஞாபகப்படுத்தினாள் அவள்.

''அம்மாவின் உடம்புக்குத் தேவைப்படும் வேலைகளை அதற்கென்று பயிற்சி பெற்ற நர்சைப் போல உன்னால் செய்ய முடியாது. அதற்கு அவசியமும் இல்லை. உன் வேலை அம்மாவின் மனம் மகிழ்ச்சியோடு இருக்கும்படி பார்த்துக் கொள்வதுதான். இதுவரை அதில் நீ ஒரு பிழைகள் செய்ய போதும், அம்மா அதைக் கண்டு கொள்கிற நிலையில் இல்லாததால் பாதகம் ஏதும் நேரவில்லை. ஒரளவு அம்மா சந்தோசமாக இருப்பது போலத்தான் தோன்றுகிறது. ஆனா இனிமேல் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.''

சில நாட்கள் கிட்டத்தட்ட இதேபோலக் கழிந்தன.

நோயாளிகளைப் பற்றி அனுபமாவுக்கு அதிகமாக வம் கிடையாது.

சோம்பேறித்தனம் மிகுந்த தனபாக்கியம் எழுந்தால்

டப்பு, நடத்தால் மூச்சு இழுப்பு என்று முக்கி முனகிக் கொண்டு முடிந்த அளவு படுத்தே கிடப்பாள். வாயைத் திறந்தால் அவளது நோய் பற்றி ஒரு மூச்சு பேசுவாள்.

ஆனால் சிவகாமி தன் நோயைப் பற்றிப் பேசுவதே இல்லை. படுக்கையில் இருந்தார்; உண்மைதான். ஆனால் அப்போதும் கூடத் தலையணைகளை அடுக்கிச் சாய்ந்து உட்காரவே விரும்பினார். முதலில் இரண்டு மூன்று தினங்கள் பிறர் வாயில் அள்ளித் தர உண்டவர், மகனது வற்புறுத்தலையும் மறுத்து, தானே எடுத்து உண்டார்.

அனுபமாவைக் கண்டதும் அவரது முகத்தில் விரிந்த புன்னகை அவளுக்கு அவரிடம் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத் தியது.

எப்போதும் கூடவே இருக்கும் நர்சு அனுபமாவோ, வித்யாதரனோ அறைக்குள் வந்தால் மரியாதையாகப் பக்கத்து அறைக்கு- அவளுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த அறை- அங்கே ஒதுங்கிச் சென்று விடுவாள்.

அதற்காக அனுபமா எப்போதும் அந்த அறையிலேயே இருக்கும்படி விடுவதும் இல்லை.

காலையில் வித்யாதரன் வெளியே சென்றபின் ஓர் ஒரு மணி நேரம், மதிய உணவின் பின் சற்று நேரம், மாலையில் வித்யாதரன் வந்தபின் கிட்டத்தட்ட இரவு உணவு முடியும் நேரம் அனுபமாவின் பொழுது சிவகாமியோடு கழிந்தது.

முதலில் ஓர் ஏழு நாட்கள், இந்த விதமான ஒய்வான ஏற்பாடு அனுபமாவுக்குப் பிடித்தமாகவே இருந்தது. அவசர அவசரமாக அடுப்பு வேலைகளையும், அதைப் பார்த்தபடியே மற்ற வேலைகளையும் அத்தனையும் முடித்த பின், அவளது வேலைகளையும் பார்த்து, இதன் நடுவில் பாடங்களை

யும் படித்து முடித்து, கல்லூரிக்கு ஓடி ஒடிச் சென்றது போக, உட்கார்ந்து உண்பது பெரும் சுகமாகத்தான் இருந்தது.

ஆனால் உழைத்துப் பழகிய உடம்புக்கு இந்த ஓய்வு விரைவிலேயே திகட்டியது. ஆனால் எல்லா வேலைகளையும் செய்வதற்கு வேலையாட்கள் இருக்கவே அவளுக்கு ஒன்றும் செய்யவும் முடியவில்லை.

படுக்கையின் சின்னச் சுருக்கத்தைக்கூட உடனடியாக நீவி இழுத்து சரிப்படுத்துவதையும், பத்திரிகைகளை சின்னக் களை வுகூட இல்லாமல் மடித்து அடுக்கி வைப்பதையும் பார்த்து விட்டு, சிவகாமியே அவளை தோட்டத்தில் சுற்றிப் பார்த்து வருமாறு அனுப்பினார். அங்கங்கே வீட்டில் பூக்குவளைகளில் மலர் அடுக்கும்படி பணித்தார். பத்திரிகைகள் படிக்கச் சொன் னார். அவருக்கு வந்த கடிதங்களைப் படித்துக் காட்டிப் பதில் எழுதச் சொன்னார்.

அவற்றைச் செய்ததோடு, அங்கே கிடைத்த பெண்களி பத்திரிகைகளில் எழுதப்பட்டிருந்த உடல்பயிற்சிகளையு செய்து உடம்பு துருப்பிடித்ததுபோல் ஆகிவிடாமல் காத்தா அனுபமா.

கிட்டத்தட்ட இது போலப் பத்து நாட்கள் கழிந்தபின், நாள் காலையில், வித்யாதரன் தொழிற்சாலைக்குச் சென் விட்ட பிறகு, அனுபமா சிவகாமியின் அறையில் அமர் பேசிக் கொண்டிருந்தபோது திடுமென அவரது மாறியது.

''என்னம்மா?'' என்று எழுந்து கவலையுடன் வந்தாள் அனுபமா.

''வா.... வாந்தி வருகிறமாதிரி இருக்கிறது....'' என்று தடுமாறியபடி கூறினார் சிவகாமி.

பொதுவாக சிவகாமி உணவு உட்கொண்டதும் வ ாய் கொப்பளிப்பதற்காக, ஒரு 'சிட்னி ட்ரே' படுக்கை அடியில் இருக்கும்.

சட்டெனக் குனிந்து அதை எடுத்து அவரது வாயருகே வைத்துப் பிடித்துக் கொண்டு நின்றாள் அனுபமா.

இரண்டு மூன்று முறை ஓங்கரித்தபோதும் வாந்தி வ ில்லை சிவகாமிக்கு. வெறுமனே வாய் கொப்பளித்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தவர் வயிற்றின் மேல் கையால் நீவிவிட் டார்.

'சிட்னி ட்ரே'யை அவசரமாக குளியல் அறையில் கழுவிக் கொணர்ந்து வைத்த அனுபமா, ''திரும்பவும் வயிறு புரட்டுகி றதா அம்மா? இதோ...'' என்று மீண்டும் ட்ரேயை எடுக்க னிந்தாள்.

பயகூம், அது இல்லை... வயிற வலிக்கிற மாதிரி ருக்கிறது. பெட்பான் வைக்க வேண்டும். நர்சைக் கொஞ்சம் ர்த்துகிறாயா?'' என்றார் வலியினால் முகம் சுளித்தபடி.

''இதோ அம்மா'' என்று அவசரமாக வெளியே விரைந்து றாள் அனுபமா.

னுபமா வேகமாக சென்று மறைவதைப் பார்த்துக் ருந்த சிவகாமியின் முகத்தில் ஏமாற்றம் பரவியது. பழும் சுளித்தது.

னாடிகளிலேயே அனுபமா திரும்பிவிட்டாள்.

ஓடிவந்த வேகத்தில் லேசாக மூச்சு வாங்க ''நர்சை அறையில் காணோம்மா. இங்கே அங்கே பக்கத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை. வந்து... வந்து...நானே வைக்கட்டுமா? உங்களுக்கு ஒன்றும் என்னிடம் கூச்சமாக இராதே? இருந்தாலும் எப்படியாவது பொறுத்துக் கொள்ளுங்கள். இதோ 'பெட்பானை' எடுத்து வருகிறேன்...'' என்று குளியல் அறைப் பக்கம் செல்ல முற்பட்டபோது அவளைத் தடுத்து நிறுத்தினாள் சிவகாமி.

''வேண்டாம்மா'' என்றவளின் விழிகளில் நீர் அரும்புவதைக் காணவும் அனுபமா மேலும் பதறினாள்.

''அய்யோ, ரொம்ப வலிக்கிறதா? நானே சும்மா...'' என்றவளை இடைமறித்து, ''வலி போய் விட்டது. நீ கொஞ்ச நேரம் என் அருகிலேயே உட்கார்ந்திரு. போதும் என்' அனுபமாவின் கையை இறுகப் பிடித்தபடி கண்களை மூ கொண்டார் பெரியவர்.

நர்சை வித்யாதரனிடம் காட்டிக் கொடுக்க விருப் இல்லாதபோதும், தன்னளவில் தனியே கூப்பிட்டுப் பேசி அனுபமா.

''வயிற்றில் வலி என்று அவர்கள் தேடுகிற நேரம் இல்லாமல் போய் விட்டீர்களே, நானே 'பெட்பான்' நேன். என்றால் அவர்களுக்குக் கூச்சமாகி விட்டது ஒரேயடியாக மறுத்துவிட்டார்கள். எப்படியும், பாவம் ளுக்குத் துன்பம்தானே. இதை நான் போய் வித்யா சொல்லப்போவது இல்லை. ஆனால் அவர்கள் நேரத்தில் நீங்கள் இல்லை என்று அம்மா, மகனிடம் விட்டால் அவருக்கு ஆத்திரம் வருமில்லையா?

இப்படி நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று குரலில் லேசான கண்டிப்பு தொனிக்க உரைத்தாள்.

''சரிம்மா''. என்று பணிவு காட்டியபோதும், ''ஆனால் இப்போது நானாகப் போகவில்லையம்மா. பெரியம்மாதான் ஒரு காரியமாக என்னை அனுப்பி வைத்தார்கள். நீங்கள் வேணுமானால் கேட்டுப் பாருங்கள்''. என்றாள் நர்சு.

''பின்னே!'' என்று திகைத்துவிட்டு, ''மறந்து போயிருக்கக்கூ(ம். நோயின் பாதிப்பு'' என்று காரணம் கண்டுபிடித்து மனம் (ரங்கினாள், அனுபமா.

சிவகாமியின் பேச்சு இப்போதெல்லாம் அமெரிக்காவை அடியோடு விட்டுவிட்டதை நிம்மதியோடு ஏற்றாள் அனுபமா.

அதற்குப் பதிலாக, அனுபமாவுடைய பெற்றோர் பற்றி அடிக்கடி கேட்டார். தாய்-தந்தையின் தோற்றம், குணம், சகாக்கள் எல்லாம் . பேச்சுவாக்கிலேயே வெளியாக்கப்பட்டன.

''நீ அம்மா ஜாடையா அப்பா ஜாடையா?''

தாயின் தோற்றம் என்று அனுபமா கூறவும், ''அப்படியா ல் உன் அம்மா வயதில் பேரழகி என்று சொல்லு'' என்று அனுபமாவின் கன்னங்கள் சிவப்பதைக்கண்டு ரசித்துச் சிரித்தார்.

நாள் இலக்கியங்களைப் பற்றிய பேச்சு வந்தது.

வித்யாதரனும் வீடு திரும்பிவிட்ட அந்த மாலை நேரம். பொழுதாக இன்றையச் சரக்கெல்லாம் வெறும் குப்பை என்று அபிப்பிராயம் அவன். ''மூன்று புத்தகம் படித்தால் குறைந்தது ஒரே மாதிரி இருக்கிறது. ஒரே கதையைக் 'கார்பன் (பி)த்துப் பெயரை மட்டும் மாற்றிப் பிரசுரித்து

விடுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''புற்றீசல் மாதிரி நூற்றுக்கணக்கில் பத்திரிகைகள். அத்தனையிலும் கதைகள். என்ன செய்வார்கள் பாவம்!'' என்று சிரித்தார் சிவகாமி. ''சொல்லப்போனால் நம் இரு இதிகாசங்களையுமே எடுத்துப் பார். இரண்டிலும் பல சகோதரர்கள். வனவாசம் ஒரு பெண், பெரும்போர், அழிவு... கிட்டத்தட்ட ஒன்று தானே? உன் பெற்றோர் எப்படியம்மா? கதை கட்டுரை என்று ஏதாவது பிடிக்குமா?'' என்று அனுபமாவிடம் விசாரித்தார்.

''உம்... அம்மாவுக்குக் கதைகள் படிக்க மிகவும் விருப்பம்'' என்று உற்சாகத்துடன் விவரிக்கலானாள் அனுபமா. ''சாப்பிடும் போதுகூட எதையாவது படித்துக் கொண்டேதான் சாப்பிடுவார்கள். அதிலும் சரத்சந்திரர் கதைகள் என்றால் பைத்தியம்தான். எனக்குக்கூட சரத்சந்திரரின் கதாநாயகியின் பெயரா? அவரது எந்தக் கதையின் நாயகிக்கு 'அனுராகா' என்று பெயர்?'' என்று சொல்லி அவர் யோசிக்கவும், தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் அனுபமா.

17

பொதுவாக அவளுடைய பெற்றோரைப் பற்றி நினைக்க பேசவும் அனுபமாவுக்குப் பிடிக்கும். காது கொடுத்துக் ஆள் இல்லாத காரணத்தால் இதுவரை உள்ளேயே அ வைத்த நினைவுக் கருவூலங்கள், இப்போது சிவகாமி ஆர்வமான கேள்விகளால் உற்சாகத்துடன் வெளிப்படு

டன. பெற்றோரைப் பற்றிப் பேசும் ஆசையில் சிவகாமி ஒன்று கேட்டால் இவள் இருமடங்கு விவரம் தெரிவித்தாள்.

அப்பா எப்படி என்று கேட்டால், அவரது தோற்றத்தோடு விடாமல் அவர் மடியில் வைத்து உணவூட்டியது வரை விவரிப்பாள்.

இப்போதும் அதே வேகத்தோடு இலக்கியத்தில் தொடங்கியதைத் 'தவளையும் தன் வாயால் கெடும்' என்பது போல, அவளது பெயர் சூட்டல் வரையிலும் கொட்டி மாட்டிக் கொண்டாள்.

சரத்சந்திரரின் எந்தக் கதையின் நாயகி என்றதோடு சிவகாமி நிற்கவில்லை. ''பாரதி, சுமித்திரா, ஷோடசி, கமலா, வந்தனா, அனுபமா... என்று அவர் ஒவ்வொரு பெயராக அடுக்கவும், அனுபமாவுக்கு நெஞ்சுக்கூடே காலியானது போல ஆயிற்று.

என்ன யோசித்தும் இந்த இக்கட்டிலிருந்து மீள ஒரு வழியும் அவளுக்குப் புலப்படாது போகவே, வித்யாதரனின் எச்சரிக்கையும் மீறி அவனை நோக்கிக் கண்களால் கெஞ்சினாள்.

சிலகணங்கள் வேடிக்கை பார்த்தவன், தாயிடம் திரும்பி, நம்ம மாமனார் மாமியாரை ரொம்பவும் காதலித்திருப்பார். போலத், தோன்றுகிறதம்மா'' என்றான்.

''என்ன திடீரென்று இந்த ஆராய்ச்சி... ஐயம் தெளிதல்...?'' அன்பு லேசாகப் புருவங்களை உயர்த்தினார் சிவகாமி.

ஏதும் புரியாமல், 'ஆனால் எப்படியாவது காப்பாற்று' என்பது போல அவனையே நோக்கினாள் அனுபமா.

''அதற்கு அனுபமா என்று சரத்சந்திரரின் கதாநாயகி பெயர் வைக்கத்தான் அனுவுடைய அம்மாவுக்கு ஆசையாம். அதாவது, அவர்களது பரிபூரணக் காதலை தெரிவிக்கும்

விதமான பெயர்தான் வைக்க வேண்டும் என்று இப்படி 'அனுராகா'வாக்கி விட்டாராம். அனுராகம் என்றால் காதல் என்றுதானே அம்மா பொருள்?''

''அப்படித்தான் நடந்ததாம் அம்மா'' என்றாள் அனுபமா கண்களும் முகமும் சிவக்க. ''வெறும் காதல் என்று வைக்க லாம் என்று கூடச் சொன்னாராம். கூப்பிட நன்றாயிராது என்று அம்மா சொன்னதால் 'பிரேமா' என்ற பெயர் யோசித்தாராம். அப்புறம் மனைவியின் ஆசையை ஒரேடியாகக் கெடுக்கவும் மனம் வராமல், அதில் பாதியையும் சேர்த்த மாதிரி, 'அனுரா கா' என்று வைத்துவிட்டார்'' என்று உற்சாகத்துடன் இட்டுக்கட் டலானாள்.

''ம்ம்... அப்படியா? அப்படியாகத்தான் இருக்கும். ஆனால் எனக்கும் பாரம்மா, இந்த அனுபமா என்கிற பெயரில் ஓர் ஆசை. எனக்கென்ன வேறு பெண்ணா இருக்கிறாள், அப்படி அழைத்துப் பார்த்து ஆனந்தப்பட? அதனால் உன்னை இனி 'அனுபமா' என்று அழைக்கட்டுமா?'' என்று அனுமதி கேட்டார் சிவகாமி.

மீண்டும் வித்யாதரனை நோக்கினாள் அனுபமா.

அவன் ஏதே யோசனையோடு தாயாரைப் பார்த்து கொண்டிருக்கவும், இந்தச் சின்ன விஷயத்தில் இவ்வள யோசிக்க என்ன இருக்கிறது என்று எண்ணி அனுபமா வாயெடுக்கையில், ''ஏனம்மா, என்னைப் போல நீங்க அவளை அனு என்று அழைக்கலாமே'' அவர் முகத்தி பார்வையைப் பதித்து வினவினான் வித்யாதரன்.

''அது உன் தனிப்பெயர், கண்ணா. கனவனுக்கு, கன கப் போகிற காதலனுக்கு என்று சில சலுகைகள் உண்டல் அந்தப் பெயரை என் வாயால் கேட்டால்... நல்ல பெ இருப்பதால் ஒருவேளை இந்தத் தங்கம் சகித்துக் கொள்

ஆனால் அந்த உரிமை எடுப்பது நாகரீகம் ஆகாது. அதனால் என்னம்மா, நீ என்ன சொல்கிறாய்?

நல்ல பெண் என்று சொல்லிவிட்டாளே! தங்கமாமே! மனம் குளிர்ந்து, ''உங்கள் விருப்பம்போல அழையுங்கள் அம்மா'' என்று தாராளமாய் அனுமதி கொடுத்தாள் அனுபமா.

''ரொம்பத் தாராளம்!'' என்று சிலாகித்தான் வித்யாதரனும், ''வாய்ப்பை விடாமல் மனம் போனபடியெல்லாம் திட்டித் தீர்த்துவிடுங்கள் அம்மா. கழுதை, நாய், பன்றி, பேய், பிசாசு... ஒன்றையும் விடாதீர்கள்'' என்று தூண்டிவிட்டு நகைத்தான்.

''என்னது?'' என்று அனுபமா நிமிருமுன், ''இந்தத் தங்கத் தைப் போய் அப்படியெல்லாம் சொல்கிறவர்கள் சரியான முட்டாள்கள்'' சிவகாமி அவளுக்குப் பரிந்து பேசவே, தலையைச் சிலுப்பி சிரித்தாள் அனுபமா.

அவனைக் குற்றவாளியாக்கி மட்டம் தட்டுகிற வாய்ப்பை வித்யாதரன் விடமாட்டான் என்பது அனுபமா அறிந்ததுதான். அதிலும் கூர்மையுடன் கவனித்து, கடுகை மலையாக்கி விவாகரத்து வரை கொண்டு போகிறவன் ஆயிற்றே. ஒரு பெரிய ஆலங்கட்டி மழை யையே எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

ஆனால், ''வாயை வைத்துக் கொண்டு சும்மா இருப்பது தானே?'' என்றபோது அவன் குரலில் சிரிப்புதான் இருந்தது.

அவளைப் பார்த்துச் சிரிக்கிறான் என்பதும் பாதிக்க, [illegible] அம்மாவும் சரத்சந்திரர் கதைகளைப் படித்திருப்பார் என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்று பதில் சொன்னாள் அவள்.

''ஆம், என் அம்மாவும் உன் சித்தி மாதிரி ஞானசூன்யம் தான் நினைத்தாய்? அவர்கள் எப்படிப்பட்ட அறிவாளி...'' முடித்தவன் ஏதோ யோசனையாகத் தாடையை

சொறிந்தான். உடனேயே, ''எப்படியும், உலகத்தில் உன் அம்மா மட்டும்தான் சரத்சந்திரரின் கதைகளைப் படித்திருப்பார்கள் என்று நினைத்துப் பேசியது மடத்தனம் இல்லையா?''

''பெரிய மடத்தனம்! உங்கள் அம்மா பற்றி ஏதேதோ சொன்னவர்கள் இதைச் சொல்லாமல் விட்டதற்குப் பெயர் என்னவாம்? என்ன பார்க்கிறீர்கள்?'' 'கண்ணுக்குக் கண் பல்லுக்கு பல்' என்பது போலத் திருப்பியவள் அவனது பார்வையில் குழப்பமுற்று வினவினாள்.

''இல்லை.. இந்த வீராங்கனை அந்த ரகுபதியிடம் மட்டும் எப்படி ஏமாந்து போனாள் என்று யோசித்தேன். காதலா?'' என்றான் விழிகளில் கூர்மையுடன் வித்யாதரன்.

உம்... திரும்பவும் ரகுபதியிடம் வந்து சேர்ந்தாயிற்றா என்று எரிச்சலுடன் எண்ணினாள் அனுபமா. இவி, இருந்திருந்து இப்படி ஒரு மண் குதிரையை நம்பி வீட்டைவிட்டு வெளியேறினாயே, நீ முட்டாள்தான் என்று முடிப்பான்...

வெடுக்கெனத் தலையை நிமிர்த்தி, ''அப்படித்தான் வை[illegible]துக் கொள்ளுங்களேன். உங்களால் மட்டும்தான் குணமறிய[illegible]மல் மயங்கத் தெரியுமா?'' என்று அவனுக்கும் ஒரு [illegible] கொடுத்துவிட்டுத் திரும்பியவள் சட்டென நின்றாள்.

''என்ன?''

''வந்து, நீங்களே கவனத்திருப்பீர்கள் என்று நினைக்கி[illegible] அம்மா முன்னை விடத் திடமாக... உடம்பு நன்றாகி [illegible] போலத் தோன்றவில்லை? நிறைய நேரம் உட்காருகி[illegible] பேசும் போது குரல் அழுத்தமாய் இருக்கிறது... கண்[illegible] தெளிவாய் இருப்பது போல...''

''ச்சு'' என்று சோர்வுடன் தோளைக் குலுக்கினான். ''நானும் கவனித்துவிட்டு டாக்டரிடம் இது பற்றிப் பே[illegible]

அம்மாவின் மனவலிமை என்கிறார் அங்கிள். உள்ளே ஒரு மாறுதலும் இல்லையாம்' என்றான் வருத்தமாக.

அவனது துன்பத்தைத் தனதாக உணர்ந்து, சற்று நேரம் அவளும் பேசாமல் நின்றாள். பிறகு ''டாக்டரை அங்கிள்'' என்கிறீர்களே, அதிக நாள் பழக்கமோ?'' என்று மெதுவான குரலில் விசாரித்தாள்.

''ஆமாம், ரொம்ப காலமாக- அப்பாவின் சினேகிதர் டாக்டர் குணாளன் அப்போதிருந்தே குடும்ப டாக்டர் அவர்தான். ஏதாவது சீரியசான நோய் என்றால் அவரே அதற்குரிய 'ஸ்பெஷலிஸ்டி'டம் அழைத்துப் போய்விடுவார். இப்போது அதனால்தான் வேறு வைத்தியம் பயன்படக்கூடும் என்கிற நிலை தாண்டிவிட்டது என்கிற முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது'' என்றான் வாடிய முகத்துடன்.

ஆறுதலாய் வருடிக் கொடுக்க வேண்டும்போலத் தோன்றிய ஆவலைச்சியை அடக்கிக் கொண்டு, ''கேட்டுப் பார்த்தீர்களா?'' என்று மெல்ல வினவினாள் அவள்.

''...இயற்கையை எந்த வைத்தியமும் வெல்ல முடியாது என்கிறார் அவர். முடிந்த அளவு அம்மா மகிழ்ச்சியோடு இருக்கும்மாறு பார்த்துக் கொள்ளச் சொன்னார். அதனால்தான் சிறுபிழைகளைக்கூட என்னால் சகித்துக் கொள்ள முடிகிறதில்லை, அனு'' என்று மெல்லிய குரலில் அவன் கூறவும் அவளுக்கும் மிகவும் பரிதாபமாகி விட்டது.

இது என்ன மேல்நாடா, துன்பத்தில் தவிப்பவன் என்றாலும் அணைத்து ஆறுதல் சொல்வதற்கு? கண்ணைமிடும்போதே அப்படிச் செய்ய வேண்டும் நிர்ப்பந்தமாகத் தோன்றுவதை உணர்ந்து திகைத்தாள்.

[illegible]றாவது இன்னொன்றாவது? பாவம். அவனே

மிரண்டு போவாள்!

அவரது சோகத்தை குறைக்க எந்த வழியும் தோன்றாமல், சற்றே அவள் அருகே நெருங்கிநின்று, ''வந்து... உங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று எனக்குத் தெரிய வில்லை....'' என்று தயக்கத்துடன் முடித்தான்.

கிரில் வழியே வெளியே வெறித்துக் கொண்டிருந்தவன் மெல்லத் திரும்பிய போது அவன் முகத்தில் லேசான வியப்பு இருந்தது. ''உனக்குத் தெரியுமா, அனு? நீ இப்படி உணர்ந்து பேசும்போது என்னவோ மனதில் இந்தச்சமை குறைந்து லேசாவது போல.... எப்படியோ அம்மாவுக்குக் குணமாகி விடும் போலக் கூடத் தோன்றுகிறது'' என்றான் ஆச்சரியத்து டன்.

முகம் மலர்ந்து, ''கடவுளின் கருணை இருந்தால் நடக்க முடியாதது என்ன இருக்கிறது. அம்மாவுக்குக் குணமானாலும் ஆகிவிடலாம்'' என்று அவள் நம்பிக்கையுடன் கூறியபோது, அவ்வளவாக நம்பிக்கை இல்லாமல்தான் என்றாலும் அவன் முகமும் மலரத் தொடங்கியது.

இங்கு வந்த இந்த இருபது நாட்களில், சிவகாமி சும்ம ஒரு பேச்சுக்கென்று எதையும் சொல்வது இல்லை என் அனுபமா கண்டுகொண்டிருந்தாள்.

எனவே அவர் 'அனுபமா' என்று அவளை விளி எதிர்பாராதது என்று சொல்வதற்கில்லை. அப்படி அழைக்கையில் கொஞ்சம் 'திக்'கென்று இருந்தாலும் யாகவும் உணர்ந்தாள். இது ஏமாற்றுகிற பெயர் அல்

வித்யாதரன் முன்னிலையிலேயே இன்னொரு அழி கொடுத்தார். ''உனக்குக் கார் ஓட்டத் தெரியும் அல் என்ற கேள்வி மூலம்.

இதற்கு என்ன பதில் சொல்வது? அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த ஒருத்திக்குக் கார் ஓட்டத் தெரியாது என்றால் நம்பும்படி இல்லையே!

''அது...'' என்று அவள் தடுமாறிக் கொண்டு இருக்கும் போது, ''அவளுடைய 'கார்டியன்' செய்த தீமைகளில் அதுவும் ஒன்று. கொடுமை தாங்காமல் இவள்பாட்டில் காரை எடுத்துக் கொண்டு ஓடிவிடுவாளோ என்று கார்ப் பக்கமே போகவிடவில்லை'' என்று இலகுவாகச் சொல்லி முடித்துவிட் டான் வித்யாதரன்.

ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தவள், சிவகாமி அவள் பக்கம் திரும்புவது தெரியவும் சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். ''ஆமாம் அம்மா'' என்று ஒத்து ஊதினாள்.

''ச்சு... அப்படியா பாவம்!'' என்று கூடப் பாடிவிட்டு, ''ஆனால் அப்படியே இருக்க முடியாதில்லையா? என்றைக்கா வது காரை எடுக்க வேண்டி வந்தால் அப்போது கையைப் பிசைந்து கொண்டு நிற்கக்கூடாது பார். அதனால் அனுபமாவுக் குக் கார் ஓட்டக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய், வித்யா'' என்று உத்திரவிட்டார் சிவகாமி.

பார்வையில் கேள்விக்குறி இருந்தபோதும், தாயின் கோரிக்கையை உடனே நிறைவேற்றுவதாக ஒத்துக் கொண்டான் மகன்.

அதிலும் அவசரப்பட்டார் சிவகாமி. டிரைவிங் ஸ்கூல் பொறுப்பாளரை வீட்டுக்கே வரவழைத்து நாள் முழுவதுமாகக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

கற்றுக் கொள்ள இன்னும் ஒன்று என்று அனுபமாவும் ஆர்வத்துடன் பயின்றாள்.

அருகில் அமர்ந்து, அவளை ஒட்டச் செய்து பார்த்து, நன்றாகவே ஒட்டுகிறாள் என்று வித்யாதரனும் அத்தாட்சி வழங்கினான்.

அதன் பின் வீட்டில் ஒரு சின்ன டால்பின் கார் சின்னம்மாவு டையது என்கிற பெயரில் ஷெட்டில் நிற்க, அதன் சாவி அனுபமாவின் கைப்பையில் குடிபுகுந்தது.

அந்த அனுராகா அவளது மடத்தனத்தினால் என்னவெல் லாம் இழந்துவிட்டாள் என்று நினைத்தாள் அனுபமா. இதெல் லாம் இரவல் சுகங்கள். இடையில் வந்தது போலவே ஒரு நாள் இடையில் போய்விடும் என்பதை மறவாமல் மனதில் இருத்தினாள்.

ஓர் அரசாங்க விடுமுறை— ஈத் பெருநாளுக்கு முந்திய நாள். மாலை வேளை. அப்போதுதான் தொழிற்சாலையிலி ருந்து திரும்பி வந்திருந்த வித்யாதரனுக்கு, தாயம்மா கொணர்ந்து வைத்த டீயை கப்பில் ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் அனுபமா.

''ஜாக்கிரதை. உனக்குப் போடுவது போலச் சர்க்கரை போட்டுவிடாதே. நீ உன் கையால் ஊற்றித் தருகிற சீனியே போதும்'' அவன் கேலிபோல நினைவுறுத்திக் கொண்டிரு போது, அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வந்தா தருமலிங்கம்.

வித்யாதரன் வித்தியாசம் பாராமல், ''டீ குடிக்கிறீர அங்கிள்?'' என்று கேட்டு உட்காரச் சொன்னபோதும் இரண்டையும் பணிவோடு மறுத்துவிட்டு, கையோடு வந்திருந்த தோல் பையிலிருந்து நோட்டுக் கட்டுகளை கண்ணாடி மேசைமேல் வைத்தார்.

''கோயமுத்தூர் கிளைப்பணம் அம்மா. உங்கள்

உள்ளது. மொத்தம் ஐந்து இலட்சம் இருக்கிறது. பாங்கில் போட லேட்டாகி விட்டதால் உங்களிடம் இங்கே கொண்டு வந்தேன். எண்ணிப் பார்த்துவிட்டு எனக்கு உத்திரவு தாருங் கள்'' என்றார்.

ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டுகளாகப் பத்து கட்டுகள்! எவ்வளவு பணம் என்று ஆச்சரியமாகப் பார்த்தாள் அனுபமா.

சிவகாமியின் உத்திரவுப்படி வித்யாதரன் அதை எண்ணி வைக்கவும் அவர் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

இவ்வளவு பழகியவர்; தாத்தா காலத்து மனிதர், உட்காரக் கூட மறுத்துப் பணிவுகாட்டி நிற்பது என்றால் ஒரு மாதிரி இருக்கிறதம்மா. இந்தப் பணத்தை எங்கே வைக்கட்டும்?'' என்று வினவினான் வித்யாதரன்.

''அதை அனுபமாவிடம் கொடுத்து வைத்து நாளனன்று வாங்கி என் கணக்கில் கட்டிவிடு''

ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அடக்கிக் கொண்டு, பணத்தை மறுபடியும் தோல்பையில் இட்டு, அனுபமாவிடம் தந்தான்.

ஆகையினாலே, ''ஊகூம்... இவ்வளவு பணத்தை நான் எப்படி எங்கே வைத்துப் பாதுகாப்பது. வேண்டாம்'' என்று மறுத்துக் கொண்டிருந்தவள் இவன் பையை நீட்டவும் இரண்டெட்டு பின்னடைந்தாள்.

''ஏன்? உனக்கென்று ஓர் அறை இருக்கிறது; அறையில் அலமாரி இருக்கிறது. அலமாரி, அறை இரண்டையும் பூட்டி சாவி இருக்கிறது. அப்படியிருக்க இதைப் பத்திரமாக நாம வைத்திருக்க முடியாது என்றால் எப்படி? நீதான் பணத்தை வைத்திருந்து, நாளனன்று வித்யா தொழிற்சா கிளம்பும்போது அவனிடம் கொடுக்க வேண்டும்''

என்றார் சிவகாமி குரலில் அழுத்தத்துடன்.

''அன்னையின் ஆணை! இதற்குமேல் ஒரு வினாடி கூட இந்தப் பணத்தை நான் வைத்திருக்க மாட்டேன், தாயே'' என்று அனுபமாவின் கையில் பையைத் திணித்துவிட்டு நகர்ந்து கொண்டான் வித்யாதரன்.

ஐந்து இலட்சம் ரூபாய்! தினமும் இரண்டு நிறுத்தம். மூன்று நிறுத்தம் வேகு வேகு என்று மாதக் கணக்கில் நடந்து, பஸ் காசில் மிச்சம் பிடித்து இருபத்தைந்து ரூபாய் சேமித்தவளுக்கு இந்தப் பணம் இமயமலையாய் மருட்டியது.

இது ஏதோ வகையில் தொலைந்து விட்டதென்றால் அதன் பின் சிவகாமியின் எதிரே அவளால் நிமிர்ந்து நிற்க முடியுமா?

சட்டென்று ஏதோ பொறி தட்டியது. இதற்கு ஒரு காரணம் இருக்கிறது!

18

மகன் அருகில் இருந்தபோதும் இப்படி ஒரு பெரும்[தொ]யைச் சிவகாமி அவளிடம் கொடுத்து வைப்பது [ஏ]அவளிடம்தான் கொடுத்து வைக்க வேண்டும் என்று [நி]மாகக் கொடுப்பது என்றால் அதற்கு நிச்சயமாக ஒரு [கா]இருக்க வேண்டும் என்று ஊகித்தாள் அனுபமா.

இது ஏதோ ஒருவகையில் அவளுக்கு [வை]

பரீட்சை.

பெரிய இடம், பெரிய தொழில், பெருமளவுபணம். எல்லாம் கட்டிக்காத்து வளர்க்கவும் செய்தவர் சிவகாமி. அவரது இடத்துக்கு வரப்போகிற பெண் என்று அவளை எண்ணி, இந்த ஐந்து லட்சத்தைப் பத்திரமாகப் பாதுகாக்கத் தெரிகிறதா என்று பரீட்சை பார்க்கிறார் என்று எண்ணினாள் அனுபமா. அடுத்த தலைமுறையும் நன்றாக இருக்க வேண்டும் என்று அக்கறை!

பாவம், எல்லாம் வீண் என்று உள்ளூர இரங்கினாள். தனால் தன்னுடைய அடுத்த தலைமுறை பற்றி இவ்வளவு தங்கப்படும் இந்த அன்னைக்கு ஆறுதலாக அனுபமாவால் செய்ய முடியும். அவர் உயிர் வாழும் காலம் தும்- அது இன்னமும் சொற்ப காலமே என்பதை கையில் அவர் மீது பற்றும் பாசமும் கொள்ளத் ங்கிவிட்ட அவள் மனம் மிகவும் வேதனைப் பட்டபோ ந்தக் காலம் முழுமையும் அவர் நிம்மதியோடு வாழ செய்ய அவளால் முடியும். அவர் எந்த மாதிரிப் பரீட்சை தும் அத்தனையிலும் வெற்றி பெற்று, மகன் தகுந்த மாகவே இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு பார்த்துக் கொள்ள வேண்டும்.

கொள்வது எளிதாக இருந்தபோதும் அதை நடத்திக் அனுபமா படாதபாடு பட்டுப் போனாள். எல்லாம் உருவாக்கிக் கொண்ட துன்பங்கள்தான்.

ந்தப் பணத்தை அவள் அறியாமல் எடுக்க ம் என்று எதிர் பார்த்ததால், அதை மறைத்து யில் இறங்கினாள்.

சேலைகளுக்கு இடையே மறைத்து வைக்க

எண்ணி அலமாரியைத் திறந்தவளுக்கு எரிச்சல்தான் வந்தது. ஏனெனில் எல்லாச் சேலைகளும் பொருத்தமான சட்டைகளு டன் 'ஹாங்கர்'களில் தொங்கிக் கொண்டிருந்தன.

டிரஸ்சிங் டேபிள் அடியில் ஒரு பெரிய டிராயரில் இருந்த உள்ளாடைகளுக்கு இடையே ஒளித்து வைத்தாள். எப்போதும் அதன் கதவிலேயே தொங்கும் சாவியை எடுத்துக் கைப்பை யுள் பத்திரப்படுத்தினாள்.

அலமாரியை அடுத்து இந்தப் பணத்துக்காகத் தேடக் கூடிய இடம் இதுதான் என்று தோன்றவும் மனம் சோர்ந்தாள்.

சரி, இதை விட்டால் வேறு வழியில்லை என்று முடித்தவ ளுக்கு வேறு ஒன்று தோன்றியது.

உடனே அறையைப் பூட்டிக் கொண்டு வித்யாதரனிடம் ஓடினாள்.

அப்போது அவன் படுத்திருப்பான் போலும். குரலை கேட்டதும், விழுந்தடித்துக் கொண்டு, ஒரு கையில் பற்றி இரவு உடையோடு ஓடி வந்து கதவைத் திறந்து, ''அம்மாவு என்ன?'' என்று பதறினான்.

சற்றுத் திகைத்து, ''அம்மாவுக்கா? அவர்களுக்கு ஒன்று லையே, ஏன்?'' என்று அனுபமா கேட்கவும், அப்பாடி ஒழுங்காக மூச்சுவிட்டு, ''இந்த நேரத்தில் இங்கே வரா வந்து அழைக்கவும் கொஞ்சம் பயந்துபோனேன்'' எ கையிலிருந்த இரவு உடையை அணியலானான், வித்யா

கையை இரவு கவுனில் நுழைத்தபடியே ''என்ன வி என்று விசாரித்தான்.

ஆனால் அதற்குள் அவள் அவனது தோற்றத்தில் போயிருந்தாள். இவன் இப்படி வெறும் ஜட்டியில் தூ

என்று யாருக்குத் தெரியும் என்று உள்ளே முணுமுணுத்தபடி திரும்பி நின்றாள்.

அவனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும்.'' இப்போது தைரியமாகத் திரும்பிப் பாக்கலாம்'' என்று கூறி அவன் சிரிக்கவும் அவளுக்கு மேலும் முகம் சிவந்தது.

அவள் ஒருவாறு திரும்பியதும், ''ம்.... சொல்லு... என்ன விஷயம்?'' எனறு மீண்டும் வினவினாள்.

''வந்து... என் அறைக்கு இன்னொரு செட் சாவி இருக்கும் அல்லவா? அது எங்கே இருக்கிறது? அதையும் என்னிடம் தரமுடியுமா?'' என்று வந்த விஷயத்தைச் சொன்னாள் அவள்.

''ஏன்?''

''வந்து... அதை யாராவது எடுத்து வந்து, என் அறைக் கதவைத் திறந்து அந்தப் பணத்தைத் திருடி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது'' என்று அவள் விவரிக்கவும் அவனுக்கு மேலும் சிரிப்பு வந்தது.

அவள் முகத்தில் சினம் துளிர்க்கவும், ''உன் அச்சம் அபரியமற்றது, அனு'' என்றான் அவன் சமாதானமாக. ''இந்த வீட்டின் இரண்டாவது சாவிகள் அத்தனையும் தொழிற்சாலை லாக்கரில் பத்திரமாக இருக்கின்றன. அந்த 'சேபை' திறக்க கூடியவன் நான் மட்டும்தான். அத்தோடு இந்த வீட்டுப் பணியாட்களில் யாரும் திருடக்கூடியவர்கள் அல்ல. அத்தனை பேரும் அம்மாவால் வடிகட்டப்பட்டவர்கள். அதனால் அந்தப் பணம் மற்றவர்களால் திருடப்பட்டுவிடுமோ என்ற பயம் உனக்கு வேண்டாம்'' என்றான் அவன்.

''பின்னே? வந்து...'' என்று இழுத்தவளை வித்யாதரன் கண்டித்தான். ''எத்தனை 'வந்து'க்கள் நீ என்னை வித்யாதர் என்று அழைத்துப் பேசவேண்டிய சமயங்களில் எல்லாம்

'வந்து'வைப் பயன்படுத்துகிறாய் என்று நினைக்கிறேன். நான் கவனித்ததை அம்மா கண்டு கொள்ள எவ்வளவு நேரமாகும்? 'வித்யாதர்' என்பது சொல்லுவதற்கு அவ்வளவு கஷ்டமான வார்த்தையா?''

உதட்டைக் கடித்துக் கொண்டு சில கணங்கள் பேசாதிருந்தாள் அனுபமா. வார்த்தை ஒன்றும் கஷ்டமானதல்ல; கரடுமுரடும் அல்ல. சொல்லப்போனால் எவ்வளவு அழகும் கம்பீரமான பெயர் என்று அவள் எத்தனையோ முறை நினைத்திருக்கிறாள். ஆனால் அந்தப் பெயர் சொல்லி அவனை அழைக்க அவள் விரும்பியபோதும் ஏதோ.. ஏதோ... ஒரு.... என்னவோ ஒன்று அவளை அப்படிச் செய்ய முடியாமல் தடுத்துக் கொண்டே இருந்தது.

''வந்.... இல்லை. அதாவது எங்கள் வீட்டில் வயதில் பெரியவர்களைப் பெயர் சொல்லி அழைப்பது இல்லை'' என்று சமாளிக்க முயன்றாள்.

''இது உன் வீடு இல்லை'' என்றான் அவன் சுருக்கமாக.

''எப்படியும் சம்பளம் கொடுக்கும் முதலாளி எப்படிப்
பெயர் சொல்லிக் கூப்பிடுவது?''

''சம்பளம் கொடுப்பதே அப்படி அழைத்துப் பழகத்தா
'' என்று மடக்கினான் அவன்.

''இப்போது என்ன உங்கள் பெயர் சொல்ல வேண்
அவ்வளவுதானே. வி... வித்யாதரன் வித்யாதரன், வித்
ரன். போதுமா?''

''தாராளமாக. ஆனால் இப்படி நீட்டி முழக்கி, என் பெ
ஏலம் போடத்தேவையில்லை. அம்மா மாதிரி
வித்யாதர் என்றோ தேவைப்படும்போது ஒரோருதரம்
தால் போதும்'' என்று முறுவலித்தான் வித்யாதரன்.

கூடவே, ''நீ ஏதோ சொல்ல வந்தாயே, அனு?'' என்று நினைவூட்டினான்.

உம்... ஒன்றுமில்லாததற்கெல்லாம் ஆளைப் போட்டு உலுக்கினால் முக்கியமான விஷயம் மறந்துகூடப் போய்விடுகிறது என்று எண்ணியபடி, ''இந்தப் பணத்தை என்னிடம் தந்ததே, இதைப் பாதுகாக்கத் தெரிகிறதா என்று உங்கள் அம்மா எனக்கு வைத்திருக்கும் சோதனை என்று நினைத்தேன்.... வித்யாதர்'' என்று ஒருவாறு சொல்லி முடித்தாள் அவள்.

''அது அப்படியல்ல...'' என்று தொடங்கியவன், லேசாகத் தோளைக் குலுக்கி, ''அம்மாவின் மனதை அறிவது அவ்வளவு எளிதல்ல, அனு. நீ... நீ கவனத்துடன் இரு. அவ்வளவுதான். வீணாகக் கவலைப்பட வேண்டாம்: திருட்டுப் பயமும் அவசியமில்லை'' என்று திடம் சொல்லி அவளை அனுப்பி வைத்தான்.

ஆனால் அவன் என்னதான் சொன்னபோதும், அனுபமா அன்றிரவு அரை குறையாகத்தான் தூங்கினாள்.

மறுநாள் காலையில் அறையைப் பெருக்கித் துடைக்க வேண்டாம் என்று பணியாளைத் திருப்பி அனுப்பிவிட்டு அழுக்குத் துணிகளை அவளே வெளியே கொண்டு போய்க் கொடுத்தாள்.

அறையைப் பூட்டிக் கொண்டு போய் வழக்கமான நேரத்தில் டாக்டரிடம் சென்றாள்.

ஆனால், அங்கே, அன்று பகல் முழுவதும் டாக்டர் தனது ஏதோ சோதனைக்கு ஏற்பாடு செய்திருப்பதால், மாலைத் தினத்தை அவளது விருப்பம் போலக் கழிக்குமாறு அனுப்பினார், சிவகாமி. ''ஒவ்வொன்றாக எல்லாச் சோதனைகளும் செய்து முடிக்க மாலைப் பொழுதாகிவிடு

மாம். நீ வேண்டுமானால் காரை எடுத்துக் கொண்டு எங்கேனும் திருப்பரங்குன்றம், அழகர்மலை என்று எங்கேனும் சுற்றிவிட்டு வாயேன். வைகை அணைக்கட்டுக்குக் கூடபோய்ப் பார்க்கலாம். அழகாக இருக்கும். மதிய உணவுக்கு ஏதாவது கட்டித் தரச்சொல்லி எடுத்துக் கொண்டு போனாயானால் நாள் முழுவதும் விருப்பம் போலச் சுற்றிவிட்டு வரலாம். ஏனெனில் நாள் முழுவதும் என்னையும் பார்க்க முடியாது; வித்யாவும் இருக்க மாட்டான்...'' என்று எங்கோ பார்த்தபடி அவர் கூறவும் அனுபமா உஷாரானாள்.

பணத்தை வைத்துவிட்டு வெளியே சுற்றத் தூண்டுகிறார். இவள் வெளியே சுற்றுகிறவேளையில் பணம் போய்விடும். சாவி இல்லாமல் பூட்டைத் திறப்பது ஒரு கடினமா என்ன? இந்த ஒரு மாதத்தில் எத்தனை வீடியோ, ஸ்டார் டி.வி. படங்கள் பார்த்தாயிற்று?

அப்போதுதான் பொரித்து வெளிவந்த குஞ்சுகளை கோழி அடைகாப்பது போல அறைக்குள்ளேயே அடைந்து கிடந்து அந்தப் பணப்பையை அடைகாத்தாள் அனுபமா. மதிய உணவைக் கூட அறைக்கே தருவித்து உண்டாள்.

தாய்க்குச் செய்யப்படும் சோதனைகளின் முடிவை அறிவ[தற்]காகவோ என்னவோ, வழக்கத்தை விட வித்யாதரன் விரை[வாக]வே வீடு திரும்பியிருந்தான்.

அவளது அறைக்கதவைத் தட்டியதும், மெல்லத் [திற]ந்து பார்த்த அனுபமாவுக்கு அவனைக் கண்டதும் பளிச்செ[ன]ு மலர்ந்தது. ''என்ன இவ்வளவு சீக்கிரம்...'' என்று தொ[ட]ர்ந்தவள், சட்டென நினைவு வர, ''அம்மாவுக்கு சோதனை எல்லாம் முடிந்தாயிற்றா? டாக்டர் என்ன சொல்லுகிறார்?'' என்று விசாரித்தாள்.

''நான் இன்னமும் கேட்கவில்லை. வந்ததும் [இங்]கே

வந்தேன்'' என்று அவன் கூறியபோது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''வா... நாம் இருவருமாகப் போய்ப் பார்க்கலாம்'' என்று அவன் அழைக்கவும், ஒப்பி வெளியே வந்தவள் கதவைச் சாவி கொண்டு பூட்டவும் அவன் சிரித்தான். ''நான்தான் அவசியம் இல்லை என்றேனே'' என்றான் ஓர் இலகுப் புன்னகையோடு.

அனுபமாவின் அறைக்கு சிவகாமியின் அறை வெகு சமீபம்தான்.

மெல்ல நடக்கையில், இடையில் நின்று, ''எனக்குப் பயமா இருக்கிறது'' என்றாள் அனுபமா.

''என்ன பயம்?''

''அம்மாவுக்கு ஏதாவது... அவர்கள் உடம்பு முன்னைவிட மோசமாகி இருக்குமோ என்று அதுதான் பயமாக இருக்கிறது'' என்றாள் அவள்.

''மோசமாகி இராது'' என்றான் அவன் ஒரு நிச்சயத்துடன்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்? டாக்டரிடம் கேட்க வில்லையே என்கிறீர்களே!'' என்று அவள் வியப்புடன் வினவி னாள்.

அவனது முகம் தயங்கிவிட்டு, ''நீ இன்னமும் என் பெயரைச் சொல்லுவதைத் தவிர்க்கிறாய் என்று நினைக்கிறேன்'' என்றான் சற்றே கடும் குரலில் அவன்.

அவளை மறுப்பதாய்த் தலையசைக்கவும், ''பின்னே 'எப்படித் தெரியும்' என்று மொட்டையாகவா முடிப்பார்கள்? 'எப்படித் தெரியும் வித்யாதர்' என்றுதானே கேட்க வேண்டும்?'' என்று முகம் முழுக்கியம் போல வாதாடினான் அவன்.

''சொல்லுங்கள், எப்படித் தெரியும்?''

''அவ்வளவுதானா?''

''எப்படித் தெரியும், வித்யாதர்? போதுமா? இப்போதாவது சொல்லுங்கள்'' என்று முடித்தவள், அவன் பார்வையில், ''வித்யாதர்'' என்று சேர்த்துச் சொன்னாள்.

''ஒன்று உள்ளுணர்வு'' என்றான் அவன்.

''ம்ம்...? என்றாள் அவள் நம்பாத பார்வையுடன்.

அத்தோடு, கொஞ்சம் மோசமாகியிருந்தாலும் எனக்கு உடனே டெலிபோனில் சொல்லிவிட வேண்டும் என்று டாக்டர் அங்கிளிடம் கேட்டிருக்கிறேன். அவரும் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதனால்தான்''.

''அப்படியானால் சரி'' என்றாள் அவள் ஒரளவு பாரம் இறங்கியவளாய்.

இருவரையும் சேர்த்துப் பார்த்தபோது சிவகாமி லேசாகக் கண் கலங்கினாள் போலத் தோன்றியது அனுபமாவுக்கு.

ஆனால் உடனேயே வழக்கம் போல் அவர் பேச்சைத் தொடங்கிவிட தான் நினைத்தது தவறு என்ற முடிவுக்கு வந்தாள் அவள். மறுநாள், வித்யாதரனிடம் அனுபமாவின் புகைப்படங்கள் சில வேண்டும் என்று கேட்டார் சிவகாமி.

அவனிடம் ஏது? எப்படிச் சமாளிக்கப் போகிறான் என்று யோசித்தபடி தலை நிமிராமல் பூக்கிண்ணத்தில் மலர்களை அழகுற அடுக்கிக் கொண்டிருந்தாள் அனுபமா.

இல்லை என்று சொல்லாமல், ''எதற்கு அம்மா?'' என்று விசாரித்தான் மைந்தன்.

''போட்டோ எதற்குக் கேட்பார்கள்? பார்க்கத்தான்.''

''அதுதான் எதற்கென்று கேட்டேன். அசலே எதிரில் இருக்கையில் நகலை என்ன பார்வை?'' என்று வித்யாதரன் தடுக்கில் புகுவதைக் கேட்கவும், அனுபமாவுக்குச் சிரிப்பு வந்தது.

''போடா, மக்கு. அவள் குளிக்கும்போது, தூங்கும்போது எனக்குப் பார்க்க வேண்டும் என்று தோன்றினால்?'' என்று தாயார் கோலத்தில் புகுந்து காட்டவும் அனுபமா திகைத்தாள். இனி?

''இந்த சாதாரண விஷயத்துக்காக நான் மக்காகி விடுவேனா? இனிமேல் நீங்கள் குளிக்கும்போது குளித்து, தூங்கும் போது தூங்கி, மற்றநேரம் எல்லாம் உங்களுக்குக் காட்சி அளித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று அனுபமாவுக்குக் கட்டளை பிறப்பித்துவிட்டால் போகிறது'' என்று வித்யாதரன் அப்போதும் சமாளிக்கவும், கடைக்கண்ணில் சிரிப்புடன் அவனை மெச்சுதலாய் நோக்கினாள் அனுபமா.

அவள் பார்வைக்கு மட்டுமாக மகன் சட்டைக் காலரை லேசாகத் தூக்கி விட்டுக் கொள்வதைப் பாராதது போலக் கவனித்த சிவகாமி, ''போடா போ. ஒரு புகைப்படம் கேட்டால் கொண்டு வந்து கொடுக்கத் துப்பில்லை; இந்த விளையாட்டுக்கு மட்டும் பஞ்சமும் இல்லை'' என்றார் கேலியாக.

அன்னை விடுவதாக இல்லை என்பதைக் கண்டதும் வித்யாதரன் உண்மையை ஒருமாதிரி ஒத்துக் கொண்டான். ''அவசர அவசரமாகக் கிளம்பியதில் அதையெல்லாம் எடுத்துக் கொள்ளாமலே வந்து விட்டேன், அம்மா. இப்போது அங்கே உள்ளதில் வேண்டாததை 'டிஸ்போஸ்' செய்து விட்டு மீதமுள்ளதை, அனுப்பும்படி நண்பனிடம் ஏற்பாடு செய்தபடி இங்கே அனுப்பியதிலும் இந்தப் படங்களை மட்டும் காணவே காணோம்மா'' என்று கையை விரித்தான்.

''அப்படித்தான் இருக்கும் என்று நானும் நினைத்தேன்'' என்று கூறி மற்ற இருவரையும் கொஞ்சம் திகைக்க வைத்தார் சிவகாமி. ''படங்களைக் கொண்டு வந்திருந்தால் என்னிடம்

காட்டாமலா இருந்திருப்பீர்கள்?'' எனவே இப்படித்தான் நடந்திருக்கக்கூடும் என்று ஊகித்தேன்''. என்று விளக்கி விட்டு, ''ஆனாலும் பரவாயில்லை. தருமலிங்கத்திடம் ஒரு போட்டோ கிராபரை அனுப்பச் சொல்லியிருக்கிறேன். ஒரு ரோல் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

தாயை ஆழப் பார்த்து விட்டு, ''என்னிடமே சொல்லியிருக்கலாமே, அம்மா'' என்றானே தவிர, படம்பிடிக்கும் போது இந்த போஸ், அந்தப் போஸ் என்று உதவிகரமாகவே இருந்தான் வித்யாதரன்.

படங்கள் அழகாக வந்திருந்தன.

வித்யாதரனும் அவளுமாகச் சேர்ந்து நின்ற ஒன்றை ஓசைப்படாமல் தன் அறைக்குள் கொண்டு வைத்தாள் அனுபமா.

மேலும் சில தினங்கள் கழிந்தன.

வித்யாதரன் மாலை வேளைகளில் சற்று சீக்கிரமாகவே வீடு திரும்பினான். அனுபமாவை அழைத்துக் கொண்டு காலை மாலை தோட்டத்தில் வாக்கிங் போனான். காரில் டிரைவிங் போனான். அவளையும் அன்னையையும் ஓர் அணியாக விட்டு, அவர்களோடு 'செஸ்' விளையாடினான்.

ஒருநாள் சிவகாமியிடம் பூக்கிண்ணத்தில் மலர் அடுக்கும் போதுதான் வண்ணக் கலவை பற்றி அனுபமா ஏதோ கேட்டுக் கொண்டிருந்தபோது, திடுமென சிவகாமி குறுக்கிட்டார், ''என்னை அம்மா அம்மா என்று அழைத்தால் எனக்குப் பிடிக்கவில்லை, அனுபமா'' என்றார்.

அவள் திகைத்து நோக்கவும், ''அவனுக்கும் அம்மா உனக்கும் அம்மாவா? இனி அத்தை என்று கூப்பிடு'' என்றவர், மகனை விளித்து, ''வித்யா, அடுத்த

புதன்கிழமை நாள் மிகவும் நன்றாக இருக்கிறது. அன்றைக்கு அடக்கமாக நம் வீட்டில் வைத்தே உங்கள் இருவருக்கும் திருமணத்தை நடத்தி விடலாம் என்று இருக்கிறேன்'' என்றார்.

19

மலர்களுக்கிடையே 'பேர்ன்' இலைகளைப் பாங்காகச் சொருகிக் கொண்டிருந்தகைகள் அப்படியே நின்று விட, அதிர்ந்து போய் வித்யாதரனை நோக்கினாள் அனுபமா.

காட்டிக் கொடுப்பது போல என் முகத்தைப் பாராதே, பாராதே என்று அவளிடம் எப்போதும் வலியுறுத்துகிற அவனும் அப்போது அவளைத்தான் நோக்கியிருந்தான்.

ஆனால் அவளைப் போல அதிர்ச்சியுடன் அல்ல. ஓர் ஆராய்ச்சியும் நோக்குடன். இந்த எதிர்பாராத திருப்பத்தை எப்படி எதிர்கொள்கிறாள் என்று அறிய விரும்பினான் போலும்.

சில வினாடிகள் அவளது பார்வையைப் பற்றித் தயங்கி விட்டு வித்யாதரன் மெல்லத் தாயிடம் திரும்பினான்.

''என்னம்மா, திடீர் குண்டு போடுகிறீர்கள்?'' என்று அலட்சியமாக போல விசாரித்தான்.

''இதிலென்ன விஷயம் சொல்கிறேன்; குண்டு வெடி கிடி என்று கண்டபடி பேசாதே'' என்று கண்டித்தார் தாயார்.

அவர் சற்று உயர்த்தியபோதும் குரலில் இருந்த அவரது மனதைத் தெளிவாக வெளிப்படுத்தவே,

அனுபமாவின் மனம் படபடத்தது. இந்த இக்கட்டிலிருந்து வித்யாதரன் எப்படி மீளப்போகிறான் என்று எண்ணமிடும் போதே இது அவளுக்கும் இக்கட்டுத்தான். இதிலிருந்து மீள வேண்டியது அவளும்தான் என்கிற எண்ணம் வரவே இல்லையே என்று தோன்றவும் அவள் மேலும் திகைத்துப் போனாள். ஏன்?

சொல்லப் போனால் அவளுக்குத்தானே இது பெரும் சிக்கல்? அப்படி இருக்கையில் ஏதோ மாட்டிக் கொள்ளப்போவது அவன் மட்டும்தான் என்பது போல அவள் ஏன் அவனுக்காகவென்று அவள் மனதை அலட்டிக் கொள்ள வேண்டும்?

ஏன் என்பது புரியாத போதும் என்னவோ இது நல்லதற்கல்ல என்று உள் உணர்வு எச்சரிக்கவும், அனுபமா கலங்கினாள். இன்னமும் துன்பமா?

மீண்டும் ஒருதரம் அவளிடம் பார்வையைச் செலுத்தினான் அவன். ''சரி அம்மா இனி வெடிகுண்டுப் பேச்சு பேசவில்லை'' என்றான் பணிவாக. உடனேயே, ''ஆனால் நீங்களே நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்களுடைய ஒரே மகளின் விளாயகம் இன்டஸ்ட்ரீசின் உரிமையாளன்; ஆயிரம் களை வைத்து வேலை வாங்கும் முதலாளி- என் திருமணம் அடக்கமாக, வீட்டில் காதும் காதும் வைத்தாற் போல நடப்பதா? நியாயமா? ஊழியர்களுக்குத் துணிமணிகள் சாரட்டு வண்டியில் மாப்பிள்ளை ஊர்வலம், நாலாயிரம் முன்னிலையில் தடபுடலாகத் திருமணம், வரவேற்பு லாம் இல்லாமலா திருமணம்?'' என்று வேடிக்கை போல விளக்கமும் கூறி மறுத்துரைத்தான் வித்யாதரன்.

மகனை ஏறிட்டுப் பார்த்து, ''இதெல்லாம் நடப்பது சரி அதற்கு எவ்வளவு நாள் தேவைப்படும் தெரியுமா? ஒரு

கல்யாண மண்டபம் கிடைப்பதற்கே மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டுமே'' என்றார் பெரியவர்.

''ஆனால் அதது நடக்க வேண்டிய முறைப்படிதானே அம்மா நடக்க வேண்டும்'' என்றான் மகன் விடாமல்.

''முறைப்படி என்றால்... நாலாயிரம் பேர் முன்னிலையில் தாலி கட்டினாலும் இரண்டே பேர் முன்னிலையில் மாலை மாற்றினாலும் இரண்டும் முறைப்படியான திருமணங்கள்தான். கண்ணா, என்னைப் பொறுத்தவரையில் இப்போதைக்கு உன் திருமணம் விரைவாக நடந்தாக வேண்டும்''

''அவசரப்பட்டுத் திருமணம் செய்து அவகாசத்தில் ஆடு என்பார்கள். எதற்கம்மா இந்தத் தொல்லை? நிதானமாகவே...''

''ஏன் தள்ளிப் போடுகிறாய், வித்யா? நான் உன் காதலி யாத்தானே மணந்து கொள்ளச் சொல்லுகிறேன்; யாரே [illegible]த்தியை மணக்கச் சொல்வது போலத் தயங்குகிறாயே; ஏன்?'' என்று சிவகாமி நேரடியாகக் கேட்கவும் வித்யாதரன் தடுமாறிப் போனான்.

''அதில்லைம்மா..... வீணாக அவசரப்பட வேண்டாம் என்கிறேன். அவ்வளவுதான்'' என்றான் தணிவான குரலிலும் தடுமாற்றமிலேயே நின்று.

''அவசரம்தான்'' என்றார் சிவகாமி. ஒரு பெருமூச்சுடன், ''[illegible]கும் முச்சும் நன்றாக இருக்கும்போதே உன் திருமணத்தை [illegible]த்துவிட ஆசை. முடிந்தால் ஒரு பேரன் பேத்தியை [illegible]விட..... எனக்குக் கொஞ்சம் ஓய்வாகப் படுத்திருக்க [illegible]போல இருக்கிறது. நீங்கள் இருவரும் போய் நர்சை [illegible] சொல்லுகிறீர்களா? நான் ஓய்வெடுத்து முடிக்குமுன் [illegible] திருமணத்துக்கான ஆடை, அணிகள் பற்றிப் பேசி

முடிவு செய்யலாம்'' என்று கூறி தலையணையில் சாய்ந்து கொண்டார்.

மகனின் மறுப்பைச் சற்றும் ஏற்றுக் கொள்ளாமல் திருமணம் நிச்சயமாகி விட்டாற் போலவே அவர் பேசியவிதம் அனுபமாவுக்கு வேடிக்கையாக இருந்தது. என்ன பிடிவாதம்! கூடவே இன்னொன்றும் தோன்றியது. இது மெய்யாகவே சோர்வு தானா, அல்லது சாதுரியமாக மகனின் வாயை மூடுகிற முயற்சியா? இப்போது வித்யாதரன் என்ன செய்யப் போகிறான்?

யோசித்தபடியே அவனோடு அறையை விட்டு வெளியேறினாள் அனுபமா.

மகனும் தாயின் நாடகத்தைக் கவனித்திருந்தான். அதை அனுபமாவிடம் குறிப்பிட்டுக் கூறி, ''இப்படி ஒரு நாடகமாடியேனும் ஒத்துக் கொள்ள வைக்க முயற்சிக்கிறார்கள் என்றால் அம்மா இதில் மிகவும் தீவிரமாக இருப்பது தெரிகிறது. ஆனால்.... அனு நீ அவசரப்பட்டு ஏதும் பதில் சொல்லிவிடு வேண்டாம். சற்று யோசித்துப் பார். காதலி என்றால் என்ன மனைவி என்றால் என்ன? எல்லாம் நம்மைப் பொறுத்தவரையில் வெறும் பெயர்களே. சொல்லப்போனால், காதலிக்க 'மனைவி' எவ்வளவோ கவுரவமான பெயர் அல்லவா'' என்றான்.

ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள் அனுபமா. என்ன சொல்லுகிறான்? இந்தத் திருமணத்தை அல்லவா பேசுகிறான்! மனைவி என்கிற பதவியின் உரி எவ்வளவு என்பது இவனுக்குத் தெரியாதா? நம்மிடை முன்பு அவன் பேசியது நினைவு வர, ''மனைவி என குச் சொத்தில் கூட உரிமை உண்டு. அதைப் உங்கள் சொத்தில் பங்கு கேட்கமாட்டேன் என்று

என்ன நிச்சயம்?'' என்றாள் குத்தலாக.

''நிச்சயம்தான்'' என்றான் அவன் அமைதியாகவே. ''இதோ வருகிறேன்'' என்று எழுந்து சென்றான்.

ஏதாவது முக்கியமாகப் பேச வேண்டுமானால் அவளோடு அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்கு வருவது, அல்லது அவனது அறைக்கே அவளை அழைத்துச் சென்று பேசுவது என்பது வித்யாதரனின் வழக்கமாகி விட்டிருந்தது. இப்போது அவனது அறையில்தான் இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவளை விட்டுச் சென்றவன், ஓர் அலமாரியைத் திறந்து ஒரு சிறு தோல் பையை எடுத்து வந்தான். அவளிடம் அதைக் கொடுத்து, ''ஒரு வாரம் முன்பே உன்னிடம் தந்திருக்க வேண்டியது. தாமதத்திற்கு மன்னித்துக் கொள்'' என்றான் தனிவாகவே.

பையைத் திறந்து பார்த்தாள் அனுபமா. அவளது பெயரில் இருந்த பாங்க் பாஸ் புத்தகமும் செக்குகளும். அன்று எவ்வளவு கடுமையாகப் பேசினான்.

தலையை நிமிர்த்தி, ''என்ன திடீர் நம்பிக்கை?'' என்றாள் ஏளனமாக.

''சந்தேகப்பட்டிருக்கவே கூடாதுதான். ஆனால் கண்ணாடிக் கதவுகளைப் பார்த்துவிட்ட கண்களுக்கு வைரத்தைப் பார்த்தாலும் போலியோ என்றுதான் சந்தேகம் வந்து விடுகிறது. சாரி'' என்று அவன் தணிந்தே பேசவும் அதற்கு மேல் அவளாலும் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ள முடியாமல் போயிற்று.

இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைப்பதற்காக இப்படி எல்லாம் ஐஸ் வைக்கிறானோ என்று ஒரு சந்தேகம்

தோன்றிய போதும், திருமணம் என்று நடந்தால் அதில் அவனுக்குத்தான் நஷ்டம் அதிகம் என்று தோன்றவே அதைக் கேளாது விடுத்தாள்.

ஆனால் அவளது மனதைப் படித்தவன் போல வித்யாதரன் பேசினான். ''அம்மாவின் மன அமைதிக்காக இந்தத் திரும ணம் நடப்பது முக்கியம்தான் என்றாலும் அதற்காக நான் இப்படிப் பேசுவதாகத் தயவுசெய்து நினைக்க வேண்டாம்; அனு'' என்றவன் ஒரு பெருமூச்சுடன், ''யோசித்துப் பார், அனுபமா. இந்த நாடகத்தின் அடிப்படைக் காரணமே அம்மா வின் மனஅமைதிதான். அதற்காக நாம் எவ்வளவோ செய்து விட்டோம். பொய், பித்தலாட்டம், ஆள்மாறாட்டம், 'பொய் மையும் வாய்மை இடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று வள்ளுவரே சொல்லியிருப்பது போல் ஒரு நல்ல காரியத்துக்காகச் செய்யப்படும் தவறு பிழையாகாது என்கிற நம்பிக்கையோடு செய்தோம். இப்போதும் அதே போலத்தான். இன்னும் ஒரு சின்ன அடி எடுத்து வைக்க நேருகிறது.... என்ன?''

அவளது முகத்தில் பிரமிப்பைக் கண்டு அவன் கேட்கவும் அவள் மனதில் இருந்ததை மறையாமல் சொல்லிவிட்டாள். ''நீங்கள் வக்கீலுக்குப் படித்திருக்க வேண்டும் என்று நினை தேன்'' என்று அவள் கூறவும் இருவருக்குமே சிரிப்பு வ விட்டது.

சிரிப்போடு சிரிப்பாக அவன் தொடர்புவிடாமல் வற்பு னான். ''அனு, யோசி. இதில் உனக்கு ஒரு நட்டமும் இ சொல்லப்போனால் லாபம் தான். 'காதலி' என்கிற கொஞ்சம் இழிவாகப் பார்ப்பவர்களும் கூட 'ம என்றால் மரியாதையோடு நோக்குவார்கள். இது நிரந்த தண்டனையோ என்றும் நீ பயப்படத் தேவையில் விரும்பும்போது விடுதலை தர நான் சம்மதிக்கிறேன்.

மீண்டும் அனுபமா உள்ளூரத் திடுக்கிட்டாள். இது நிரந்தர பந்தமாகிவிடுமோ என்று அவள் பயப்படவே இல்லையே!

அவளது மவுனத்தைத் தவறாகக் கணித்து, ''இதில் உனக்கு நட்டமில்லை என்பதோடு லாபமும்கூட, அனுபமா இன்னமும் கூட நீ கேட்கும் அளவு பணம் தரு...'' என்றவன் அவள் முகம் கல்லாவதைக் கவனித்து, ''நீ எதுவும் கேட்கமாட்டாய் தான். அம்மாவிடம் உண்மையான பிரியம் வைத்திருக்கிறாய் என்பதால் இந்த வார்த்தை உன்னிடம் சொன்னதும் தவறுதான். ஆனால் அம்மாவின் மன அமைதிக்காக அம்மாவின் வாழ் வின் கடைசிப் பகுதி நிம்மதியாகக் கழிவதற்காக நீ இதற்கு சம்மதிக்க வேண்டும், அனு. ப்ளீஸ்...'' என்றான் அவன் கெஞ்சுதலாக.

அதற்குமேல் அனுபமா மறுத்து ஏதும் பேசவில்லை.

இப்போது பெயரளவில் காதலியாக இருப்பதை இனிப் பெயரளவில் மனைவியாக இருக்கப் போகிறாள். அவ்வளவு தான். இதில் பெரிய மாறுதல் ஒன்றும் தெரியவில்லை. மெல்லம், மிஞ்சி மிஞ்சி ஒரு சில மாதங்கள். இந்த பத்து நாட்களில் அவளிடம் அன்பு காட்டிப் பழகிய ஒரு நாடகத்திற்காக இதைச் செய்வதில் அவளுக்குத் தடை ஏதும் இருக்கவில்லை.

ஆனால் அப்படி அன்பு காட்டுகிற ஒரே ஜீவனை ஏமாற்றிக் கொண்டே இருப்பதுதான் வேதனையாக இருந்தது.

ஆனால் வேறு வழியில்லை. இந்த வித்யாதரனுடைய வாழ்நாளான காதலியாகவோ, மனைவியாகவோ இருப்பது வாழ்நாளிலும் சாத்தியம் இல்லையே என்று பெருமூச்சு ஒன்று அவள் மீண்டும் அதிர்ந்தாள்.

இதற்கு மறுப்பு சொல்வதற்கு என்ன இருக்கிறது? நாடகத்தில் ராணி

வேடம் போடுகிறவர்கள் மெய்யாகவே ராணியாகிவிட முடியுமா?

இந்தப் பெரிய மாளிகையும், தோட்டமும், சுவையான உணவும், மெத்தையும் கட்டிலும் மற்ற வசதிகளும் அவளை அவ்வளவுதூரம் கவர்ந்து விட்டனவா?

அல்லது...

மேலே சிந்திக்கவும் அஞ்சியவளாய், ''உங்கள் விருப்பம் போல, அம்மாவின் விருப்பம் போல என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்று முணுமுணுத்துவிட்டு அவசரமாக அங்கிருந்து அகன்றாள் அனுபமா.

20

காற்றடித்த திசையில் பறக்கும் காய்ந்த இலை போலத் தானும் விதி இழுத்த வழியே எந்தவித [illegible] பமோ, மறுப்போ இல்லாமல் சென்று கொண்டிருப்பது தோன்றியது அனுபமாவுக்கு.

சித்தி வீட்டிலிருந்து வெளியேறியதில் இருந்து [illegible] வித்யாதரனிடம் திருமணத்துக்குச் சம்மதித்தது வரை [illegible] யோசித்து முடிவு செய்து அதன்படி நடந்தாள் [illegible] சொல்லும்படியாக என்ன செய்திருக்கிறாள்? [illegible]

சும்மா உதைக்கிறபக்கம் ஓடுகிற பந்துதான்...

அப்படியும் சொல்வதற்கில்லை. ரகுபதியின் விருப்பப்படி நடந்துவிடவில்லையே. அன்று மட்டும் அவளது மூளை அவ்வளவு வேகமாக வேலை செய்யவில்லை என்றால் இப்போது என்ன ஆகியிருக்கும்!

அன்று ரகுபதிக்குப் பயந்து அங்குமிங்கும் ஓடியதும் ஒளிந்ததும், பிறகு வித்யாதரனின் உதவியோடு தப்பியதும்... அதையெல்லாம் நினைக்கையில் இப்போதும் அவளது உடம்பு நடுங்கியது.

என்ன மாதிரி மனிதர்கள்!

அந்தப் பொல்லாதவர்களிடமிருந்து, தனக்கு வரக்கூடிய [illegible]பத்தையும் பொருட்படுத்தாமல், அவள் தப்புவதற்கு உதவினானே! அந்த நன்றிக்காக அல்லவா அவனோடு இங்கு வந்து, இந்த அளவுக்குத் துணிந்திருக்கிறாள்!

[illegible]னால்.... நன்றிக் கடனுக்காகப் பெரிய தியாகம் செய்யும் [illegible]பான்மையில், வித்யாதரன் சொன்னதற்கெல்லாம் அனு[illegible] தலையாட்டினாள் என்று சொல்லிவிட முடியாது. [illegible]றுக்கு இரண்டாகத் திருப்பிக் கொடுக்கமல் அவள் [illegible]யோடு பணிந்து போனதில்லை.

[illegible]னால்... சமீபகாலமாக அந்த மாதிரிச் சச்சரவுகள் கிட்டத்[illegible]டியோடு நின்றுவிட்டிருந்தன என்பதை உணர்கையில் [illegible]முறுக்கு ஆச்சரியமாக இருந்தது. இதை இத்தனை நாட்க[illegible] அவள் கவனிக்கவே இல்லையே! கண்களில் விளக்கெண்[illegible]யிட்டுக் கொண்டு குற்றம் தேடல், குத்தல், கடுமை, [illegible]ரம்.... எதையுமே அவனிடம் காணோமே!

[illegible] வேளை அதனால்தான் அவ்வளவு இலகுவாகத் [illegible]திற்குச் சம்மதம் சொல்லத் தோன்றிவிட்டதோ?

[illegible]யாக நடிப்பது என்பது வேறு.

ஆனால் திருமணம் என்றால்- அது போலி என்றாலும்கூட வேறு விதம்தான்.

சிறுவயது முதலாக மனதினுள் வணங்கி வந்திருக்கும் தெய்வங்கள் சாட்சியாக, தீமையை அழிக்கும் தூய செந்தழலின் முன்னிலையில் உறுதி ஏற்க வேண்டும்; மங்களச் சின்னமான புனிதமான பொன் தாலியை அவன் கையால் கட்டிக் கொள்ள வேண்டும்!

இதையெல்லாம் அலட்சியமாக எண்ணுகிற மனப்பான்மை அவளுக்குக் கிடையாது.

அப்படியிருக்க, சட்டென்று எப்படிச் சம்மதித்தேன் என்று தன்னையே புரட்டி எடுத்துக் கொண்டிருந்தாள் அனுபமா.

ஒருவேளை இந்த வீட்டு ஆடம்பர வசதிகளில் மயங்கிப் போய், இந்த வாழ்வு இன்னும் கொஞ்சம் நீடிக்கக் கூடும் என்கிற ஆசைதான் உந்தியதோ என்றும் சொல்வதற்கில்லை.

ஏனெனில் இந்த வசதிகளுக்கு ஒரேயடியாகப் பழக்கப்பட்டு விட்டால், இங்கிருந்து வெளியேறும்போது மிகவும் சிரமமாக இருக்கும் என்பதை அனுபமா ஏற்கெனவே உணர்ந்திருந்தால், முன்னேற்பாடாக சில காரியங்களும் செய்தாள். அவ்வப்போது, வெந்நீர் வசதியுள்ள சவர், பாத்டப் வசதி ஒதுக்கிக் குளிர்நீர் மொண்டு குளிப்பாள்; வயிறு மந்தம் ஏ பொய்யுரைத்து, ருசிமிக்க, கறிவகைகளை ஒதுக்கி, ரசம் சாதம் உண்பாள். ஏசியை நிறுத்தி, கட்டி மெத்தையையும் விடுத்து வெறும் தரையில் போர்வை விரித்துப் படுத்து உறங்குவாள்.

இப்படி ஓர் எளிய வாழ்வுக்கு எப்போதும் தன்னை நிலையில் வைத்துக் கொண்டிருந்த அவள் ஆடம்பர மயங்கிவிட்டாள் என்று சொல்ல முடியாது.

இந்த வீட்டைப் பிரிய நேர்கையில் இழப்பு என்று அவள் வருந்தக் கூடியவற்றில் மிகவும் முக்கியமானது சிவகாமி அம்மாளின் பழக்கம். உண்டாயா, உறங்கினாயா, கண் ஓரம் ஏன் சிவப்பாய்த் தெரிகிறது, குசலில் வசதியாய்ச் சாய்ந்து கொள் என்று பரிவதிலும், கண்டதும் பிரியமாய்ச் சிரிப்பதிலும் பத்து வயதில், மறைந்த தாயை உணர்ந்த அனுபமாவுக்கு அவரைப் பிரிவதுதான் பெரும் துன்பமாகத் தோன்றியது. ஆனால் இயற்கையாகவே அந்தப் பிரிவுக்கு நேரம் கணித்து விட்டிருந்ததே!

அடுத்து ஓரளவுக்கு... சற்று அதிக அளவுக்கே வித்யாதரனின் பழக்கமும் இப்போது பிடிபட்டுப் போயிருந்தது. சூத்தலும், குறைகாணலும் இல்லாத போது அவனைச் சும்மா பார்ப்பதுகூட நன்றாகத்தான் இருந்தது. வெண்பற்கள் பளீரிட அவன் நகைப்பதைப் பார்க்கவும் அவளுக்கு ஆசைதான். அவனது கம்பீரமான குரலை ரசித்தபடி அவனோடு தோட்டத்தில் உலாவுவதும் பிரியம்தான். அது அவர்களது காதல் நாடகத்தை வலியுறுத்தும் நடிப்புதான் என்றபோதும் கூட.

இவர்கள் இருவரும் இல்லாத தனிவாழ்வைக் கற்பனை செய்து பார்த்த அனுபமா ஒரேயடியாகச் சோர்ந்து போனாள்.

அய்யோடா, இவ்வளவு கஷ்டமாகவா இருக்கும்? என்று அலுங்கிக் கொண்டிருந்தபோது, தாயம்மா வந்து, பெரியம்மா கூப்பிடுவதாகச் சொல்லவே, அப்பாடி என்று அவசரமாக சமையற்காரியின் அறையை நாடிச் சென்றாள் அனுபமா.

ஆனால் அங்கே சென்றதும், ''எல்லாம் முடிவு செய்துவிட்டாயா?'' என்று சிவகாமி கேட்கவும் திகைத்து விழித்தாள்.

''அதுதான் அனும்மா, கல்யாணச் சேலை, நகை, அவனது [illegible] பேசி... அடடா, ஒன்றும் பேசவில்லை போலத் தெரிகிறது. பின்னே என்னதான் செய்தீர்கள்? ஒருவர்

முகத்தை ஒருவர் பார்த்து மெய்மறந்து நின்றீர்களா?''

என்று அவர் மேலும் கேலி பேசவும், ஒன்றும் பதில் கூற முடியாமல் அவள் நிற்கையில் தாயின் அழைப்புக்கிணங்க வித்யாதரனும் அங்கே வந்து சேரவும் அனுபமா சட்டென முகம் சிவந்தாள்.

புன்னகை விரிய மகனிடமும் கேலி பேசிய போது பேச்சோடு பேச்சாக, திருமணத்துக்குரிய நகை, துணிமணி களை முடிவு செய்தார் சிவகாமி.

மகனை அனுப்பி, இரும்புப் பெட்டியில் இருந்து ஒரு குறிப்பிட்ட நகைப் பெட்டியை எடுத்து வரச் செய்து அதைத் திறந்தார்.

அடர் நீலநிற வெல்வெட், பின்னணியாய் நின்று எடுத்தும் காட்டக் கண்ணைப் பறிப்பவைபோல ஒளிர்ந்த நகைகள் வைரங்கள் என்பது நகைகளில் அதிகம் பரிச்சியமற்ற அனுபமா வுக்குக் கூடப் புரிந்தது.

இதையெல்லாம் அணியச் சொல்வார்களா? அணியும் உரிமை உள்ளவள் அனுராகா அல்லவா?

''என்னம்மா? பிடிக்கவில்லையா?''

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நடப்புக்கு வ அனுபமா. ''ரொம்பவும் நன்றாயிருக்கிறது. அம்... உங்களுடையதா?''

'வேறு எப்படி இந்த நகைகள் அவரிடம் வரமுடியும்? அசட்டுத்தனமான கேள்வி' என்று எண்ணியபோது முகபாவனையில் இருந்து பேச்சைத் திருப்புவதற்கு சும்மா கேட்டு வைத்தாள்.

''இல்லையே!'' என்று விளையாட்டாகக் [illegible]

''இவையெல்லாம் உன்னுடையவை, அனும்மா'' என்று முறுவ லோடு கூறி அவளை மேலும் அதிர வைத்தார் சிவகாமி.

அனுபமா விழிப்பதைக் கண்டு மேலும் நகைத்து, ''இந்த வீட்டு முதல் மருமகளுக்கு உரியவை, கண்ணம்மா. திருமண சேலையோடு இந்த நகை செட்டையும் சீராகக் கொண்டு வருவார்கள். திருமணத்தின் போது அணிவதிலிருந்து அவளது சொத்தாகிவிடும்'' என்று விளக்கினார்.

ஒருவாறு சுதாரித்துக் கொண்டு விட்டதால், ''தப்பாயிற்றே!'' என்று உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்க அனுபமாவால் முடிந்தது.

மற்ற இருவரும் முகத்தில் கேள்வியோடு நோக்க ''வீட்டின் மூத்தமருமகள் தனக்குத்தான் என்று ஜாலியாக நினைத்துக் கொண்டிருக்க, 'இல்லை இல்லை, இனி உன் மருமகளுக்குத் தான் சொந்தம்' என்று பிடுங்கிக் கொடுப்பது எப்படிச் சரியாகும்? புதுமருமகளை வெறுக்க இந்த ஒரு காரணமே போதுமே!'' என விளக்கினாள் அனுபமா.

''அதுவும் சரிதான், நீ சொல்வது'' என்று ஒப்புக் கொண்டார் சிவகாமி. ''நீ சொன்ன பிறகு தான் என் மாமியார் எந்த அளவுக்கு உயர்ந்தவர்கள் என்பதும் புரிகிறது. ஆனால் உனக்கு இந்தக் கவலை வேண்டாம். வித்யா அப்பாவுக்குப் பிறகு, இந்தத் தங்கச் சங்கிலி தவிர நான் வேறு எதையும் அணிந்தது இல்லை. அத்தோடு உனக்கு மருமகள் வருகிற நாளைப் பற்றியும் நீ கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. உனக்கு எத்தனை மகன்கள் பிறந்தாலும் ஒவ்வொருவன் [illegible]க்காகவும் நானே என் சொந்தப் பணத்தில் ஒவ்வொரு [illegible] நகை செய்து வைத்துவிடப் போகிறேன். அதனால் [illegible] கொடுக்க வேண்டியதே இராது; வரும் [illegible]போடு சண்டை போடவும் வேலையிராது. ஆனால்

உன் குணத்துக்கு... இவள் தன்னதையும் சேர்த்துக் கொடுத்து விட்டு சும்மா நில்லாமல் அப்போது நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும் வித்யா'' என்று மகளிடம் எச்சரித்து வைத்தார் சிவகாமி.

பேச்சு போகிற விதம் அனுபமாவுக்கு வேதனையை அளித்தது. எவ்வளவு காலத்துக்கு யோசித்து வைத்திருக்கி றாள் இந்தத் தாயார். அவ்வளவு காலம் கடந்து விட்ட சமயத்தில் அனுபமா எங்கிருக்கிறாள் என்று.... இருக்கிறாளா இல்லையா என்கிற அளவு எண்ணிப் பார்க்கக்கூட வித்யாதர னுக்கு நினைவிருக்குமோ என்னவோ?

ஆனால் அவள் விஷயம் வேறு...? என்ன 'வேறு'? கொஞ்சம் நேரமாகவே மூளை போகிற போக்கு ஒன்றும் சரியில்லை!

''அத்தை, நகைகளை இப்படி வெளியே வைத்துக் கொண்டு இருப்பது பிடிக்கவில்லை. மீண்டும் உள்ளே வைத்து விடச் சொல்லுங்கள்'' என்று வேறு திசையில் மனதையும், கூடவே பேச்சையும் திருப்பினாள்.

''கூர்க்கா, நாய்கள், வீட்டு வேலையாட்களைத் தாண்டிக் கொண்டு, திருடர் யாரும் இங்கே வர வாய்ப்பில்லை அனும்மா. ஆனால் உன்னிடம் காட்டத்தான் எடுத்தது. பார்த்துவிட்டதால் இனி உள்ளே வைத்து விடலாம். வித்யா இதை இரும்புப் பெட்டியுள் வைத்துவிட்டு, கூடவே அனுபமாவுக்கு இரும்புப் பெட்டி 'காம்பினேஷே''னையும் கொடுத்துவிடு. அவரசரத்துக்கு உதவும்'' என்று தலையணையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் சிவகாமி.

தாய் சொல் தட்டாத தனயனாக நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான் வித்யாதரன்.

சிவகாமியின் விருப்பத்திற்கிணங்கி அவனோடு சென்றாள் அனுபமா. ஆனால் இரும்புப் பெட்டியைத் திறக்கும் வழி வகை குறித்து வித்யாதரன் விளக்க முற்படவும் மறுத்து அவனைத் தடுத்தாள் அவள். ''ஏதோ கொஞ்ச காலம் இந்த நாடகம் நடித்துவிட்டு தனி வழியே போகப் போகிறவள் நான். இதை நான் தெரிந்து கொள்வது அவசியமில்லை... நல்லதும் இல்லை'' என்றாள் கம்மிய குரலில்.

பெட்டியை உள்ளே வைத்து மூடியபடியே, ''அப்புறம் அம்மா கேட்டால்?'' என்று வினவினான் வித்யாதரன்.

''மறந்துவிட்டதாய்ச் சொல்லிவிடலாம். அவர்களிடம் பொய்யே சொன்னதில்லையா, என்ன'' அலட்சியம் போலப் பேச முயன்ற அப்போதும் அவளுக்குக் குரலே எழும்ப வில்லை.

யோசனையோடு நோக்கி, ''என்ன விஷயம், அனு?'' என்று விசாரித்தான் அவன்.

விழிகளை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். ''உங்களுக்குப் புரியவில்லையா? எவ்வளவு காலத்துக்குத் திட்டம் போடுகிறார்கள் அத்தை! ஆனால் அவர்கள் அதிக நாள் இருந்து பார்க்கப் போவதில்லை என்பது தெரிந்தால் சந்தோஷம். அளவுக்கு அவர்களை ஏமாற்றுகிறோம்... எவ்வளவு... அவர்களுக்கு எவ்...வளவு அநியாயம் செய்கிறோம்... உண்மைதான். அந்த அனுராகாவாக நடித்து ஆள் மாறாட்டம் செய்யத்தான் வந்தேன். ஆனால் அவர்கள் இப்படி நம்பிக்கை யோடு பேசும்போது எவ்வளவு வேதனையாக இருக்கிறது தெரியுமா?''

''அனு...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு நிறுத்திவிட்டான் வித்யாதரன்.

அவள் கேள்வியாய் நோக்கவும், ''வ...வந்து, இப்போது போய் அம்மாவிடம் உண்மையைச் சொல்வதால் யாருக்கு லாபம், சொல்லு? வாழ்கிற காலம் முழுவதும் அம்மா நிம்மதியோடு வாழ வேண்டும் என்பதுதானே நம் குறிக் கோள். அதை ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறோம் என்று சந்தோஷப்படாமல், வீணாக மனதைப் போட்டுக் கசக்குவா னேன்? யோசி, அனு. இப்போது உண்மை தெரிந்தால் அம்மா தாங்குவார்களா? அதைவிட நடிக்கிற நாடகத்தை முழுமை யாக நடத்தி முடிப்பது நல்லதல்லவா?''

அவள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

என்னதான் நாடகம், நடிப்பு என்று மனதிற்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்ட போதும் திருமணம் என்று ஓமப்புகையின் முன் வித்யாதரன் அருகே உட்கார்ந்தபோது அனுபமாவுக்கு நெஞ்சு படபடக்கத்தான் செய்தது.

அவளது கழுத்தைத் தொட்டு அவன் தாலி கட்டியபோது சருமம் கூசிச் சிலிர்ப்பதையும் அவளால் தடுக்க முடியாதுதான் போயிற்று.

வித்யாதரனின் பார்வை அவளது முகத்தில் பதிவதை உணர்ந்தும், கவனியாதவள் போலத் தரையை நோக்கியபடி அசையாமல் வீற்றிருந்தாள் அவள்.

மகனின் திருமணம் சிவகாமிக்கு அருமருந்தாய் [illegible] போலத் தோன்றியது. அறையினுள்ளே பிடித்துத் தள்ளி நடந்தவர், பிடியாமல் மெல்ல நடந்து, அறையை விட்டு வெளியே வந்து, அங்குமிங்கும் உலவத் தொடங்கினார்.

அதிகமாக உடம்பை அலுக்க வைக்க வேண்டாம் என்று சிவகாமியிடம் மன்றாடிப் பார்த்து, அது [illegible] போகவே, அந்தவாரப் பரிசோதனைக்காக வந்த

டாக்டர் குணாளனிடம் முறையிட்டாள் அனுபமா.

''வீண் அலட்டல். அம்மாவுக்குத் தெரியாதா அவர்கள் உடம்பு பற்றி? சும்மா இரு என்றால் இவள் கேட்பதில்லை. டாக்டர்'' என்றான் வித்யாதரன். வழக்கம்போல டாக்டரின் வாரந்திரப் பரிசோதனை முடிவு அறிவதற்காக வீட்டில் இருந்தான் அவன்.

முறுவலித்துவிட்டு, சிவகாமியின் அறைக்குச் சென்றார். டாக்டர் குணாளனுக்குப் பிடித்தமான வகையில் எலுமிச்சம் பழச் சாற்றில் உப்பும் சர்க்கரையும் கலந்து எடுத்து வைத்துக் கொண்டு அவருக்காகக் காத்திருந்தாள் அனுபமா.

வழக்கமான நேரத்தைவிடத் தாமதமாக வந்தபோதும் குணாளனின் முகம் மலர்ந்திருந்தது. ''என்னம்மா அது? வழக்கமான ஐ-ஸா? நல்ல சேதி சொன்னால் தருவதற்கு சர்க்கரை வைத்திருக்கிறாயா?''

''என்ன டாக்டர், என்ன?''

ஆவலே வடிவாகக் கேட்டவள், ''உன் அத்தை இந்த கண்டம் தாண்டிப் பிழைத்துக் கொண்டார்கள்'' என்று டாக்டர் கூறவும், முகம் மலர்ந்து ''ஆகா!'' என்று மகிழ்ச்சியோடு துள்ளினாள்.

''உங்களுக்கு ஆயிரம் ஆயிரம்... லட்சம்... கோடி கோடி தாங்கஸ்' டாக்டர். இந்தாருங்கள், முதலில் இந்தச் சர்க்கரை யுமைப்' சாப்பிடுங்கள். அப்புறம் ஆண்டிக்கும் உங்களுக்கும் இந்த ஒநாயிறன்று இங்கே விருந்து. சரிதானே?'' என்று கண்கள் [illegible] சிகாரிக்கப் பரபரத்தபடி வித்யாதரனிடம் திரும்பியவள், அவனது விசித்திரமான பார்வையில் வாயடைத்துப் போனாள்.

''என்ன' அந்தப் பார்வைக்கு என்ன பொருள்? அதைவிட

முக்கியமாக அவனுடைய அன்னை பிழைத்துக் கொண்டார் என்பதில் அவள் அடைந்த ஆனந்தம் அவனுக்கு ஏன் உண்டாகவில்லை.

21

வித்யாதரன், அவனுடைய தாயாரிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தான் என்பது அனுபமாவுக்குத் தெரியும். 'பாகாய் உருகி' நின்ற நிலையை அவள் பார்த்திருக்கிறாள். அப்படியிருக்க இப்போது அவர் பிழைத்து விடுவார் என்று அறியும்போது அவன் ஏன் மகிழ்ச்சி அடையவில்லை? அத்தோடு அவளையும் ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்?

அனுபமா குழம்பி நிற்கையில் வித்யாதரன் டாக்டரிடம் திரும்பினான். ''அம்மா பிழைத்து விடார்கள் என்றாலும் அதிர்ச்சி ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் இல்லையா, அங்கிள்? சிறு அதிர்ச்சி கூட அம்மாவின் உயிருக்கு ஆபத்தாகிவிடும் இல்லையா?'' விசாரித்தான்.

''ஏன்... அப்படிக் கேட்கிறாய்?'' புருவங்களை கேள்வி உயர்த்தினார். ''பொதுவாக அப்படித்தானே, டாக்டர் மாதிரி 'ஸ்ட்ரோக்' வந்து குணமாகும்போது வேறு அதிர்ச்சிகூட அபாயம் என்று சொல்லுவார்களே. நான் கேட்டேன்.''

''ஆமாம். அப்படித்தான். எந்தவித அதிர்ச்சியும் அவர்களுக்கு ஆபத்துதான். அப்படி ஏதும் இல்லாமல் அவர்களின் மனம் அமைதியாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது உங்கள் இருவரின் பொறுப்புதான்'' என்றார் டாக்டர் குணாளன் குரலில் அழுத்தத்துடன்.

அனுபமாவுக்கு விசயம் புரிந்து போயிற்று. அவள் ஏன் ஆனந்தப்படவில்லை, என்பதும் புரிந்தது. அவளை ஏன் அப்படிப் பார்த்தான் என்பதும் புரிபட்டுப் போயிற்று.

சிறு அதிர்ச்சிகூடத் தாளாத தாயாரிடம் எப்படி இந்தத் திருமணத்தின் பொய்மையை விளக்க முடியும்? விளக்கவே முடியாத போது எப்படி அதை உடைக்க முடியும்? தாயாரின் காலம் முழுமைக்கும் - அது எத்தனை ஆண்டுகளோ- இந்தத் திருமணத்தளையிலிருந்து அவனால் விடுபட முடியாது என்பதால்தான் அவனால் ஆனந்தப்பட முடியவில்லை.

கூடவே அவளைப் பார்த்த பார்வையின் பொருளும் புரிந்துவிட அவளது முகம் அவமானத்தால் சிவந்தது. அவனைப் போலவே, இந்தமாதிரி நோயாளிகளுக்கு அதிர்ச்சி கூடாது என்பது அவளுக்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணியிருப்பான். இங்குள்ள ஆடம்பர வசதிகளுக்குப் பழக்கப்பட்டுப் போன அவள், அந்த வசதிகள் இன்னும் ஆண்டுக்கணக்கில் நீடிக்கப்போவதை எண்ணி மகிழ்கிறாள் என்று எண்ணித் தான் அப்படிப் பார்த்திருக்கிறான்!

இதற்கு முன்பாதெல்லாம் அவளைப் பற்றி அவன் மனதில் நல்ல அபிப்பிராயம் வந்துவிட்டதாக நினைத்து ஆனந்தப்பட்டாளே, முட்டாள்தனம்!

அவனது இந்தத் தவறான எண்ணத்தைப் போக்க வேண்டும். இந்தத் திருமணம் நீடிப்பதில் தனக்கு ஒன்றும் மகிழ்ச்சி இல்லை என்று காட்டியே ஆக

வேண்டும் என்று முடிவு செய்தாள் அனுபமா.

அன்றிலிருந்து, சிவகாமியின் முன்னிலையில் சேர்ந்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் தவிர, மற்றபடி வித்யாதரனை அவள் அடியோடு தவிர்த்தாள்.

அவன் வீட்டுக்குள் வந்தால் அவள் தோட்டத்தில் நின்றாள். அவன் தோட்டத்துப் பக்கம் வந்தால் சுற்றிக் கொண்டு வீட்டுக்குள் புகுந்தாள். முடிந்த அளவு அவளது அறையிலேயே அடைந்து கிடந்தாள். இம்மெனுமுன் ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளும் நத்தைதான்.

ஆனால் சில நட்களில் அதுவும் முடியாமல் போயிற்று.

அறையை விட்டு வெளியே வந்து நடமாடத் தொடங்கிய சிவகாமியின் கண்களில் என்ன பட்டதோ, ஒரு நாள் அனுபமாவின் பொருட்கள், அவரது மேற்பார்வையில் வித்யாதரனின் அறைக்குள் குடி புகலாயின.

தினமும் பகல் பனிரெண்டு மணி அளவில் ஒருதரம் டெலிபோன் செய்து இரண்டு வார்த்தை பேசுவது வித்யாதரனின் வழக்கம். தாயின் உடல்நிலை பற்றிக் கேட்பதற்காகத் தொடங்கியது. இப்போதும் வீட்டில் என்ன, ஏது என்று விசாரிப்பதை அவன் விடுவதில்லை.

இந்தப் பேச்சைத் தவிர்க்கவென்றே அந்த நேரத்தில் தோட்டத்தில் மரங்களின் நிழலில் உலவுவதை இப்போதெல்லாம் அனுபமா வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

அன்றும் அதுபோல் உலவிவிட்டு வீட்டுக்குள் [illegible] வந்தால், மாடி வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியில் சிவகாமி அம்மாள் அமர்ந்து கொண்டிருக்க, தாயம்மா மணியுமாக அனுபமாவின் பொருட்களை எல்லாம் [illegible] னின் அறையினுள் கொண்டு வைத்துக் கொண்டிருந்[illegible]

விசயம் என்னவென்று புரிந்து அனுபமா தடுத்துப் பேசுமுன், ''வாம்மா'' என்று இனிமையாக முறுவலித்தார் சிவகாமி. ''கொஞ்சம் அதிக உரிமை எடுத்து உன் சாமான்களை வித்யா அறைக்கு மாற்றி விட்டேன். அதற்காக என் மேல் கோபமில்லையே, கண்ணம்மா?'' கொஞ்சலான குரலில் அவர் கேட்கவும் ஒரு கணம் ஒன்றும் சொல்ல முடியாமல் அனுபமா தினறினாள்.

''கோ... கோபம் என்ன, அத்தை? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் இது எதற்கு அத்தை? இங்கேயே எப்போதும் போல இருக்கட்டுமே'' என்று ஒருவாறு சமாளித்துச் சொல்லி முடித்தாள் அவள்.

''ஊகூம்.... அது கூடாது'' என்றார் பெரியவர் திட்டவட்டமாக. ''நீங்கள் வந்தபோது இருந்த நிலை வேறு. இப்போது வேறு. இனியும் உங்களைப் பிரித்து வைக்கிற பாவத்தைச் செய்ய நான் தயாரில்லை, தங்கம். இப்போது அது உனக்கு உரிமையான உன் இடம்'' என்று வேடிக்கை போலப் பேசி சிவகாமி முறுவலித்தபோது மீண்டும் பேச முடியாமல் அனுபமா தடுமாறினாள்.

வாழைப்பழ ஊசியாகச் சிவகாமி கூறியது அனுபமாவுக்குப் புரியாமல் இல்லை. அனால் அவரது பேச்சில் எதுவும் சரியில்லை என்று எப்படிச் சொல்வது? எனவே அந்த முயற்சியை விடுத்து அங்கே இடம் இருக்குமோ என்னவோ? ''ரே நெருக்கடியாக...'' என்று வேறுவிதமாய் ஆட்சேபித்தாள்.

சற்று விசித்திரமாய் நோக்கிவிட்டு ''வித்யா அறைக்குள் நெருக்கடியா? நீ சரியாகப் பார்த்ததில்லையா? உள்ளே [illegible]ருத் தனி 'டிரஸ்சிங்' ரூமே இருக்குமே. கூடவே குளியல் அறை. அப்புறம் என்ன நெருக்கடி?'' என்று வினவினார் சிவகாமி.

''அதில்லை அத்தை... அது வந்து... 'பர்சனல் ஸ்பேஸ்' என்பார்களே... அதைச் சொன்னேன். அறைக்குள் குறுக்கே நெடுக்கே போகும்போது கூடவே ஒருவர் இருந்தால் சங்கடமாய் இராதா?''

''என்ன பர்சனல் ஸ்பேஸ்? ஒரு மனைவியின் 'பர்சனல் ஸ்பேஸ்' கணவனின் தோள் வளைவுதான். ஆண்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்'' என்று கூறி அவள் மேலே பேச முடியாதபடி அவளது வாயை அடைத்தார் சிவகாமி.

மாலை வீடு திரும்பிய வித்யாதரன் முகம் கழுவி வந்த போது இந்த மாற்றத்தைக் கவனித்தது போலவே தோன்றவில்லை.

இரவில் கதவைத் தட்டிவிட்டு அவள் உள்ளே சென்றபோது அலுவலகத்தில் இருந்து கொண்டு வந்திருந்த வேலையில் இறங்கியிருந்தான் வித்யாதரன்.

அவன் கையிலிருந்த காகிதங்களைக் கவனித்து விட்டு, ''சாரி'' என்று வருத்தம் தெரிவித்தாள் அனுபமா. ''அத்தை தான்.'' ''இதில் சாரி சொல்ல என்ன இருக்கிறது?''

''உங்கள் தனிமையில் குறுக்கிடும்படியாக...'' என்று அவள் இழுத்த போது, ''தனிமையை நாடுவதும், அதற்காக ஒதுங்கிக் கொள்வதும் நீதான்... நானல்ல'' என்றான் அவன் ஒரு மாதிரி குரலில்.

அப்படி ஒதுங்கியதன் காரணம் அவனுக்குப் புரிந்திருக்குமா?

ஒரு கணம் பேசாமல் நின்றுவிட்டு, அவளது சாமான்கள் அடுக்கப்பட்டிருந்த அறைப் பக்கம் நகர்ந்தாள் அனுபமா.

''ஒரு நிமிடம்'' என்று அவளைத் தடுத்து நிறுத்தி

வித்யாதரன். ''உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்''

''என்ன?''

''நீ... நீ... ரகுபதியை இன்னுமும் நினைத்துக் கொண்டிருக்கிறாயா?

ஆம் என்று ஒத்துக் கொண்டால் இப்போதைய தப்பெண்ணம் மாறிவிடக்கூடுமோ? ஆனால் அது முழுப் பொய் ஆயிற்றே. எப்படிச் சொல்வது என்று யோசித்தவளுக்கு இன்னொன்று நினைவு வந்தது.

இல்லை என்று உண்மையைச் சொன்னாலும் அவன் அதை நம்பப் போவது இல்லை. முதலிலேயே என்ன மாதிரி சூழ்நிலையில் ரகுபதியை நம்பி அவனோடு வீட்டைவிட்டு வெளியேற நேர்ந்தது என்பதை அவள் விளக்கமாகச் சொல்லியிருந்த போதும், வித்யாதரன் இதே கேள்வியைத் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டேதானே இருக்கிறான்? ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவிதமாய் கேட்டாலும் கேள்வியின் அடிப்படை அதேதான் ''ரகுபதி மேல் காதலாதான்''

இப்படிக் கேட்கும் போதெல்லாம் 'உன்னை நான் நம்பவில்லை' என்று அவன் சொல்லாமல் சொல்வதாகத்தானே அர்த்தம்?

உன்னை நம்புகிறேன் என்று பாங்க் பாஸ்புக், செக்புக் ஆகியவை தந்ததெல்லாம் சும்மா நீரில் எழுதிய எழுத்துபோல மறைந்து நேரச் சலனம்.

''அனுபமா....'' என்று பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில் அவன் மீண்டும் தொடங்கவும் சட்டென்று, ''ஆமாம். நீங்கள் நினைப்பது போலத்தான் என்றே வைத்துக் கொள்ளுங்கள். போதுமா'' என்று வெடுவெடுப்பாகக் கூறிவிட்டு மீண்டும் நிமிர்ந்தாள்.

''போதாது'' என்றான் அவன் குரலில் சிறு அழுத்தத்துடன். ''நீ அவளை மறந்தாக வேண்டும் என்று புத்தி கூறும் கடமை எனக்கு இருக்கிறது.''

கடமையா...?

இவன் தன்னைத்தான் அவளில் காண்கிறானா?

அவனும் ஒருத்தியைக் காதலித்தவன். ஓவராகப் பழகிய வன். திருமணம் செய்து கொள்ளவும் நினைத்தவன். இப்போது தாயார் பிழைத்துவிட்டதால் மணவிடுதலை நடக்காத காரியம் என்பதால் அவளை மறப்பது கடமை என்று மறக்க முடிவு செய்து விட்டானா? மறந்திருக்கவும் கூடுமா? எப்படித் தெரிந்து கொள்வது?

''ஒருவரை உறுதியாய் மனதில் என்ணிய பிறகு மறப்பது அவ்வளவு எளிதா?'' என்று பொதுவாகக் கேட்டு வைத்தான்.

அவனது முகம் சட்டெனக் கடுத்தது. அவனது முகத்தையே ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த அவளது முகமும் வாடியது.

திரும்பி அவள் முகத்தைப் பார்த்தவன் தோளைக் குலுக்கினான். ''வெளிநாட்டில், இப்போது ஒரளவு இங்கேயும் விவாகரத்தும், மறுமணமும் சகஜமாகிவிட்ட விசயம். ஆண்கள் எல்லாம் முந்தையதை மறக்காமல் மனதில் வைத்துக் கொண்டா அடுத்தவரோடு வாழ்கிறார்கள்? ஆனால் நம் நாட்டில்- அதிலும் நம் மாதிரிக் குடும்பங்களில் ஒருவனுக்கு ஒருத்தி என்று சிறுவயதில் இருந்தே மண்டைக்குள் ஏறி விடுகிற பாவம், தப்பு தவறு என்றாலும் விடாமல் மனதில் வைத்துக் கொண்டு வேதனைப்படும்படி ஆகிவிடுகிறது'' என்று பெருமூச்சு விட்டான் வித்யாதரன்.

ஆக இவனுக்கு மறக்க முடியவில்லை.!

ஏனோ கண்ணோரம் கரித்து நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது அனுபமாவுக்கு. இவன் முன்னிலையில் அசட்டுத் தனமாக அழுது வைக்கக் கூடாது என்று எண்ணியவள், ''எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று தெளிவற்ற குரலில் முணுமுணுத்து விட்டு அவளது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

ஹாலில் இருந்து உள்ளே எடுத்துப் போடப்பட்டிருந்த நிவாளையும், அதன் மேல் கிடந்த தலையணைகளையும் பார்த்ததும் எவ்வளவோ முயன்றும் அவளால் அழுகையை அடக்கவே முடியவில்லை.

தன்னை மீறி ஒரு மூச்க அழுகையின் ஆத்திரத்துடன் எழுந்து அமர்ந்து கண்களை அழுந்தத் துடைத்தாள்.

என்ன மடத்தனம் இது.

அனுராகாவை வித்யாதரன் காதலிப்பது முதலில் இருந்தே அனைவர் அறிந்த விஷயம். அப்படியிருக்க அவளை அவன் மறக்கவில்லை என்று அனுபமா அழுவது எந்தவகையில் நியாயம்?

கொஞ்சமும் நியாயம் இல்லைதான். அதிலும் சம்பளத்துக்கா காதலியாக நடிக்க வந்தவள் அவனுடைய மனதைப் பாதியா அதில் இன்னொருத்தி குடியிருப்பது பற்றியோ ஆராய்வது கூடச் சரியில்லைதானே?

தவறு தப்பு சரி, குறை நிறை பார்த்தா காதல் வருகிறது? கொஞ்சம் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் அனுபமா.

! காதலா...? காதலேதானா?

புரியாத ஏக்கம், ஏனென்று அறியாத அழுகை,

வேதனை இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் இந்தக் காதல்தானா?

ஆனால் இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஆமாம். பைத்தியக்காரத்தனமேதான். இந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலையில், ஒரு கண் பார்வையால்கூட வெளியிட முடியாமல் உள்ளேயே பூட்டி வைத்து மறுக வேண்டியதான ஒரு காதலுக்கு அவளது இதயத்தில் இடம் கொடுத்த முட்டாள் தனத்துக்கு சரியான பெயர் அது மட்டும்தான்.

22

'தன் நெஞ்சறிவது பொய்யற்க' என்றார் வள்ளுவர்.

அனுபமாவும் பத்தாவது வயதுவரை பொய் உரைத்[illegible] இல்லை என்றே சொல்லலாம்.

அதன்பின் சித்தியின் கொடுமைகளுக்குத் தப்பும் வழியா[illegible] சிறு சிறு சமாளிப்புகள். அவ்வளவே.

ஆனால் வித்யாதரனின் விருப்பப்படி இங்கே வ[illegible] ருந்து அன்றாட வாழ்வின் அடிப்படையே பொய்[illegible] போயிற்று.

இப்படிப் பொய்யிலே வாழ்ந்ததால்தான் அவளது [illegible] முளைவிட்டு துளிர்விட்டு கப்பும் கிளையுமாக வ[illegible] அவளது இதயம் முழுவதையும் நிரப்பிவிட்டிருந்த[illegible]

அவள் அதுவரை உணரக்கூட முடியாமல் போயிற்றோ என்று தோன்றியது அவளுக்கு.

முளை விடும்போதே அறிந்திருந்தால், ஊகூம்... தகாது என்று அப்பொதே கிள்ளி எறிந்திருக்கலாம். இப்போது இதயம் முழுவதிலும் பரவிவிட்டதே. இதை அகற்றுவது என்றால் இதயத்தையும் சேர்த்துத்தான் அகற்றியாக வேண்டும். அந்த அளவுக்கு அணுவளவு இடம்கூட விடாமல் முழுக்க முழுக்க ஒவ்வோர் அணுவிலும் இது பரவி விட்டதே!

இந்தக் காதலை அகற்றவென்று இதயத்தை அகற்றுவது முடியாத காரியம். ஆனால் ஒன்று. இந்தக் கடவுள் இதயத்தை அடுத்தவர் அறியும் வண்ணம் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கவில்லை. எலும்பும் தோலுமாய்ப் போர்த்தி பிறர் பார்க்க முடியாமல் மறைத்துத்தான் வைத்திருக்கிறார். எனவே, அங்கே ஒளிந்திருக்கும் ரகசியத்தைப் பிறர் முக்கியமாக வித்யாதரன் அறியாமல் காப்பாற்றி விட முடியும்.

காப்பாற்றித்தான் ஆக வேண்டும்!

[illegible]ற்கனவே பெண்களிடம்- அதிலும் அவளிடம் அவனுக்குக் [illegible]கொஞ்சமும் நல்ல அபிப்பிராயம் கிடையாது. முதலில் [illegible]ருந்தே சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவளுக்கு அந்த மாதிரி [illegible]பியாதையை ஈட்டித் தருமாறு அமையவும் இல்லை. பண [illegible]படியாமல இப்போது அவளை நம்புவதாக அவன் சொன்ன [illegible]தைக்கூட முழுமையாக நம்புவதற்கில்லை. தாயாரின் விருப் [illegible]தை நிறைவேற்றுவதே குறியாக அவளை, மசிய வைப்பதற் [illegible]காகக்கூட அப்படி 'ஐஸ்' வைத்திருக்கலாம்.

[illegible]அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த [illegible]தாலும் மேலும் அவள் மனம் சோர்ந்தது.

[illegible]ற்கனவே அவளிடம் சற்றும் நம்பிக்கை இல்லாத வித்யாத

ரன் இந்தக் காதலை மட்டும் நம்பிவிடவா போகிறான்?

வீட்டு மருமகள் என்கிற பதவியைத் தக்க வைத்துக் கொள்ள நாடகமாடுகிறாள் என்றுதானே நினைப்பான்? அதே நினைப்பில் அவளை இன்னமும் இளப்பமாக நடத்துவான். அந்த வேதனை வேறு அவசியம்தானா?

அதைவிட இந்தக் காதல் இரகசியம் அவளுக்குள்ளேயே உறைந்துவிடுவது மேல் என்று முடிவு செய்தாள் அனுபமா.

அத்தோடு இன்னொரு முடிவும் எடுத்தாள்.

வித்யாதரனைப் பார்த்தால்தானே. இந்தப் பரந்த மார்பில் சாய்ந்தால் என்ன, இவனது கைச்சிறை எப்படி இருக்கும் என்றெல்லாம் மனது அலைபாயும்? பாராமலே இருந்துவிட்டால்?

முழுக்க முழுக்க விலகுவது சாத்தியம் இல்லைதான், ஆனால் முடிந்த அளவு ஒதுங்கிக் கொள்ளலாமே!

தன் தீர்மானத்தைச் செயலாற்ற அனுபமா முழுமுயற்சி செய்யத்தான் செய்தாள். வித்யாதரனும் அனாவசியமாக அவள் பாதையில் குறுக்கிட்டான் என்று சொல்வதற்கில்லை தான். ஆசையிருந்தால் அல்லவா அப்படி நெருங்கத் தோன்றும் என்று ஏங்கி அவள் இரண்டு சொட்டுக் கண்ணீர் உகுத்ததும் உண்டுதான்.

ஆயினும் அவளது திட்டம் தோற்றுத்தான் போயிற்று.

காரணம் சிவகாமி அம்மாள்.

புது மணமகள் சற்று பிரிந்திருப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை.

அவன் வேலை முடிந்து திரும்பி வந்தால் ஓர் ஐந்து [illegible]

சேர்ந்து பேசிக் கொண்டு இருந்துவிட்டு, 'இனி பாகைத் துரும்பு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்' என்று முறுவலோடு கூறி அவர்களைத் தனியே விட்டுச் சென்றுவிடுவார். உடன் பிரிந்து சென்றால் அவர் தவறாக எண்ணுவாரே என்று ஒரே இடத்தில் இருவரும் இருப்பதைத் தவிர்க்க முடியாது போயிற்று.

'இன்று வெள்ளிக்கிழமை. கோயிலுக்கு இருவருமாகப் போய் வாருங்கள்' 'நாளை ஞாயிறுதானே, இன்று இரவு ஏதாவது சினிமா பாத்துவிட்டு வாருங்கள்' 'இன்று ஞாயிற்றுக் [illegible]முறை அல்லவா? பிக்னிக் போய்விட்டு இரவு திரும்புங்கள் போதும்' என்று இருவரும் ஒன்றாகவே இருக்கும்படி செய்தார் பெரியவர்.

என்ன சொல்லி மறுப்பது? 'தலைவலி என்றால் தைலம் தடவிக் கொண்டு அவனோட காற்றாடப் போய் வா, சரியாகிவிடும்' என்று பதில் வரும்.

வயிற்றுவலி என்றால், 'நேற்று என்ன சாப்பிட்டாய்... பெரிதாக ஒன்றும் இல்லையே! வாய்வாக இருக்கும். மாத்திரை தருகிறேன். போட்டுக் கொண்டு போய்வா' என்று அனுப்பி வைப்பார்.

வித்யாதரன் சொன்ன 'அம்மாவின் கெட்டிக்காரத்தனம்' முழுவதிலேயே புரிந்துவிட, பதில் பேசாமல் பணிந்து போகத் தொடங்கினாள் அனுபமா.

ஆனால், சிவகாமியின் விருப்பபடி வித்யாதரன் இருக்கும் [illegible]திலேயே அவளும் இருந்தாலும், கிப்ரானின் 'சேர்ந்திடு' [illegible]ரு' என்பதை வார்த்தை அளவில் கடுமையாகக் [illegible]பின்பற்றினாள் அனுபமா. ஒரே காரில் சென்றாலும், [illegible]னியிலிருந்து முடிந்த அளவு விலகி சன்னலை ஒட்டிக் [illegible]யமர்ந்தாள். ஒரே சோபாவில் அமர்வதை முடிந்த

அளவு தவிர்த்தாள். மீறி உட்கார நேர்ந்தாலோ அடுத்த மூலையில், சோபாவின் கையில் வசதியாகச் சாய்ந்து கொள்ளும் பாவனையில் ஒதுங்கி உட்கார்ந்தாள்.

ஆனால் உடலை ஒதுக்கிக் கொள்ள முடிந்ததே தவிர உள்ளம் அவனை ஓடி ஓடி அணைத்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாது போகவே தவியாய்த் தவித்தாள்.

''அம்மா கவனிக்கும் அளவுக்கு ஒதுங்க வேண்டாம், அனுபமா'' என்று ஒருதரம் எச்சரித்தான் வித்யாதரன்.

ஆனால் தாயார் ஏற்படுத்தித் தந்த தனிமைகள் அவனுக்கும் பிடிக்கவில்லை என்பதை அவனது முகக்கடுப்பு அவ்வப் போது அவளுக்கு எடுத்துக் காட்டியது.

இருவருக்கும் ஒவ்வொரு விதமாய்த் துன்பம். இந்த நிலைமையை எத்தனை காலம் சகிக்கக் கூடும்?

ஒரு வேளை வித்யாதரன் சற்று இதமாய் ஏதோ ஒரிரு வார்த்தைகளேனும் சொல்லியிருந்தால் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்கக் கூடுமோ என்னவோ?

ஆனால் தாயாரின் முன்னிலையில் 'ப்ரீப்கேசை' நீட்டி, ''என் அலமாரியில் வழக்கமான இடத்தில் வைத்துவிடுகிறாயா?'' என்று என்னவோ அவனது அலமாரி அவளும் புழங்குகிற இடம் போல சொந்தம் காட்டிப் பேசுகிறவன், தாயார் அப்புறமாய் நகர்ந்ததும், அந்த அறையில் வேறு யாருமே இல்லாதது போலப் பாவித்து, ஏதேனும் பத்திரிகையில் முகத்தைப் புதைத்துக் கொள்ளவும் அவளால் தாங்கொணாமல் போயிற்று.

ஒருநாள் வாய்விட்டுக் கேட்டே விட்டாள், ''இந்தத் தனிமை எப்போது தீரும்?'' என்று.

ஆனால், அவளை வெறித்து நோக்கி, ''குறைந்த பட்சம் அம்மாவிடம் மட்டுமேனும் உனக்கு அன்பு இருக்கும் என்று நினைத்தேனே'' என்று அவன் வரண்ட குரலில் கூறியபோது அவளுக்கு வாயடைத்துப் போயிற்று.

அதில்கூட சந்தேகமா? 'அம்மாவிடம் மட்டுமேனும் அன்பா? அன்பு அம்மாவிடம் மட்டுமாக இல்லாமல் அவனிடமும் சென்று விட்டதால் அல்லவோ இவ்வளவு வேதனையும்!''

முன்னெல்லாம் என்றால் காலையில் கொஞ்சநேரம், மாலையில் கொஞ்ச நேரம் மட்டும் நடிப்பு தேவைப்பட்டது. இப்போது இருபத்தி நாலு மணி நேரமும் - உறங்கும் வேளையில் கூடக் கதவைத் திறந்தால் அவன் என்கிற எண்ணம் அவளை நிம்மதியாகத் தூங்கவிடுவதில்லையே! எனவே முழுநேரமும் நடித்தாக வேண்டிய கட்டாயம் ஒரு பக்கம். கூடவே, எதாவது ஒரு பார்வையில், முகபாவனையில் தன் அந்தரங்கத்தை வெளியிட்டு விடக் கூடாதே எனும் பயம் ஒரு பக்கமும் ஆக எந்நேரமும் வழுக்குப் பாறையில் ஏறுகிற போதான கவனமும் இறுக்கமுமாக வாழ நேர்ந்தது அனுபமாவை மிகவும் பாதிக்கத் தொடங்கியது.

ஒரு நாள் வித்யாதரனின் சிறுவயதுப் புகைப்பட ஆல்பங்களை மாமியாரும் மருமகளுமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவற்றில் ஒரு வண்ணப்படம் பெரிதாகப்பட்டது. குண்டு குண்டாக கன்னங்களும், பெரிய மணிக் கண்களுமாக அவனையே பார்ப்பது போல இருந்தது அனுபமாவுக்கு. அந்தப் படத்திலிருந்து கண்ணை எடுக்க முடியவில்லை. மற்ற ஆல்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அந்தப் படத்தை மீண்டும் எடுத்து பார்த்தவளுக்கு கற்பனை விரிந்தது.

அது போல வித்யாதரனுடைய குழந்தை. அதைத் தொட்டுத்

தூக்குகிறாள்; நெஞ்சோடு அணைக்கிறாள்; பட்டுக் கன்னங்களில் முத்தமிடுகிறாள்.

கற்பனைக் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு இருந்தவள், வித்யாசானின் வருகையை முதலில் உணரவில்லை.

ஆனால் மகனைக் கண்டு விட்ட சிவகாமி எழுந்து எதிர் சோபாவில் அமரவும், குறிப்புணர்ந்து மனைவியின் அருகில் அமர்ந்தான் வித்யாதரன்.

சோபாவின் ஒருபுறமாய் மற்ற ஆல்பங்கள் கிடக்க, சிவகாமி அமர்ந்திருந்த அதே இடத்தில் உருவத்தில் பெரிய வித்யாதரன் உட்கார்ந்தபோது அனுபமாவின் மீது லேசாக உரசியபடிதான் அமர முடிந்தது.

அவனைக் கண்டதுமே, தன் கனவின் நடக்க முடியாத தன்மையை நெஞ்சடைக்க உணர்ந்த அனுபமா, இந்த தொடுகை தாளாமல் சரேலென்று எழுந்துவிட்டாள்.

கேள்வியால் நோக்கிய சிவகாமிக்குப் பதில் சொல்லத் தெரியாமல் அவள் திகைக்க, ''எனக்கு வெறும் சிற்றுண்டி மட்டும் போதும், அனு. கிளம்பும் போது பார்க்க வந்து ஒருவரோடு சேர்ந்து காபி குடிக்கும்படி ஆகிவிட்டது. னால் இப்போது காபி வேண்டாம்'' என்று கூறி, அவள் எழுந்தது அதற்காகவே என்பது போலக்காட்டிச் சமாளித்தான் வித்யாதரன்.

சமயத்தில் சாதுரியமாய்க் காத்தான் என்ற நன்றியை இவனால் தானே இப்படி ஒரு தவிப்புக்கு ஆளாக எனும் எரிச்சலே மேலோங்க, ''ம்... சரி'' என்று முணுமுணுத்துவிட்டு வெளியேறினாள் அனுபமா.

சிற்றுண்டி கொண்டு போகுமாறு தாயம்மாவை

விட்டு, அவளது பழைய அறையினுள் சென்று கதவைத் தாளிட்டாள்.

தன்னைச் சமன் செய்து கொள்ள அவளுக்குத் தனிமை வெகுவாகத் தேவைப்பட்டது., அவனது அறைக்குள் அறையான அவளது அறையில் தனிமைக்கு வழியேது?

ஆனால் கடைசியாக அந்த அறைக்கு அவள் செல்லத்தான் வேண்டியிருந்தது. அங்கே அவள் வருகைக்காக முகத்தில் கடுப்புடன் அவன் காத்திருந்தான். ''ஏன், அம்மா முன்னிலையில் உன்னை என்ன செய்துவிடுவேன் என்று நினைத்தாய்?'' என்று படபடத்தான்.

அவள் பேசாமல் நின்றாள். மற்றபடி அந்த நேரத்தில் அவள் நினைத்ததைச் சொல்லவா முடியும்?

''உட்காரும்போது லேசாகக் கைபட்டால் கூடத் தாங்க முடியவில்லையா? அப்படி என்ன வெறுப்பு? இதுவே ஒருபதியாக இருந்தால் ஓடத் தோன்றுமா?''

ஒருபதியா? அப்படி ஒருவன் இருப்பதே இவன் சொல்லும் போதுதான் நினைவு வருகிறது. ஆனால் இப்போது இவனுக்கு என்ன பதில் சொல்வது?

யோசித்து, ''அன்னியர் அருகே அவ்வளவு நெருக்கமாக நான் அமர்ந்தது இல்லை. அதனால் அனிச்சைச் செயல் மாதிரி'' என்றவள் அவன் முகத்தில் சினம் ஏறவும் பேச்சை நிறுத்தினாள்.

''அன்னியனா? நான் அன்னியனா? பத்து பவுன் சங்கிலியில் சக்தி சிவலிங்கத்தைத் தாலியாகக் கோர்த்துக் கட்டியிருக்கிறேன், நானா அன்னியன்'' என்று சீறினான் வித்யாதரன்.

அவளுக்கும் ஆத்திரம் பொங்கிவிட்டது. ''அப்படிக் கட்டிய

தன் உரிமையைக் காரியம் முடிந்ததும் விலக்கிக் கொள்வதற்காக இரண்டு லட்சம் ரூபாயை வீசப்போகிறவர்களுக்கு எப்படித் தருவது?'' என்று பதிலுக்குச் சீறினாள்.

''அவரவர் உரிமையை அவரவர்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவர் தருவார் என்று காத்துக்கிடந்தால் நாமம்தான் கிடைக்கும். அப்படிப்பட்ட முட்டாள் நான் அல்ல'' என்றான் அவன் அழுத்தமான குரலில்.

திகைப்புடன் நிமிர்ந்தவளின் அருகே தோளைப் பற்றி, ''என்னை அன்னியன் என்று உன்னால் இனிச் சொல்ல முடிகிறதா, பார்க்கலாம்'' என்று கூறியவன், சட்டென அவளை இறுக அணைத்து, இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

அதன் பிறகு உலகம் மறந்து போயிற்று அவளுக்கு.

காலையில் சற்றுத் தாமதமாகவே கண்விழித்த அனுபமா ஒரு கணம் மருண்டாலும், உடனேயே நினைவு வந்துவிட, கூச்சமும் மகிழ்ச்சியுமாக முகம் மலர்ந்தாள்.

ஆக அவனுள்ளும் ஆசை இருந்ததா? மெல்ல விழிகளைச் சுழற்றியபோது அவனைக் காணாமல் சிறு ஏமாற்றம் உண்டாயிற்று.

தோட்டம்? தாயோடு சேர்ந்து பத்திரிகை...

இப்போதைக்கு அதுவும் நல்லதுதான். வெட்கச் சிரிப்பை எழுந்து, பல் துலக்கிக் குளித்து முடித்தவளுக்குக் கணவனைப் பார்க்கும் ஆவல் அதிகரித்தது.

மாமியாரின் அறையில் அவன் இல்லை என்பதை ஒரு பார்வையில் கண்டு கொண்டவள், தோட்டத்தின் பக்கம் விரைந்தாள்.

ஆனால் வீட்டைச் சுற்றிலும் இருந்த தோட்டத்தை ஒருபுறம் தொடங்கிச் சுற்றிவந்து முழுமையாகத் தேடியும் அவனைக் காணாது போகவே, சிறு கலக்கத்துடன் மறுபுறமாய் வீட்டின் முன்புறம் வந்தவள், ''வாவ்! இவ்வளவு பெரிய மாளிகையா?'' என்று அதிசயித்த ஓர் அழகிய பெண்ணைப் பார்த்ததும் திகைத்தாள்.

மொழு மொழு என்று சைனா பொம்மை போல் இருந்த அவளது சருமம் எதையோ உணர்த்த, நெஞ்சக்கூடு காலியாகி விட்டது போன்ற உணர்வுடன் ''யா... யார்... நீங்கள்...?'' என்று வினவினாள்.

''என்னையா கேட்கிறாய்?'' என்றாள் அவள் மிடுக்குடன். ''பித்தி சொல்லவில்லை? நான்தான் இந்த வீட்டுக்கு உரிய பெண். என் பெயர் அனுராகா'' என்றாள் அந்தப் புதியவள்.

23

அனுபமா சும்மாவே குழம்பிப் போயிருந்தாள்.

முன்தின நிகழ்ச்சிகளோடு, அதை அடுத்து வித்யாதரன் இல்லாதது அவளுக்கு உள்ளூர லேசாகக் கலவரம் மூட்டியிருந்தது. தாங்க முடியாத தவிப்பு என்று இல்லை. ஆனால் ஏன்... என்று ஒரு சிறு பதைப்பு.

இந்த மனநிலையில் இருந்தவளின் முன் ஓர் அழகிய பெண் வந்து நின்று, 'நான்தான் அனுராகா' என்று கூறவும் அப்படியே விறைத்து விறுவிறுத்துப் போனாள். நிலைகுத்தினாற் போல

அந்தப் புதியவளின் மீது படிந்த பார்வை அப்படியே நின்றுவிட அவளும் சிலையாய் உறைந்து போனாள்.

இந்த அனுராகாவாகத்தானே அவள் இந்த வீட்டினுள் வந்தது! பொய், புரட்டு, ஆள் மாறாட்டம் எல்லாம் இப்போது வெளியாகப் போகிறது. இதை ஆதி முதல் திட்டமிட்டு நடத்தியவனை ஆளையே காணோம். மற்றவர்களிடம் என்ன வென்று சொல்லி எப்படி விளக்குவது? முக்கியமாக சிவகாமி அம்மாளிடம்? தன் மருமகள் ஒரு போலி என்று அறியும் போது அவர் அந்த அதிர்ச்சி தாங்குவாரா?

''ஏய், என்ன அப்படி முழிக்கிறாய்? இதற்குமுன் அழகான பெண்களையே பார்த்தது கிடையாதா?'' என்று அனுராகா மட்டம் தட்டிப் பேசிய விதம் அவளைச் சற்று உலுப்பி நிகழ்காலத்துக்கு கொண்டு வந்தது.

அழகான பெண்ணா? தினம் தினம் கண்ணாடியில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். யாரையோ 'வித்தி' என்று செல்லப் பெயரால் குறிப்பிட்டாளே, அந்த வித்யாதரன் கூட அவளது அழகு பற்றிச் சொல்லித்தான் இருக்கிறான் என்று பதில் சொன்னால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்துவிட்டு உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

இவளிடம் சொற்போர் நடத்த இது நேரம் அல்ல.

ஒன்று தோன்றவும், ''எப்படி உள்ளே வந்தீர்கள்? கேட்டில் கூர்க்கா இருந்திருப்பானே'' என்றாள்.

அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் அவள். ''[illegible] யின் விசிட்டிங் கார்டு இருக்கிறதல்லவா? காட்டியும் போட்டுக் கொண்டு 'கேட்'டைத் திறந்து விட்டான்.

விட்டிருப்பான்தான். தனியே வந்த ஒரு பெண்ணை வீட்டின் பாதுகாப்பு நிமித்தம் தடுத்து நிறுத்தியிருக்க மாட்டான்தான். இனி வீட்டுக்குள் வரும்போதுதான் வெளி வரவேற்பு அறையில் உட்கார வைத்து, கையில் ஜூசைக் கொடுத்து யார் என்ன என்று விசாரிப்பது எல்லாம். அதற்குள்....

அனுபமாவின் மன ஓட்டம் தெரியாமல் அடுத்தவள் பேசிக் கொண்டே போனாள். ''அதனால்தான் பிழைத்தான். இல்லாவிட்டால் இந்த வீட்டின் வருங்கால எசமானியைத் தடுத்து நிறுத்தியதற்காக, அவனைத் தொலைத்து விட்டிருப்பேன்'' என்றாள் அனுராகா அகம்பாவமாக.

''அவன் கடமையைச் செய்வதற்குக் கண்டிப்பதா?''

''என் விஷயம்தான் எனக்கு முக்கியம். மற்றவர் கடமை, மடமை பற்றி எனக்கு எந்தவித அக்கறையும் இல்லை'' என்று உதாசீனமாகப் பேசியவள் சட்டென்று அனுபமாவை ஏறஇறங்கப் பார்த்தாள். ''இவ்வளவு பேசுகிறாயே, நீ யார்?'' என்று விசாரித்தாள்.

ஒரு கணம் தடுமாறி விட்டு, ''நான்... நான் அனுபமா'' என்று அனுபமா தணிந்த குரலில் கூறவும் 'கல்'லென்று நகைத்தாள் அவள்.

''அனுபமா என்றால் இந்த நாட்டுப் பிரதம மந்திரியா? அவரது குறைந்தபட்சமாய்த் தமிழ்நாட்டு முதல் மந்திரியின் பெயரா? பெரிதாக அறிவிக்கிறாயே!'' என்று மீண்டும் நையாண்டியாகச் சிரித்தவள், தொடர்ந்து, ''ஓகோ! இந்தக் கிழவியின் ஸ்காரியதரிசியாக இருக்கிறாய் என்று நினைக்கிறேன். அப்படி இல்லாமல் நீ இந்த நாட்டுப் பிரதம மந்திரியாகவே இருந்தாலும் எனக்கு ஒன்றுதான். முதலில் டாக்சியில் இருக்கும்

என் பெட்டிகளை எடுத்து உள்ளே வைக்க ஏற்பாடு செய். டாக்சிக்கு பணம் கொடுத்து அனுப்பு. சீக்கிரம் முதலில் எனக்குக் குளிக்க வேண்டும். இங்கே இந்தப் பாடாவதி ரெயிலில் வந்தது ஒரே அழுக்கு... அப்புறம் நல்ல காபி வேண்டும். என்ன மரம் மாதிரி நிற்கிறாய்? நான் சொன்னது எதுவும் மண்டைக்குள் ஏறவே இல்லையா? கிழவிகூடப் பழகிப் பழகி உன்னையும் கிழட்டு மந்தம் பிடித்துக் கொண்டு விட்டதா?'' என்று விரட்டினாள் அனுராகா.

அவளுடைய அந்த 'வித்தி'யுடைய மனைவி என்று சொல்வதா கூடாதா என்று யோசித்துக் கொண்டிருந்த அனுபமா, அனுராகா மேலே பேசப் பேச வாயை மூடிக் கொண்டாள்.

இவளிடம் சொல்லத்தான் வேண்டும். இப்போது சொல்லப் போய் இவள் கத்தி களேபரம் செய்து வைத்து, அது சிவகாமியின் காதுகளை எட்டினால் ஆபத்து. இப்போதைக்கு அவள் நினைப்பது போலவே நினைத்துக் கொண்டு இருக்கட்டும்.

ஆனால் இந்த மாதிரி ஒரு பெண்ணிடம் வித்யாதரன் எப்படி மயங்கினான்? வழுவழுப்பும் வெண்மையும் கண்ணை மறைத்து விட்டன போலும். ஆனால் இப்போது ஆராய்ச்சி செய்யவும் இது நேரம் இல்லை.

மணியை உரக்கக் குரல் கொடுத்து அழைத்தாள்.

அவன் வந்ததும், ''இந்தச் சாமான்களை எல்லாம் பழைய... இல்லை புது அறையில் வை. மீட்டர் என்ன என்று பார்த்து தருமலிங்கம் சாரிடம் வாங்கிக் கொண்டு அனுப்பு'' என்று பணித்தாள்.

''மீட்டருக்கு மேலே ஐம்பது ரூபாய் அம்மா'' என்றார், அனுராகாவின் பெட்டிகளை வெளியே எடுத்து வைத்துக் கொண்டிருந்த டிரைவர்.

''ஐம்பதா? மீட்டரே அதில் பாதிதானேப்பா ஆகும்?'' என்றாள் அனுபமா.

''நானாக் கேக்கலைம்மா, அந்தம்மாவாகத்தான் தருவதாகச் சொன்னாங்க''.

அடுத்தவரைக் கொடுக்க வைப்பவள் ஏன் சொல்லமாட்டாள் என்று கசப்புடன் நினைத்தவள் மனம் முகத்தில் தெரிந்துவிடாமல் உடனயே சீர்படுத்திக் கொண்டாள். அத்தோடு, வித்யாதரனை விரைந்து காணும் ஆவல்கூடக் காரணமாக இருக்கலாமல்லவா?

ஆனால் வித்யாதரன் எங்கே? அடிமனதில் புழுவாய் அரித்தது. வித்யாதரன் பெரிய 'மில்லியனர்' இல்லை என்றாலும் பணம் படைத்தவனே. பணத்திற்காக யாரும் துப்பாக்கி முனையில் கடத்தியிருக்கக் கூடுமோ என்று எண்ணுகையிலேயே நெஞ்சு சில்லிட்டது அவளுக்கு.

இல்லையில்லை அப்படியெல்லாம் பணிகிறவன் அவன் இல்லை. மாட்டிக் கொள்கிறவனும் இல்லை என்று தன்னையே தேற்றிக் கொண்டாள். வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும்....

பரபர வீடாக இருப்பதில் இது ஒரு வசதி என்று நினைத்தபடி, சிவகாமியின் பார்வையில் படாமல் பக்கவாட்டு வழியே அவளது அறைக்குள் அனுராகாவை அழைத்துச் சென்றாள் அனுபமா.

சாமான்களை வைத்து விட்டு வேலையாள் அகன்றதும், மூடிய கதவைக் காட்டி, ''இதுதான் குளியல் அறையா? பாத்சால்ட் இருக்கிறதா? ''டப்'பில் வெண்ணீர் வருவதில் லையா? முதலில் இங்கே 'பாத்டப்' இருக்கிறதா?'' எரிச்சல் குரலில் கேட்டாள் அனுராகா.

உள்ளுர மூண்ட கோபத்தை மறைத்து ''இருக்கிறது'' என்று அவளைக் குளியல் அறைக்குள் அனுப்பி வைத்துவிட்டு அப்பாடி' என்று அமர்ந்தாள் அனுபமா. ஏதோ புயலடித்து ஓய்ந்தாற்போல ஓர் உணர்வு.

ஆனால் அப்படி உட்கார்ந்திருக்கவும் வழியில்லையே? இவள் குளித்து வருமுன் அடுத்து செயல்படும் விதம் பற்றிச் சிந்தித்து முடிவு செய்தாக வேண்டும்.

இந்த அனுராகாவின் வரவைச் சிவகாமி அம்மாவிடம் எப்படித் தெரிவிப்பது? முன் நடந்த ஏமாற்று வேலைகளை எல்லாம் வெளியிடாமல் இவளை அவருக்கு அறிமுகம் செய்வது எப்படி?

எதையும் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வழியில்லா மல் வித்யாதரன் எங்கே போயிருக்கக் கூடும்? ஒரு வார்த்தை சொல்லாமல் செல்லும் அளவு என்ன நடந்து விட்டது?

முன்நாள் இரவு நடந்தது காரணமோ என்று திடுமென் தோன்றி மீண்டும் அவளைக் கலங்க வைத்தது. சினிமாக்களில் வருகிறமாதிரி, அவனை மீறி ஏதோ நடந்து கொண்டு விட்டு அவள் முகத்தைப் பார்க்கவும் பிடிக்காமல் வீட்டைவிட்டு வெளியேறி விட்டானோ.

புலம்பத் தொடங்கிய மனதைக் கடிவாளமிட்டு நிறுத்தினாள்

அனுபமா.

இல்லை. வித்யாதரன் பொறுப்பற்றவன் அல்ல. சொல்லா மல் கொள்ளாமல் போட்டது போட்டபடி யாரும் எக்கேடும் கெட்டுப் போங்கள் என்று சொல்லுகிறவன் அவன் இல்லை. அவளைப் பற்றி எப்படி என்றாலும் தாயார், தொழில் பற்றிய பொறுப்புக்களை அந்தரத்தில் விட்டு விட்டு அவன் போகமாட் டான்.

ஆளைத் தேடுவது வேறு விதம். ஆனால் அவன் அங்கே இல்லை என்று உணர்ந்து தகவலுக்காகத் தேடியபோது, முதல் பார்வையிலேயே தெரியும் வண்ணம் அவன் மேசைமேல வைக்கப்பட்டிருந்த கடித உறை உடனேயே கண்ணில்பட்டது.

'அனுபமா' என்று பெரிதாக எழுதப்பட்டிருந்த உறையைச் சற்று வெறித்துப் பார்த்துவிட்டுக் கடிதத்தை எடுத்தபோது அவளது விரல்கள் வெகுவாக நடுங்கின.

சற்று நிதானப்படுத்திக் கொண்டு கடிதத்தைப் படித்தாள்.

அனுபமா, என்று மொட்டையாக அழைத்து அவன்தான் எழுதியிருந்தான், ''நேற்றைய இரவுக்குத் தயவு செய்து என்னை மன்னித்துவிடு. என்னுள் இப்படி ஒரு மிருகம் இருக்கக்கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால்.... வெளி என்ன சொல்லி என்ன? செய்த பிழை மாற்ற முடியாதது.

எதிர்காலம் பற்றிச் சிந்திக்க எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறது. உனக்கும் அந்த அவசியம் இருக்கிறது என்றே நினைக்கிறேன். அதில் ஒருவருக்கொருவர் குறுக்கீடு இல்லாதிருப்பது நல்லது.

ஆனால் ஒன்று.... உனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தால்,

கீழே மேசை அறையில் என் கையெழுத்திட்ட 'செக்'குப் புத்தகம் இருக்கிறது; வேண்டிய அளவு பணம் எடுத்துக் கொண்டு நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம்.

மற்றபடி... நம் தொழிலுக்கு மற்ற பெரிய நகரங்களில் கிளைகள் அமைப்பது பற்றித் திட்டமிட்டு வருவது உனக்குத் தெரிந்த விஷயம். அதுபற்றிக் கோவை, திருச்சி, விழுப்புரம், சென்னை நகரங்களை அடுத்து நமக்கு தேவைப்படும் அளவில் பெரிய இடங்கள் இருப்பதாகத் தரகர் வந்து சொன்னதாகவும் நல்ல இடங்கள், தாமதித்தால் கையை விட்டுப் போய் விடக்கூடும் என்று அவர் கருதுவதால், 'பென்'சில் அவரோடு செல்வதாகவும், சுற்றி அலையப் போவதால் இருப்பிடம் சொல்வது கடினம் என்பதால் தேவைப்பட்டால் நானே தொடர்பு கொள்வதாகவும் அம்மாவுக்கும் ஜெனரல் மானேஜருக்கும் தனித்தனியே கடிதங்கள் எழுதி வைத்திருக்கிறேன். நிர்வாகம் பற்றியும் குறிப்புகள் கொடுத்திருக்கிறேன். அவரவரிடம் சேர்ப்பித்து விடு'' என்றும் எழுதியிருந்தவன் தொடங்கியது போலவே ''வித்யாதரன்'' என்று முடித்தான்.

சும்மா ஒரு முறைமைக்காக 'அன்புள்ள' என்று அவனுக்கு மொழி கொடுக்கக் கூட மனமில்லையே என்று மனதுக்குள் வலித்ததை ஒதுக்கிவிட்டு யோசித்தாள்.

முன்னினத்தைப் பிழை என்றவன் மேலே என்ன சொல்ல முடியும்? எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு தான் திரும்பி வருமுன் எங்காவது போய்விடுவேன் என்று சொல்லாமல் சொல்கிறானோ?

ஆனால் அப்படிப் போய்விட முடியுமா? அவனுக்குத் தாயார் என்ன ஆவார்கள்? சிறு அதிர்ச்சியைக் கூட தாங்கும்

அவரது இதயம். அவள்பாட்டில் வீட்டை விட்டுவிட்டுப் போனால் என்ன ஆகும்?

அவள் தடுமாறி நிற்கையில் குளியலறையில் 'சவர்' நீர் விழும் சத்தம் கேட்கவும், சுயஉணர்வு பெற்றவளாக, மணியை அழைத்து காபி, டிபன் கொண்டு வருமாறு ஏவினாள்.

நீர் ஒலி நின்றபிறகும் ஒப்பனைகள் முடிந்து அனுராகா வெளியே வர வெகுநேரம் ஆனதால் அவள் வந்து சேருமுன், பையன் சிற்றுண்டியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விட்டான்.

பார்த்ததும் காபியைக் கையில் எடுத்து அருந்திய அனுராகா, மற்ற உணவு வகைகளைக் காட்டி, ''இங்கே சாப்பாட்டு அறை கிடையாதா?'' என்று முகம் சுளித்தாள்.

''இருக்கிறது. ஆனால் அங்கே அத்... வித்யாதரனுடைய அம்மாவும் இருப்பார்கள். அவர்களைச் சந்திக்குமுன் உங்களோடு நான் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது'' என்றாள் அவளுமா முடிந்த அளவு அமைதியோடு.

''உன்னோடு நான் எதற்காகப் பேச வேண்டும்? நான் விஸ்வநாதியோடு...''

''அவர் ஊரில் இல்லை...''

''வரட்டும் வந்த பிறகு பேசிக் கொள்கிறேன். முதலில் நீ இந்த கிரீமை என் முதுகில் தேய்த்துவிடு'' என்று ஆணையிட்டாள் அனுராகா.

அவள் பேசியவிதம் எரிச்சலூட்ட, ''பிறகு தேய்க்கலாம். இப்போது முக்கியமான விசயம் பேச வேண்டும்'' என்றாள்

அனுபமா குரலில் அழுத்தம்கூட்டி.

''எனக்கு மிகவும் முக்கியமான விசயம் இதுதான். இதை தினமும் தேய்க்காவிட்டால் தோல் எப்படி 'சாட்டின்' துணி மாதிரி ஆகும்? இந்த வழுவழுப்புதானே வித்திக்கும் பிடிக்கும். ''

எவ்வளவு பிடித்தம் என்பதை அறிந்திருந்ததால் அனுபமாவின் மனதினுள் வேதனை மண்டியது. ஆனால் என்றோ அறிந்த விசயத்திற்காக இன்று புதிதாக வேதனைப்படும் தன் மடத்தனத்தை எண்ணி ஆத்திரமும் வந்தது.

''இப்படி உருகுகிறவர்கள், அன்றைக்கு ஏன் இந்தியாவுக்கு வர மறுக்க வேண்டும்?'' என்று சற்றுக் கோபமாகவே கேட்டு விட்டாள்.

அனுராகாவின் முகமும் சட்டென மாறிப் போயிற்று ''அதைக் கேட்க நீ யாரடி?'' என்று கைநீட்டி அவள் சீறவும், ''நான் அவருடைய மனைவி'' என்று போட்டு உடைத்தாள், அனுபமா.

அனுராகா அதிர்ந்து போனது நன்றாகவே தெரிந்தது

பாவம், என்னென்ன இனிய கற்பனைகளோடு வந்தாளோ என்று பரிதாபமாகக்கூட இருந்தது.

ஆனால் உடனேயே முகம் இரத்த நிறம் கொண்டது. ''என்னது? மனைவியா? என்ன தைரியம்! என்னிடம் அப்படிப் பழகிவிட்டு இங்கே வந்ததும் உன்னை மணந்து கொள்வதா? எல்லாம் அந்தக் கிழவியின் வேலையாகத்தான் இருக்கும். சிலுமிசக்காரி... சூனியக்காரி, டெலிபோனில் பேசும் போதே நினைத்தேன். அவளிடம் நேருக்கு நேராகவே

கேட்கிறேன். எங்கே அவள்?'' என்று அனுராகா கத்தத் தொடங்கவும் அனுபமா நடுங்கிப் போனாள்.

இவள் சிவகாமி அம்மாளிடம் போய் என்னவெல்லாம் பேசிவிடப் போகிறாளோ என்று பயந்து, ''இல்லை... இல்லை... நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை அனுராகா. அத்தைக்கு இது ஒன்றுமே தெரியாது. கொஞ்சம் அமைதியாய் இருங்கள். நான் எல்லாம்...'' என்று அனுராகாவைச் சமாதானப்படுத்த அனுபமா முயன்று கொண்டு இருந்தபோது கதவைத் தட்டி, ''அம்மா... பெரியம்மா சாப்பிட வரச் சொன்னாங்க. புதுசா வந்தவங்களையும் கூட்டிகிட்டு வரணுமாம்'' என்று அழைத்தான் மணி.

புதியவளை அழைத்துக் கொண்டா? அவள் இருக்கும் மனநிலையில் சிவகாமியைப் பார்த்தால் அவ்வளவுதான்!

கதவை நோக்கி நடக்கத் தொடங்கிய அனுராகாவின் கையைப் பற்றி நிறுத்தி, ''அனுராகா, பிளீஸ்... அவசரப்படாதீர்கள். அது ஆபத்தாக முடியக்கூடும். கொஞ்சம் பொறுமையாக இருங்கள்'' என்று தணிந்த குரலில் கூறி அவளை நிறுத்தி விட்டு, கதவுக்கு வெளிப்புறம் நின்ற பையனிடம், ''இதோ நான் ஐந்து நிமிடங்களில் வருவதாகச் சொல்லு, மணி'' என்று சொல்லி அனுப்பினாள்.

அவள் திரும்புமுன், ''என்ன மிரட்டுகிறாய்? என்ன பெரிய பதவி? என்னை அடித்து விரட்டிவிடுவார்களா? பார்க்கிறேன் எனக்கு என்ன வழி என்று அந்தக் கிழவியிடம் கேட்காமல் விடவே மாட்டேன்'' என்று பாய்ந்தாள் அனுராகா.

ஆபத்து என்றால் அது இவளுக்கு மட்டும்தான் நேரக்கூடுமா? தன்னை மட்டுமே நினைக்கிறாளே என்று அலுப்பு தோன்றியது அனுபமாவுக்கு. இப்போது என்ன சொல்லி இவளைச் சும்மா இருக்கச் செய்வது? இவளுக்கு துரோகம் செய்வது வித்யாதரனின் நோக்கம் அல்ல என்று தெளிவுபடுத்தினால்....

''பாருங்கள் அனுராகா. இப்போது அதிகம் பேச நேரம் இல்லை. அத்தை... வித்யாதருடைய அம்மாவின் உயிருக்கே அபாயம் நேர்ந்தது உங்களுக்கு தெரியுமல்லவா? இப்போதான் மெல்ல மெல்ல குணமடைந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களின் மனநிம்மதிக்காகத்தான்... நான்... நான் இங்கே நீங்களாக... அதாவது அனுராகாவாக இருக்கிறேன். இப்போது போய்...'' என்று அவள் மேலே பேசியதை அனுராகா கவனிப்பதாக இல்லை.

விழிகளில் ஒரு பளபளப்புடன் அனுபமாவை ஏற இறங்கப் பார்த்தவள், ''ஓகோ! அசல் அருகில் இல்லாததால் நடிக்க வந்த நகலா? இப்போதுதான் அசலே வந்துவிட்டேனே. இனி நகலுக்கு அவசியம் என்ன? உடனே நீ வீட்டை விட்டு வெளியேறு...'' என்றாள் அதிகாரமாக.

24

அனுராகா அவளை விரட்டிய வேகத்தில் [illegible] அயர்ந்து போனாள்.

வித்யாதரன் போகலாம் என்று கொடி காட்டினால் இவள் வெளியேறவே சொல்லிவிட்டாளே! ஜோடிப் பொருத்தம் சரியாகத்தான் இருக்கும் போலும் என்று எண்ணியது கைத்த மனம்.

அப்படிப் போய்விட முடியாமைக்கு முன்பு இருந்த காரணங்கள் ஓர் அரைமணி நேரத்தில் இல்லாமல் போய்விடுமோ? ஆனால் இப்படி விரட்டுகிறவளிடம் என்ன சொல்லி எப்படிப் புரியவைப்பது?

அவள் யோசித்த நேரம்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாதது போல, ''என்ன? எதை எல்லாம் தட்டிக் கொண்டு போகலாம் என்று திட்டம் போடுகிறாயா? அல்லது நான் சொன்னது உன் மண்டைக்குள் ஏறவே இல்லையா?'' என்று அதட்டினாள் அனுராகா.

நெஞ்சில் குத்த வேண்டும் என்பதற்காகவே கூறிய வார்த்தைகள்!

இழுத்துப் பிடித்த அமைதியுடன், ''உங்களுக்குத்தான் விஷயம் புரியவில்லை அனுராகா. நீங்களாக நடிப்பதற்காகவே நான் இங்கே வந்த போதும், இப்போது நான் இந்த வீட்டு மருமகள். வித்யாதரனுக்கும் எனக்கும் சட்டபூர்வமான திருமணமே நடந்துவிட்டது. அதனால்.... என்று அவள் சொல்ல வந்ததை முடிக்குமுன், ''நீ எப்படியடி என் வித்தியைத் திருமணம் செய்து கொள்ளலாம்'' என்று சீறினாள் அனுராகா.

''எப்படி என்ன என்று விளக்க இப்போது நேரம் இல்லை, அனுராகா. இது முள் மேல் விழுந்த துணி. வித்யாதர், அத்தை, நீங்கள்... யாருக்கும் பாதகம் இல்லாமல் எப்படிச் சீர் செய்வது என்று யோசித்துத்தான் எதையும் செய்ய வேண்டும். அதிலும் இப்போது அத்தையைத்தான் முதன்மையாக வைத்துப் பார்க்க

வேண்டும். சிறு அதிர்ச்சிகூட அவரது உயிரைக் குடித்துவிடக் கூடும் என்கிறார் டாக்டர். அதனால் இப்போதைக்கு குறைந்தது வித்யாதரன் திரும்பி வரும்வரை அவர்களிடம் எதையும் சொல்ல வேண்டாம். என் தோழி என்று அறிமுகப்படுத்துகிறேன். அதற்கேற்ப நடந்து கொண்டீர்கள் என்றால்... இப்போதைக்கு மட்டும்தான்.... பிளீஸ்... அத்தைக்காக....'' என்றபோது அவளை அறியாமல் அனுபமாவின் குரல் தழைந்து யாசித்தது.

சில கணங்கள் தீவிரமாக யோசித்துவிட்டுச் சரியென்று தலையசைத்தாள் அனுராகா. அமெரிக்கச் சூழ்நிலை வெறுத்து விட, இங்கே வித்யாதரனிடம் நெளிந்து குழைந்து எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று வந்தால் அவனுடைய மனைவி என்று ஒருத்தியைக் காண நேர்ந்தது. அவளுக்குப் பெரும் அதிர்ச்சிதான். ஆனால் அந்த மனைவி அவளை அடித்துத் துரத்தாததோடு, அவளுக்கு பாதகம் இல்லாதபடி ஏதோ செய்ய வேண்டும் என்கிறாளே! அவளும் குறுக்கு வழியில் வந்ததாலா? அவள் பேச்சிலேயே விட்டுப் பார்க்கலாம் என்று முடிவு செய்தாள் அனுராகா. ஆனால் ஒரேயடியாக அல்ல.

வித்யாதரனின் கடிதங்களை எடுத்துக் கொள்கையில் அனுபமாவின் மனம் மேலும் சோர்ந்திருந்தது. அந்தத் தரகர் இருந்திருந்து இரவில் ஏன் வந்தார், எத்தனை மணிக்கு வந்தார். என்ன சொன்னார் என்றெல்லாம் சிவகாமி துருவினால், என்னவென்று பதில் சொல்லுவாள்?

இடி, மின்னல், காற்று, மழை எல்லாம் ஒன்றாகத்தான் வருமாம். சும்மாவே அவள் கலங்கித் தவிக்கையில் இன்னும் பார்த்து இந்த அனுராகா வேறு வந்து சேரவேண்டுமா?

கணவனின் அன்பு தனக்குரியது; ஒரு நெருக்கடி நேரிடுகையில்

அவன் துணை இருப்பான் என்ற நம்பிக்கை மட்டும் இருந்துவிட்டால் ஒரு பெண் எவ்வளவு பெரிய இடர் எதிர் வந்தாலும் கலங்காமல் சமாளிப்பாள். ஆனால் அந்த அடிப்படை மட்டும் அமையாது போகுமானால் அவளுக்குப் பூனையும் புலிதான்!

அனுபமா எதிர்பார்த்துக் கலங்கியது போல சிவகாமி அவளால் பதில் கூற முடியாத கேள்வி எதையும் கேட்டு விடவில்லை. தீவிரமாக யோசித்து, இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்ட தரகரைச் சந்தித்து அழைத்துச் செல்ல 'பென்ஸ்'காரில் வித்யாதரன் சென்றதாக அனுபமா சொன்ன கதையை அப்படியே ஒத்துக் கொண்டு, ''வித்யா ஒன்று செய்தால் அது சரியாகத்தான் இருக்கும். அடுத்த கடிதத்தை உடனே தொழிற்சாலைக்கு அனுப்பி விடு'' என்றதோடு அந்தப் பேச்சை விடுத்தார் அவர்.

அவரது கவனம் எல்லாம் மருமகளோடு வந்த புதிய பெண்ணிடமே இருந்தது.

தன்னுடைய தோழி என்று புதியவளை அறிமுகப்படுத்திய மருமகளைத் தலைசரித்து ஒருதரம் பார்த்தவர் புதியவளிடம் திரும்பி, ''வாம்மா'' என்று வரவேற்று, ''அனு முன்பே உன்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள். நீயும் அவளைப் போலவே பெற்றோரை இழந்து கஷ்டப்பட்டாயாமே, உன் பெயர் என்னம்மா?'' என்று வினவவும் ஒரு கணம் மவுனம் நிலவியது.

பெயரைப் பற்றி முன் கூட்டியே ஒன்றும் பேசிக் கொள்ள வில்லையே என்று அனுபமா திகைக்க, தலையை நிமிர்த்தி, ஒரு சவால் பார்வையுடன் அனுபமாவைப் பார்த்தபடி, ''அனுராகா'' என்றாள் அடுத்தவள்.

முழுக்க முழுக்க உன் விருப்பம் போல நான் ஆடி விட

மாட்டேன் என்று எச்சரிக்கிறாளா?

அனுபமா மேலும் கலங்குகையில், ''ஓகோ, உனக்கும் அதே பெயர்தானா? ஆனால் என் மருமகள் அனுபமா என்று ஆகிவிட்டதால் நீ 'அனுராகா'வாகவே இருப்பதில் எந்தக் கஷ்டமும் இராது'' என்று கூறி முறுவலித்தார் சிவகாமி.

மேலும் திணறிப் போனாள் மருமகள். இந்தப் பேச்சில் பூடகமாக ஏதும் இருக்கிறதா அல்லது வெறும் யதார்த்தம் தானா? மாமியாரின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவளுக்கு வித்தியாசமாக ஏதும் தெரியவில்லை. அதே லேசான அப்பாவித்தனமான அமைதிதான்.

தெரியக் காரணமும் இல்லையே. அவருடைய பிரிய மருமகளும் மகனுமாக எவ்வளவு பெரிய நாடகம் ஆடியிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரிய நேர்ந்தால்...

வித்யாதரன் இப்போது எங்கே இருக்கக்கூடும்? அனுராகா வந்திருப்பது தெரிந்தால் அவன் என்ன செய்யக் கூடும்? மீண்டும் அவள் மனம் கணவனிடம் ஓடியது.

இந்த அனுராகா ஒருத்தியாலேயே பெண்ணினத்தையே தாயார் தவிர மற்ற பெண்களை வெறுத்தவன்தான். ஆனால் அதே சமயம் அவளை மறக்கமாட்டாமல் அவன் தவித்ததும் அனுபமாவுக்குத் தெரியும்தானே. ஏதேனும் விளக்கம் கூறி இரண்டு தரம் நெளித்தாள் என்றால் வெறுப்பு கோபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடாதா?

மறைவதா? வெறுப்பும் கோபமும் அனுபமாவை நோக்கித் திரும்பும், விரும்பியவளோடு வாழ இவளல்லவா தடை என்று.

''என்னடாம்மா, சாப்பிடவே இல்லை? உனக்குப் பிடிக்கும் என்றுதானே இன்று பூரியோடு சன்னா மசாலா செய்யச் சொன்னேன். தொடவே இல்லையே!'' என்று சிவகாமி கரிசனம் காட்டவும் அவளுக்கு அடைத்துக் கொண்டு வந்தது.

இந்தத் தாயின் பரிவுகூட அவளுக்குக் கொடுத்து வைக்க வில்லையே. அப்படி ஓர் அதிருஷ்டம் இருந்திருந்தால் பெற்றவளைப் பத்து வயதில் இழக்க நேருவானேன்?

''வயிறு மந்தம் போல இருக்கிறது அத்தை, பசியே இல்லை'' என்று தட்டை ஒதுக்கினாள் அவள்.

அனுராகாவும் துடித்துக் கொண்டுதான் இருந்தாள் போலும். அவசரமாக அள்ளித் தினித்து விழுங்கியவள், சமையல்காரரிடம் சிவகாமி அம்மாள் மதியச் சமையல் குறித்துப் பேசிய நேரத்தைப் பயன்படுத்தி, ''நாம் இருவரும் பேச வேண்டும். நினைவிருக்கிறாதா? கிழவியோடு கொஞ்சுவதில் அதை மறந்துவிடாதே'' என்று தணிந்த குரலில் எச்சரித்தாள்.

அனுபமாவுக்கு அதே யோசனைதான். நிறையப் பேசவேண்டும். நடந்தது எல்லாம் சொல்ல வேண்டும்; அவற்றுக்கு விளக்கங்கள் கொடுக்க வேண்டும். இதில் வித்யாதரன் மீது பழிவராமலும் பாதுகாக்க வேண்டும். எப்படியும் அனுபமா சொன்னதை வைத்து, பிற்பாடு அனுராகா அவனிடம் குற்றம் காணுமாறு ஆகிவிடக் கூடாது.

இதற்கெல்லாம் நேரம் பிடிக்கும். சிவகாமி நடமாடத் தொடங்கியபிறகு வீட்டில் எந்த இடத்தில் எப்போது இருப்பார் என்று வரையறுப்பதற்கில்லை. சும்மாவே சற்று நேரத்தில் சிவகாமியின் அறைக்குப் போக வேண்டும். கடிதங்கள் பார்த்துவிட்டுப் பொதுப்படையாகப் பேச வேண்டும்.

''அத்தை, அனுராகாவுக்கு மீனாட்சி அம்மன் கோயில் சுற்றிக் காட்டி விட்டு வரலாம் என்று இருக்கிறேன். அவள் பார்த்ததே இல்லையாம்'' என்றபோது அவளுக்குத்

தொண்டை அடைத்தது.

''ஆமாம். அந்தக் கோவிலைச் சுற்றிப் பார்த்தபடியே இவளிடம் நான் நிறையப் பேசவும் வேண்டும்'' என்றாள் அனுராகா குரலில் அழுத்தத்துடன்.

தண்ணீரைக் குடித்து விட்டுத் தம்ளரை மேசைமேல் வைத்த போது அனுபமாவின் கைநடுங்கியது.

சிவகாமியின் பார்வை தம்ளரிலிருந்து மருமகளின் முகத்தை அடைந்தது. ''போய் வாருங்கள்'' என்று அனுமதி அளித்தவர், ''இன்று பக்கத்து ஊரில் சந்தை நாள் என்று ஞாபகம். நெரிசல் அதிகம் இருக்கும். அதனால் டிரைவரைக் கார் ஓட்டச் சொல்லம்மா'' என்றார்.

ஒத்துக் கொண்டு இருவரும் நகரத் தொடங்கிய போது அனுபமாவின் கையை பற்றி நிறுத்தினார். ''வித்யா ஊரில் இல்லாததால் சொல்லுகிறேன். ஏதும் சிக்கல் என்றால் தயங்காமல் என்னிடம் வாம்மா...'' என்றவர் அனுராகா திரும்பிப் பார்க்கவும், ''உன் தோழியும் உன் போலக் கஷ்டப்பட்டவள் தானே, அவளுக்கு ஏதேனும் பிரச்சினை, ஏதாவது உதவி தேவைப்பட்டால் செய்யலாமே என்றுதான்'' என்று முறுவல் செய்தார்.

மரியாதைக்காகத் தலையாட்டிவிட்டுக் கிளம்பினாள் அனுபமா.

இவ்வளவு அன்பு காட்டுகிறவர், அவருடைய [illegible] மகன் ஊரை விட்டுப் போனதற்கான காரணமே அவள்தான் என்பது அறிந்தால் என்ன சொல்லக்கூடும்?

வீட்டைவிட்டுக் கிளம்பிச் செல்கையில் அவரவர் பிரச்சினைகளில் ஆழ்ந்திருந்ததாலோ என்னவோ, தெருமுனையில் நின்றிருந்த ஆட்டோ ஒன்று உயிர் பெற்றெழுந்து [illegible]

பின்தொடர்ந்ததை இருவருமே அறியவில்லை.

கோவிலில் சுவாமியையும் அம்மனையும் தரிசித்து விட்டு அதன் பின் பேசலாம் என்று அனுபமா கூறியதை அடுத்தவள் ஒப்புக் கொள்ளவில்லை.

''ஏன் காலம் கடத்துகிறாய்? என்னென்ன கதை கட்டலாம் என்று யோசிக்கிறாயா? ஆனால் ஒன்று தெரிந்து கொள். பொய்கிய் சொன்னாயோ, நான் பொல்லாதவள் ஆகிவிடுவேன்'' என்று மிரட்டினாள்.

'வித்யாதரன் சொன்ன அளவில் பார்த்தால் நீ என்றுமே பொல்லாதவள்தான்' என்று எண்ணினாள் அனுபமா. பொய் சொல்லுகிறவள் நான் அல்ல என்று சொல்ல வந்தவள் [illegible]தையும் அடக்கினாள். பொய்யாலேயே வாழ்ந்துவிட்டு [illegible]ப்படிச் சொல்வது எப்படிச் சரியாகும்? ''அப்படிப்பட்ட [illegible]ண்ணம் எனக்கு இல்லை, அனுராகா. ஆனால் இன்றையச் [illegible]க்கலில் ஒரு நல்லவழி காட்டக் கடவுளால்தான் முடியும். [illegible]தனால்...''

பொறுமையற்று அவள் பேச்சில் குறுக்கிட்டாள் அனுராகா. [illegible]ந்தச் சாமிபூதம் என்பதில் எனக்கு நம்பிக்கையே கிடை[illegible]து. இல்லாததைக் கும்பிட்டு நேரத்தை வீணாக்காமல் நீ [illegible]தைச் சொல்லு'' என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். ''அதோ அந்தத் தூண் அருகில் உட்கார்ந்துக் கொள்ளலாம் [illegible] எனக்கு முழுவிவரமும் உடனே தெரிந்தாக வேண்டும்'' என்று அவசரப்பட்டாள் அவள்.

அனுராகாவை அனுபமாவுக்குப் பிடிக்கவில்லைதான். [illegible] வித்தியாதரனுக்கு ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் [illegible]கொடுக்கக் கூடும் என்றும் அவள் நம்பவில்லைதான். இவள் [illegible] செய்தாள். உள்ளே விடாதே என்று கூர்க்காவிலி[illegible]ந்து அத்தனை வேலைக்காரர்களிடமும் சொல்லி அவளை

விரட்ட முயன்றால் அனுபமாவால் முடியும்தான். அனால் அதைச் செய்ய முடியாமல் அன்பு அவளைக் கோழையாக்கி யது.

எதற்கும் அஞ்சாதவளாக தோன்றும் இந்தப் பெண் எதாவது கலாட்டா செய்து சிவகாமி வரை விஷயம் சென்று அவரது உயிருக்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற பயம் ஒரு பக்கம். நல்லவளோ, பொல்லாதவளோ - வித்யாதரன் விரும்புவது அனுராகாவைத்தான் என்று அறிந்த பிறகும் அவளை எப்படி விரட்டுவது?

அதே சமயம் சிவகாமியையும் வித்யாதரனையும் அடி யோடு பிரிந்து வாழ்வதை எண்ணிப் பார்க்கவும் அவளால் முடியவில்லை.

'நல்லவழி காட்டு தாயே' என்று மீனாட்சி அம்மனை மனதில் வேண்டிக் கொண்டு நடந்ததை எல்லாம் சொல்லத் தொடங்கினாள் அனுபமா.

முந்திய நாள் இரவு பற்றி மட்டும் மூச்சுக்கூட விடவில்லை. அவனைப் பற்றி அனுராகா தப்பாக நினைத்துவிடக் கூடாதே. அதேபோல பெயரளவுக்கென்று சொல்லித் தாலி கட்டியவளி டம் அவளது மனம் பறிபோனதையும் சொல்லாமலே மறைத் தாள். அதற்காக ஒட்டிக் கொள்ள விரும்புவதாக மற்றவன் எண்ணிவிடக் கூடாதே.

மற்றபடி முதல் நாள் சந்தித்த சூழ்நிலையில் இருந்து அவனுடைய தாயாருக்காகக் காதலியாக நடிக்கும்படி அவ கேட்டது, நடித்தது, தாயாருக்காகவே திருமணம் செய் எல்லாம் சொல்லி முடித்தாள் அனுபமா. வித்யாதரன் போது வீட்டில் இல்லாததன் காரணம், என்று அவனுடை தாயாருக்கும், அலுவலக நிர்வாகிக்கும் கூறியதை அனுரா டமும் உரைத்தாள்.

குறுக்கிடாமல் முழுவதையும் கேட்டு முடித்த அனுராகா சட்டெனச் சிரித்தாள்.

''இந்தியாவில் காலடி எடுத்து வைக்க மாட்டேன் என்றேன். என் மகன் உன்னை இங்கே கூட்டி வருவான் என்று சவால் விட்டாள் கிழவி. நினைத்தது நடந்துவிட்டது. அமெரிக்காவிலி ருந்து பறந்து வந்து மகனைக் கட்டிக் கொண்டாள் மருமகள் என்று நினைத்து என்ன திண்ணக்கமாக உட்கார்ந்திருக்கிறாள்! ஆனால் உண்மை தெரியும்போது அவள் மூஞ்சி எப்படி மாறும்! பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது'' என்று அவள் கூறவும் அனுபமா பதறிப் போனாள்.

''அய்யோ! வேண்டாம் அப்படி ஏதும் செய்து விடாதே. அவர்களுக்கு அதிர்ச்சி தாங்காது. அப்புறம்... அப்புறம் வித்யாதர் உன்னை... உங்களை மன்னிக்கவே மாட்டார்'' என்றாள் பதட்டத்துடன்.

அனுராகாவின் பார்வை வேறெங்கோ போய்த் திரும்பியது. ''சரி சரி. இதற்குமேல் என்ன செய்வது என்று பிறகு பேசலாம்'' என்று எழுந்தாள்.

இருவருமாகச் சற்று தூரம் நடந்தபின், ''உள்ளே எனக்குத் தெரிந்த ஒருவரைப் பார்த்தேன். அவருக்கு என் பெயரில் நீ இருப்பது தெரிவது சரியில்லை. அதனால் நீ காரில் காத்திரு. நான் அவரிடம் பேசிவிட்டு வருகிறேன்'' என்று அனுபமாவை அனுப்பிவிட்டு மீண்டும் வந்த வழியே சென்றாள் அனுராகா.

எங்கோ பார்த்தபடி சென்றவள் சட்டென நின்று, அருகே தூண் மறைவில் நின்றவனைச் சட்டையைப் பிடித்து நிறுத்திப் பிரியாள். ''சென்னையில் ரெயில் நிலையத்திலிருந்து நீ என்னை தொடர்ந்து வருவதை நான் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன். இல்லை என்று சமாளிக்கப் பார்க்காதே. உன்னைப் போலீசில் பிடித்துக் கொடுப்பதற்காக உன்னை

நிறுத்திப் பேசுகிறேனோ என்று பயப்படாதே. ஆனால் உண்மையைச் சொல்லு. என்னோடு உட்கார்ந்திருந்த பெண்ணை உனக்குத் தெரியும்தானே?'' என்று கேட்டாள்.

''அவள்....'' என்று அவன் இழுக்கவும், ''இதோ பார், அவள் எனக்கு வேண்டியவள் அல்ல. தொல்லைதான். உனக்கும் தீங்கு செய்திருந்தால் சொல்லு. இரண்டு பேரும் சேர்ந்து ஏதாவது செய்யலாம்'' என்று எடுத்துக் கொடுத்தாள் அனுராகா.

சட்டென முகம் தெளிய, ''அவள் சொன்ன கதையைக் கேட்டீர்கள் அல்லவா? தன்னை நல்லவளாகக் காட்டிக் கொள்ள கொஞ்சம் மாற்றிச் சொல்லிவிட்டாள். அவள் வீட்டுக் கொடுமையில் இருந்து அளைக் காப்பாற்றி அழைத்துப் போனால், ஒரு பணக்காரனை வளைத்துப் பிடித்துக் கொண்டு என்னை அம்போ என்று விட்டுவிட்டுப் பறந்துவிட்டாள். அவமானம் தாங்காமல் அலைந்து திரிகிறேன்'' என்று சோகமாகச் சொன்னான், அவன். சொன்னவன் ரகுபதி.

25

அனுராகா ரகுபதியிடம் முதலில் சொன்னது

தனியாகச் சுற்றுகிற பெண். தொழிலுக்குத் தள்ளிக் போய்விடலாம் என்றுதான் ரகுபதி அனுராகாவைப் தொடர்ந்ததே. ஆனால் அவள் சென்ற டாக்சி ஒரு பங்களாவினுள் செல்லவும் சோர்ந்து போனான்.

டிக்கட் வீண் என்று கூடத் தோன்றிவிட்டது. ஆனாலும் ஒரு நப்பாசை. இந்தப் பெண்ணின் நடை உடை பாவனைகளில் ஒரு நம்பிக்கை வைத்துக் காத்திருந்தான்.

காரினுள் முதலில் அவன் அனுபமாவைப் பார்க்கவில்லை.

ஆனால் சோபாவில் அந்த ரயில் பெண்ணோடு அனுபமாவைக் காணவும் அவனுக்கு அதிர்ச்சியோடு கொதிப்பும் கூட. ஆறு மாதங்களை வீணாக்கிக் கையில் கிட்டிய பிறகு தப்பிச் சென்று விட்டாளே!

இருவர் கண்ணிலும் பட்டுவிடாமல் ஒட்டி ஒட்டிச் சென்று கவனித்தான்.

அனுபமாவுக்கு மிருதுவான குரல்தான். ஆனால் அவளது வார்த்தைகள் தெளிவாக இருக்கும். எனவே அவள் தணிந்த குரலில் பேசியபோதும், ஒன்றிரண்டு வார்த்தைகள் அவனது செவிக்கு எட்டாத போதும் கூட நடந்த கதையை ஊகித்துவிட முடிந்தது.

இதை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் ரயில் பெண் திரும்பி வந்து சட்டையைப் பிடித்து விட்டாள்.

முதலில் மாட்டி வைத்து விடுவாளோ என்று பயம்தான். ஆனால் அவள் தொடர்ந்து பேசப்பேச அவன் தேன் குடித்த நரியாகிப் போனான்.

இந்தப் பெண்ணின் உதவியோடு அனுபமா கிடைத்து விட்டால் அவளுக்காகச் செலவு செய்த நேரமோ பணமோ வீணாகாது. கூடவே பழிவாங்கி விடும் திருப்தி வேறு.

கூடவே இவளும் கூடுவாளானால்....

தரைத்தளத்துக்கு மேல் தளமாக ஏகப்பட்ட உயரத்துக்கு மனக்

கோட்டை எழும்பியது.

''நாளை இதே இடத்தில் இதே நேரத்... இல்லை, மாலை சுமார் ஐந்து மணிக்குச் சந்திக்கலாம். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று திட்டமிடலாம்'' என்று கூறினாள் அனுராகா.

உற்சாகத்துடன் ரகுபதி தலையாட்டவும், ஒரு கணம் அவனை வெறித்து நோக்கி, ''இதோ பார் ரகுபதி, என் வழியில் கிடக்கும் தடைக் கல்லை அகற்றத்தான் உன்னோடு கூட்டு சேருகிறேன். வேறு எதுவும் முயன்றாயானால்... அப்புறம் நீ வருத்தப்படும்படி ஆகிவிடும். ஜாக்கிரதை'' என்று எச்சரித்து விட்டுத் திரும்பி நடந்தாள் அவள்.

வாயடைத்துப் போய் அவளது முதுகை வெறித்த ரகுபதியின் கண்களில் அவளது இடை அசைந்த விதம் படவும், அவன் முகம் மீண்டும் மலர்ந்தது.

வீட்டில் தனியாகக் கிடைத்த ஒவ்வொரு நிமிடமும் அனுபமாவை ''என்ன? என்ன?'' வென்று துளைத்து எடுத்தாள் அனுராகா.

அந்த வீட்டின் உரிமைக்காரிதானே என்பதில் அனுராகாவுக்குச் சந்தேகமோ, அதை அனுபமாவிடம் சொல்வதில் தயக்கமோ கொஞ்சமும் இருக்கவில்லை.

அவள் கேட்டதெல்லாம் உரிய இடத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டு அனுபமா எப்போது, எப்படி வெளியேறிப் போகிறாள் என்பதைத்தான்.

வித்யாதரன் வந்துவிடட்டும், அதன்பின் அவன் சொன்னால் செய்யலாம் என்று அனுபமா வேண்டிக் கொண்டதை அலட்சிய காதிலேயே போட்டுக் கொள்வதாக இல்லை.

இதற்கிடையில் அனுபமாவுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த காரை எடுத்துக் கொண்டு விருப்பம்போலச் சுற்றினாள். அனுபமாவின் விலை உயர்ந்த சேலைகளை - அவளே தனக்கு உரிமையில்லை என்று எண்ணி உடுத்திக் கொள்ள வாங்கி அப்படியே வைத்திருந்த சேலைகள் அவை.... அவற்றை அனுமதி கேளாமலே உடையவள் போல எடுத்துக் கட்டிக் கொண்டாள். அனுபமாவின் பொருட்கள் அத்தனையும் எடுத்துப் பயன்படுத்தினாள்.

இவை அனைத்திற்கும் மேலான கொடுமையாக, வித்யாதரனும் அவளுமாகக் கொஞ்சி விளையாடியதையும் காதல் புரிந்ததையும் வாய் ஓயாமல் சொல்லி அனுபமாவை வதைத்தாள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு சகிக்க முடியாமல் அனுபமா ஒரு நாள், ''இவ்வளவு ஒட்டி உறவாடியவர்கள் அப்படி ஒரு கடிதத்தை அனுப்பாமல் அன்றே வந்திருக்கலாமே'' என்று சொல்லி விட்டாள்.

''அப்...படி ஒரு கடிதமா? அப்படி என்ன கடிதம்?'' என்று அனுராகா விழிகளை விரிக்கவும், குழப்பமுற்று, ''அதுதான். இந்த வறண்ட இந்தியாவில் வயதான கிழவிக்குச் சேவைச் செய்யப் பிறக்கவில்லை... என்று... என்று...'' என்று அனுராகாவின் முகம் மாறியவிதத்தில் வாக்கியத்தை முடிக்க மாட்டாமல் திணறினாள் அவள்.

''அந்த மாதிரி நான் எழுதவே இல்லையே!'' என்று விழிகளோடு கைகளையும் விரித்தாள் அனுராகா. ''என் காதலன் மோப்பம் பிடித்துவிட்டான்; அவனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுக் கிளம்பிவர நாளாகும் என்றல்லவா எழுதி இருந்தேன்'' என்று அவள் புரியாத குழந்தையாக இமைகளைப் படபடக்கவும் அனுபமா மேலும் குழம்பிப் போனாள்.

பின்னே வித்யாதரன் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? கசப்பும் வெறுப்புமாக அவன் குரல் நினைவு வரவும் மீண்டும் அவள் மனம் தெளிவுற்றது. ஊகூம். அது பொய்யில்லை. இல்லை இல்லை. நான் சொன்னதுபோலக் கடிதம் வந்ததாகத் தான் அவர்... வித்யாதரன் சொன்னார். அவர் அவசியமற்றுப் பொய் சொல்லமாட்டார்'' என்றாள் உறுதியான குரலில்.

ஒரு கணம் தீயெழ விழித்த அனுராகா உடனே விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள். கிள்ளைக் குரலில், ''பின்னே என் கடிதம் என்ன ஆகியிருக்கும்?... ஓகோ, இப்போது புரிகிறது. வித்தியாவிடம் கடிதம் கொடுத்தது ஒரு கிழவன்தானே?'' என்று விசாரித்தாள்.

இந்தக் கதையெல்லாம் நடந்து முடிந்த பின்னரே வித்யாதர னுக்கு அறிமுகமான அனுபமா தெரியாது என்றே பதிலுரைக்க நேர்ந்தது. வித்யாதரனும் 'தேவைப்படுகிற அளவுக்கு மேல் சொந்த விஷயம் பேசியதில்லையே என்று உள்ளூர ஏக்கத்து டன் நினைத்தாள் அவள். மனதில் அன்பிருந்தால்தானே பேசுகிற ஆசையிலேயே எல்லாவற்றையும் கொட்டிவிட தோன்றும்....

''வயதானவன் ஆயிற்றே, கடிதத்தை ஒழுங்காகக் கொண போய்க் கொடுப்பான் என்று அவனிடம் கொடுத்தேன் ராஸ்கல், அப்போதே கூலியாக முத்தம் கேட்டான். முடி என்றேனா, ஏதோ திரிசமன் செய்துவிட்டான். பாவிப் பழிகாரன்! நான் ஆனால், என் வித்திரன் ஒரு கடிதம் எழுதவில்லை என்று ஏங்கி ஏங்கித் தவித்துவிட்டு ஆயிற்றோ என்று நினைவிலேயே ஓடி வந்தால் இங்கே கடிதத்தை நம்பி என் வித்தி என்னென்னமோ செய் டாரே!'' என்று புலம்பினாள் அனுராகா.

இவள் சொல்வது மெய்யாகவே இருக்க கூடுமோ?

கணம் சந்தேகப்பட்ட அனுபமா, அது மெய்யாகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தாள். ஏனெனில், வித்யாதர னோடு ஒட்டி உறவாடி அவனது அன்பை அனுபவித்த ஒரு பெண்ணால் எப்படி அவனை நிராகரிக்க முடியும்? முடியாது என்பதற்கு அவளே சான்று ஆயிற்றே.

அனுராகாவின் கூற்று மெய்யாகவே இருக்கலாம் என்று தோன்றியதுமே அனுபமாவுக்கு அவளிடம் வெகுவாக மனம் இளகிப் போயிற்று.

இவள் நல்லவளாக இல்லாமல் இருக்கலாம். நாவடக்கம், நாப்புக்கு மரியாதை, அடுத்தவர் பொருள் என்றெல்லாம் பார்க்கும் பண்பாடு இல்லாதவளாகவும் இருக்கலாம். ஆனால் வித்யாதரனிடம் உண்மை அன்பு வைத்தவள். அவனும் அப்படித்தான். இந்த அன்பு அழிவது நியாயமில்லை.

'ஆனால் நீ வைத்த அன்பு? அதுவும் உண்மையானதுதா னோ?' என்று குரல் கொடுத்த மனதை, அது ஒருதலைக்காதல்; உள்ளேயே மடிய வேண்டியதுதான் என்று அடக்கி வைத்தாள் மிஞ்சிய வேதனையோடு.

இவ்வளவெல்லாம் யோசித்துப் பார்த்தும், இடையறாது அனுராகா போ போ என்று விரட்டியும் அனுபமாவால் நிரந்தரமென்று விலகிப் போய்விட முடியவில்லை. வித்யாதரன் திரும்பி வந்ததும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு... என்று மனம் அதிலேயே உழன்றது.

வித்யாதரன் வெளியூர் சென்றதும், தினமும் தலைமை ஆபீஸ் வீட்டுக்கு வந்து சிவகாமி அம்மாளோடு தொழில் விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பது வழமை ஆயிற்று.

இருந்தாலும் அவர் அப்படி வந்து சிவகாமியோடு பேசித் தொலைத்திருந்தபோது, இங்கே அனுராகா அனுபமாவை

வறுத்து எடுத்தாள். ''என்னவோ உயிர்போய் விடும் நோயாளி; அது, இது என்று பயப்படுவதுபோல் பாவலா செய்தாயே! கல்லு குண்டு மாதிரி உட்கார்ந்து கொண்டு கிழவி தொழில் விவகாரங்களை அலசுவதைப் பார். இவளுக்காக இனியும் பார்ப்பதற்கு இல்லை. மரியாதையாக உடனே கிளம்பிவிடு'' என்று படபடத்தாள்.

''... அவர் வந்ததும் அவரிடம்...''

''பிரியாவிடை பெற்றுக் கொள்ள வேண்டுமா? ஏன்? அப்படி என்ன உங்களுக்குள்? நீ சம்பளத்துக்கு நடிக்க வந்தவள்தானே? எனக்குப் பதிலாக நடிக்க வந்தவள். இப் போது நானே வந்து விட்ட பிறகு உனக்கு என்ன அவசியம் சொல்லு? பேசிய சம்பளத்தை வாங்கிக் கொண்டு, தாலியை கழற்றித் தந்துவிட்டு நடையைக் கட்ட வேண்டியதுதானே? என்ன? என்ன அதிர்ச்சி? என்ன நாடகத் தாலிதானே? சங்கிலியின் பருமனைப் பார்த்தா? பத்து பவுன் தங்கத்தைவிட மனம் இல்லையா?'' என்று மேலும் குமுறினாள் அனுராதா.

பொறுக்க மாட்டாமல், ''நான் ஒன்றும் தங்கத்துக்காகப் பார்க்கவில்லை'' என்றாள் அனுபமா.

''பின்னே? வேறு என்ன? புனிதத்தாலியா? நீ....'' என்று வள் விழிகளை இடுக்கி அனுபமாவை கூர்ந்து நோக்கி ''வித்யாதரன் திடுமென இரவோடு இரவாகக் கிளம்பிப் போகும்படி அன்று என்ன நடந்தது?'' என்று கேட்க அனுபமாவின் முகம் சிவந்து போயிற்று.

அவள் ஒவ்வென்றையும் சமாளித்துக் கொண்டு பேச கூறுமுன், ''ஓகோ! இப்போது புரிகிறது'' என்று அனுராதா தொடர்ந்தாள். ''அன்னக்காவடி நீ இங்கே அதிகப்பிரசங்கி கண்டதும் உடும்பாய்ப் பிடித்துக் கொள்ளத் திட்டம் போட்டிருப்பாய். அன்று இரவு அவரை வளைத்து விட முயற்சி

தாயா? நெளிந்து குழைந்து... அதனால்தான் ஓடி விட்டார்... இல்லையா?''

அமெரிக்காவிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்தவள் எனும்போது இவளுக்குத் தமிழ் நன்றாகவே பேச வருகிறது. அதிலும் அடுத்தவர் மனதை நோகடிப்பதற்கு என்றால் மிகவும் நன்றாகத் தமிழ் பேசுகிறாள் என்று சம்பந்தா சம்பந்தமற்று நினைத்தாள் அனுபமா.

உடனேயே அவளது அநியாயமான குற்றச்சாட்டு நினைவு வர, ''அப்படி எதுவும் நடக்கவில்லை'' என்று மறுத்தாள்.

''பின்னே? இதற்குப் பதில் சொல்லு. தொழிற்சாலை விஷயமாக வித்தி வெளியூர் சென்றிருப்பதாகச் சொன்னது பொய்தானே?''

''.....''

''கரெக்ட். நான் நினைத்தது சரிதான். நீ இருக்கும் வீட்டில் இருக்கப் பிடிக்காமல் - நீதான் அவரது அறையிலேயே உட்கார்ந்திருக்கிறாயே - இங்கே தங்கப் பிடிக்காமல் வீட்டை விட்டுப் போய்விட்டார். இனி நீ இங்கிருந்து போனால் ஒழியத் திரும்பி வரமாட்டார். நீயானால் அசைவேனா என்று அழிச்சாட்டியம் செய்கிறாய்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

அனுபமாவுக்கு உள்ளூர இருந்த சந்தேகத்தையே அடுத்தவர் நம் கூறவும் காயத்தில் கத்தியால் திருகினாற்போல ஆயிற்று. கண்ணீரை அடக்கிக் கொண்டு, ''போ... போய் விடுகிறேன். ஆனால்....'' என்று மேலே அவள் தொடருமுன் கோபத்துடன் உறுக்கிட்டாள் அனுராதா.

''ஆனால் அவர் வரட்டும் என்று சவ்வு இழுக்கப்போகி றாய்... அதுதானே. கல்யாணம் ஆனால் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் என்கிற மாதிரி

இங்கேயே உட்கார்ந்திருக்கப் போகிறாய், அப்படித்தானே? நீ இருக்கும்வரை அவர் வரப்போவது இல்லை என்றேனே. புத்தியில் படவே இல்லையா? அல்லது புத்தி இல்லையா?'' என்று சீறினாள்.

இந்த வீட்டிலிருந்து என்னை வெளியேறச் சொல்ல நீயார்? என்று அனுபமாவால் பதிலுக்குச் சீற முடியவில்லை. தானிருக்கும் இடம் அவளுடையது என்னும் நினைவு அவளை பனிந்தே போகச் செய்தது.

''கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், அனுராகா'' என்றாள் மெல்லிய குரலில் அவள்.

''என்னத்தைப் பொறுப்பது? சீக்கிரம் ஒரு முடிவுக்கு வா. என் வீட்டிலேயே விருந்தாளியாக இருக்க இனியும் என்னால் முடியாது. என்ன ஆனாலும் ஆகட்டும் என்று கிழவியிடம் உடைத்துச் சொல்லிவிடப் போகிறேன். அந்தக்கிழவி உயிரோடுதான் இருந்தாக வேண்டும் என்கிற அவசியமும் எனக்குக் கொஞ்சமும் இல்லை'' என்று அனுராகா மிரட்டவும் அனுபமா நடுங்கிப் போனாள்.

முகம் வெளுக்க, ''அய்யோ! அப்படி ஏதும் அவசரப்பட்டுச் செய்துவிட வேண்டாம் அனுராகா. நான்... நான்... அவர்களுக்கு ஆபத்து இல்லாதபடி என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். ஆனால் யோசியுங்கள், நான் அவர்களுடைய மருமகள்... மருமகள் என்ற நிலையில் இருக்கிறேன். அவர்களுக்கு அதிர்ச்சி தராத வகையில் என்னவென்று சொல்லி நான் அடியோடு விலகிப் போக முடியும்?'' என்று விளக்கினாள்.

அய்யோ, என்னை இப்படியே விட்டுவிடேன் என்று கெஞ்சாமல் கெஞ்சியது அவளது குரல்.

ஆனால் ரத்த வாடை கண்டுவிட்ட புலிபோல, சிவகாமியிடம் அனுபமா கொண்டிருந்த அன்பில் அவளைக் கிளப்ப வெறிகண்டுவிட்ட அனுராகாவும் விடுவதாக இல்லை. ''இலகுவாகப் போகலாமே. உன் தோழி ஒருத்திக்குத் திருமணம். அழைத்திருக்கிறாள். போக வேண்டும் என்று சொல். வேண்டுமானால் நானே கையெழுத்தை மாற்றி அப்படி ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். கிழவியிடம் அதைக் காட்டிவிட்டுக் கிளம்பு. போன இடத்தில் காய்ச்சல், அதிகக் காய்ச்சல், மோசம், செய்துவிட்டாள் என்று கிழவியை உன் இழப்புக்குத் தயார்படுத்தி விடுகிறேன். கூடவே இங்கே நீ செய்த மாய்மாலங்களை எல்லாம் நானும் செய்து என்னை ஒத்துக் கொள்ள வைத்துவிட்டு உன் இடத்... உன் இடம் என்ன, எனக்குரிய இடத்தில் நான் அமர்ந்து கொள்கிறேன்'' என்றாள் இரக்கமற்று.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, ''அ.... அவர்... விசாரிக்க அத்தை மகனை அனுப்ப மாட்டார்களா'' என்றாள் அனுபமா.

முழுகுகிறவன் துரும்பையும் பற்றுகிற கதைதான். ஆனால் அதை இலகுவாகவே உடைத்தெறிந்தாள் அனுராகா. ''உங்களைப் பிடிக்காமல் விலகிப்போய் விட்டாள். கிளற வேண்டாம் என்ற வித்தியை நான் சரிப்படுத்திக் கொள்வேன். அத்தோடு நான் அருகில் இருக்கும்போது அவருக்கு வேறு நினைவு எப்படி வரும்?'' என்றாள் ஒரு குரூரப் பார்வையுடன்.

அனுபமா அடிபட்டுப் போனாள்.

மறுநாளே அனுபமாவுக்கு ஒரு விலைபேசி முடித்துவிட்டாள். இப்போது வித்யாதரன் திரும்பிவிடுமுன் அவளை வெளியேற்றுவதுதான் பாக்கி.

ஆனால் அதில் சிக்கல் இருந்தது.

அனுபமா திடுமென எங்கோ மறைந்துவிட்டதாக இருக்கக் கூடாது. அவளோடு சேர்ந்து வெளியே செல்லும்போது காணாமல் போனதாகவும் இருக்கக் கூடாது. எந்த விதத்திலும் போலீசை நாடக்கூடிய விதமாய் எதுவும் நடக்கக்கூடாது. போலீசார் கிளறத் தொடங்கினால் கண்ட குப்பையும் பறக்கத் தொடங்கிவிடலாம்.

அதைவிட அனுபமா அவளாகவே, எந்தவிதமான பரபரப் புக்கும் இடம்ளிக்காமல் வெளியேறுவது நல்லது. வெளியேற்றி ரகுபதியிடம் ஒப்படைத்துவிட்டால் பிறகு அவன்பாடு.

வித்யாதரன் திரும்பி வருமுன் அனுபமாவை வெளியேற்றி விட வேண்டும் என்பதிலும் அனுராகா உறுதியாக இருந்தாள்.

இந்த அனுபமா வாய்விட்டு சொல்லாவிட்டாலும் அவர்கள் இருவருக்கும் இடையே ஏதோ நடந்திருப்பது நிச்சயம். இல்லாவிட்டால் அந்தப் பேச்சை எடுத்தாலே இவள் முகம் சிவக்கத் தேவையில்லை. அது கோபச் சிவப்பும் அல்ல.

ஆனால் அவளை அகற்றிவிட்டால் பிறகு வித்யாதரனை வளைப்பது கடினம் என்று அவளுக்குத் தோன்றவில்லை. சரியான விகிதத்தில், கற்பனை, கண்ணீர், செக்ஸ் மூன்றையும் கலந்தால் போதும். முன்னொரு தரம் இதே கவலை அவளுக்கு வெற்றி தேடித் தரவில்லையா?

26

"நன்றாகக் கேட்டுக் கொள். ஏதாவது உருப்படாத காரணங்களைச் சொல்லி இனியும் நீ காலம் கடத்த முயற்சித் தால் உன் அருமை அத்தையம்மாள் நெஞ்சு வெடித்துச் சாவது நிச்சயம். அந்தம்மாளுக்கு என்ன ஆனாலும் ஆகட்டும் என்று உன் சித்து வேலை அத்தனையையும் அவர்களிடம் சொல்லி விடுவேன்" என்று கடினமான குரலில் அனுராகா மிரட்டவும் அனுபமா முழுமையாகப் பணிந்து விட்டாள்.

பாசம் வைத்து விட்டதால் இன்றைக்கு இந்தப் பிரிவு வேதனையைத் தந்தபோதும், முதலிலிருந்தே இந்த உறவு சாசுவதம் அல்ல; இடையில் முடிவது என்பது அவள் அறிந்ததுதான். மிஞ்சி மிஞ்சி ஆறுமாதம் என்று அன்றே சொன்னானே.

ஆனாலும், அனுராகா என்னதான் சொன்னாலும், இடை யில் ஓர் இரவை மறந்து வேலை அளவிலேயே பார்த்தாலும், அந்த வேலையைத் தந்த வித்யாதரனிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் விலகுவது பிசகு என்றுதான் அனுபமாவுக்குத் தோன்றியது. ஆனால் அதற்காகப் பார்த்தால் சிவகாமி அம்மாளின் உயிருக்கு ஆபத்தாகி விடும் என்று உணர்ந்ததால், அனுபமா உடனடியாகவே கிளம்பத் தயாரானாள்.

கண்ணை மறைத்துச் சூழ்ந்து வந்த இருளைக் கண்டு பயந்து, விடியலைத் தேடி சித்தப்பா வீட்டிலிருந்து வெளியே நடந்தது அவளுக்கு நினைவு வந்தது. இப்போதோ, வாழ்வு முழுவதுமே விடியாத இரவாகவே முடிந்துவிடும்போல

உணர்ந்தாள் அவள். வித்யாதரனை இழந்தபின் விடியலாவது, வெளிச்சமாவது?

அன்று வருகையில் நிர்வாகி, ''சின்னவர் டெலிஃபோனில் பேசினாரம்மா'' என்ற சேதியுடன் வந்தார். வீட்டு நம்பருக்குத் தான் முயற்சி செய்தாராம். கிடைக்கவில்லையாம். வீட்டில் நீங்கள், மருமகள் எல்லாம் எப்படி இருக்கிறீர்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டார். உங்கள் மருமகள் பற்றி நான் சொன்னது சரியாகக் கேட்கவில்லை போல. இருக்கிறார்களா இருக்கிறார்களா என்று இரண்டுதரம் கேட்டார். அப்....'' என்று நிறுத்தினார்.

''அப்புறம்?'' என்று சிவகாமியை முந்திக் கொண்டு விசாரித்தாள் அனுராகா.

''அப்புறம், தொழில் விவகாரம் சிலது சொன்னார்'' என்று முடித்துவிட்டார் நிர்வாகி.

அவருக்கு அனுராகாவைப் பிடிக்கவில்லை. சேலையைக் கூடக் கட்டுகிற விதத்துக்குத்தான் மரியாதை. இப்படிக் காட்டுவதற்கு அதைக் கட்டாமலேயே விட்டு விடலாமே!

அனுபமாவுக்கு இப்படி ஒரு தோழியா என்று ஒரு வருத்தம். அவள் வந்தபிறகு அனுபமாவின் முகம் அதிகமாக வாடியிருப்பதுபோல ஒரு எண்ணம். அவரும் சும்மா ஒன்றும் தலைமை நிர்வாகி ஆகிவிடவில்லையே.

பலவாறு யோசித்து, இந்தத் தோழி பற்றி அவராகவே முதலாளியிடம் ஒரு வார்த்தை போட்டு வைத்தார். தோழியின் பெயரை ஒரு முறைக்கு இருமுறையாக் கேட்டுக் கொண்டவர், வீட்டையும் கவனித்துக் கொள்ளும்படி கூறி வைத்துவிட்டான்.

ஆனால் அந்த விஷயம் இந்த அனுராகா முன்னிலையில் கூற அவருக்கு விருப்பம் இல்லை.

தலைமை நிர்வாகியின் செய்தி, அதைக் கேட்டிருந்த மூன்று பெண்களையும் மூன்று விதமாகப் பாதித்தது.

அனுபமாவின் முகம் அதிகமாக வாட, அனுராகாவின் முகம் யோசனையைக் காட்ட, இருவரையும் சிவகாமி கூர்ந்து நோக்க, அவரது பார்வையை உணர்ந்து இளம் பெண்கள் இருவருமே முகபாவனையைத் திருத்திக் கொண்டனர்.

மாலைச் சிற்றுண்டி முடிந்ததும், ''உன்னிடம் சற்றுப் பேச வேண்டும் அனு'' என்றார் சிவகாமி, மருமகளிடம்.

அனுராகா அசையாமல் இருக்கவும் ''தனியே'' என்றார் சுருக்கமாக.

அனுபமா செய்வதறியாமல் பேசாதிருக்க, ''எனக்குத் தெரியாமல் பேசுவதற்கு அனுபமாவுக்கு ஒரு விஷயமும் இருக்காதே'' என்று உதட்டை இழுத்து முறுவலித்தாள் அனுராகா.

''எனக்கு இருக்கிறதே'' என்றார் சிவகாமி அவளைப் போலவே.

முகம் கடுக்க விருட்டென்று எழுந்து போய் விட்டாள் அனுராகா.

அவள் காது கேளாத தூரம் செல்லும் வரையும் பொறுத்திருந்து விட்டு, ''என்னடா?'' என்றார் சிவகாமி கனிவாக.

தொண்டை அடைத்துவிட்டது அனுபமாவுக்கு. இவரிடம் மட்டும் எல்லாம் சொல்லிவிட முடியுமானால்? ஆனால் அது முடியாதே! அந்த அதிர்ச்சியே அவரைக் கொன்றுவிடுமே!

''ஒன்றும் இல்லையே அத்தை'' என்றாள் முடிந்த அளவு சமமையான குரலில்.

ஒருவினாடி நேரத்தை மவுனத்தில் கழியவிட்டு, ''இல்லை யென்றால் சரிதான். ஆனால் உன் பிரச்சனை என்று ஏதாவது இருக்குமானால் தயங்காமல் என்னிடம் வரலாம் என்று தெரியுமல்லவா?'' என்று பெரியவர் கூறவும், சற்று திகைத்து விட்டு, முயன்று முறுவலித்தபடி தலையாட்டினாள் மருமகள்.

பிரச்சனை இவரை எட்டிப் பாதித்து விடக்கூடாதே என்பது தான் பிரச்சனை. என் கையால் அந்தப் பிரச்சனையை இவரிடம் எப்படிச் சொல்வது?

ஆயினும் அவரது அன்பு இவளுக்கு பெரும் ஆறுதலைத் தந்ததால், சற்று நேரம் மாமியாரோடு சாதாரணமாகப் பேசிக் கொண்டு இருந்துவிட்டுக் கிளம்பினாள் அனுபமா.

இனி அனுராகாவை எதிர்கொண்டாக வேண்டும் என்று நினைக்கையிலேயே மனதில் சுமை ஏறியது. கூடவே இன்னொன்றும் நினைவு வந்தது. சற்றுமுன் சிவகாமி அனுராகாவை மட்டம் தட்டினார். அவருக்கு அது நல்லதில்லையே. இனி அவள்தானே எல்லாம்! அவளை அனுசரித்துப் போவது தானே அத்தைக்கு நல்லது.

சற்று நின்று, ''அத்தை, ஒன்று சொன்னால் கேட்பீர்களா...? வந்து எனக்காக இனி அனுராகாவிடம் இன்னும் கொஞ்சம் பிரியமாக நடந்து கொள்கிறீர்களா? ப்ளீஸ், அத்தை'' என்றாள் கெஞ்சலாக.

''ஓகே!'' என்று பெரியவர் தலையாட்டவும், அதற்கு மேல் என்ன, ஏது என்று அவர் கேள்வி கேட்கத் தொடங்குமுன் விரைந்தோடி விலகிச் சென்றுவிட்டாள்.

அறைக்குச் சென்றால் அங்கே அனுராகா போருக்குத் தயாராக இருந்தாள்.

விஷயம் புரியாமல் அந்தக் கிழவிதான் அவளிடம் பாரி

யாதை இல்லாமல் பேசினாள் என்றால் இவளும் எப்படி அதற்குத்தக ஆடலாம்?

வயதில் பெரியவர் அழைக்கும்போது அனுபமா வேறு என்ன செய்ய முடியும்? ஆனால் வேண்டுமென்றே குற்றம் சாட்டினால் என்ன பதில் சொலவது? சொல்வித்தான் என்ன பயன்?

அனுபமாவின் மவுனம் மேலும் சினமூட்ட, அனுராகா அடுத்த தாக்குதலைத் தொடங்கினாள். ''இன்றைக்கு என் வித்தியோடு நான் ஆசைதீரப் பேசியிருக்கலாம். எல்லாம் உன்னால் கெட்டது'' என்றாள் வெறுப்புடன்.

இது என்ன அநியாயமாய்ப் புதுக் குற்றச்சாட்டு என்ற ஆச்சரியத்துடன், ''எப்படி?'' என்று கேட்டு விட்டாள் அனுபமா.

''வேறென்ன? வித்தி வீட்டுக்கு டெலிஃபோன் செய்திருந்தால் என்னோடு பேச வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் அவர்தான் உன்னோடு பேச வேண்டியிருக்குமோ என்ற வெறுப்பில் வீட்டுக்கே ஃபோன் செய்யவில்லையே! யோசித்துப் பார், அப்படி வீட்டு எண் கிடைக்காமல் போகமுடியுமா? அதுவும் இரண்டு நம்பர்கள்? நீ போய்த் தொலைந்து விட்டாயா என்று தெரிந்து கொள்ள மட்டும் நிர்வாகியோடு தொடர்பு கொண்டிருக்கிறார். நீ இடித்த புளி மாதிரி இங்கேயே தான் இருக்கிறாய் என்று தெரிந்ததும் வைத்துவிட்டார். இன்னும் எத்தனை நாள் இப்படியே வீணாகப் போகிறதோ?...''

அனுபமாவுக்கும் இதே எண்ணம்தான். நிர்வாகி சொன்ன போதே, தோன்றி, அப்போதிலிருந்து அவளைப் புழுவாய் அரித்துக் கொண்டிருந்தது. அதையே அனுராகாவும் சொல்லுகையில் எப்படி மறுத்துப் பேசுவாள்?

ஆனால் அவளது மறுப்பையோ ஒப்புதலையோ அனுராகா பொருட்படுத்துவதாகவும் இல்லை. அவளே தொடர்ந்து பேசினாள். ''.....ஊகூம். இனி ஒருநாள் வீணாகவும் நான் விடப் போவதாக இல்லை. நீ நாளைக்கே கிளம்பியாக வேண்டும், அனுபமா'' என்று கட்டளையிட்டாள்.

''நாளையேவா?!'' என்று அதிர்ந்தாள் அனுபமா. அவ்வ ளவு சீக்கிரமாகவா?

''ஆமாம். நாளைக்கேதான்'' என்று அவள் சொன்னது போலவே பேசி வக்கணை செய்தாள் அனுராகா. ''ஏன் நாளைக்கு ஏதும் கெட்டநாளா? பரவாயில்லை. உன்னோடு சேர்ந்து கெட்டநாள், கெட்டநேரம் எல்லாம் இந்த வீட்டை விட்டு வெளியேறிவிடட்டும்...''

மனதைக் காயப்படுத்தவென்றே பேசிய பேச்சு. தடுத்து நிறுத்தக் கேடயமோ, எதிர்த்துப் போராட ஆயுதமோ இன்றிப் பேசாமல் வலி ஏற்றாள் அனுபமா.

''அதனால் நீ நாளைக்கேதான் கிளம்ப வேண்டும். நான் முன்பே சொன்னமாதிரி, உன் சினேகிதி எழுதியதுபோல திருமணத்திற்கு கட்டாயம் வருமாறு மீண்டும் மீண்டும் வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதுகிறேன். உன் பங்குக்கு நீயும் ஒரு கடிதம் எழுதிவை. மதியத் தபாலில் கடிதம் வந்தது. நாளையே திருமணம் என்பதால் இன்றே ஜனதாவில் கிளம்புகி றேன். நாங்கள் அயர்ந்து தூங்கியதால் எழுப்பவில்லை என்றும் உன் அருமை அத்தைக்கு எழுது. அப்புறம்... திருமணம் முடிந்ததும் உடனே திரும்பி வந்து சேருவதாக இன்னும் ஒரு வரி சேர்த்துக் கொள். சும்மா கடிதம் மெய்ப்பொ தோன்றுவதற்காகத்தான்... நிஜம் என்று நினைத்து நீ வேறு மனப்பால் குடிக்கத் தொடங்கிவிடாதே.

''நீ ஒரு வழியாய் வீட்டை விட்டுக் கிளம்பினபிறகு,

அப்புறம் இரண்டு நாட்களில் உனக்குக் காய்ச்சல் என்று தொடங்கி, படிப்படியாக அதே தோழி கையெழுத்தில் நானே கடிதம் எழுதி எனக்கு வந்ததாகக் காட்டுகிறேன்...''

இவள் ஒரு பெண். இன்னொரு பெண்ணின் வாழ்வை அழிப்பதற்கு ஒரு சிறு குற்றக் குறுகுறுப்பு கூட இல்லாமல் என்ன அனாயாசமாகத் திட்டம் போடுகிறாள். தன் சுகத்துக்கு தன் போகத்துக்கு எந்த இடையூறும் வரக் கூடாது என்பதை மட்டும்தான் பார்க்கிறாள்! இப்படி ஒரு தன்னலம் பிடித்தவ ளால் வித்யாதரனுக்கு நிம்மதியான வாழ்க்கையை எப்படித்தர முடியும்? ஆனால் இதைத் தடுக்கவோ மறுக்கவோ ஒரு வழியும் காணோம் என்று உள்ளூர ஏதேதோ எண்ணம் ஓட, அனுராகாவையே வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தாள் அனுபமா.

''... என்ன, புரிந்ததா? ஏன் அப்படி மடச்சி மாதிரி விழித்துக் கொண்டு நிற்கிறாய்?'' என்று அவள் அதட்டிக் கேட்கவும் சட்டென விழிகளைத் தாழ்த்தினாள்.

''ஏதேனும் சந்தேகம் இருந்தால் இப்போதே கேட்டுத் தொலைத்துவிடு''

என்ன உதாசீனம்!

நிமிர்ந்து, ''இதையெல்லாம் அத்தையும் அவரும் நம்புவார் களா? திருமண அழைப்பு என்றால் அதில் நடக்குமிடம் பற்றி விவரம் இராதா? கடிதம் வந்தால் அதில் அனுப்புகிறவர் முகவரி இராதா?'' என்று மடக்க முயன்றாள் அனுபமா.

முதலில் சற்று திகைத்தபோதும் உடனே அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தாள் அடுத்தவள். ''கடிதத்தோடு கூட வந்த உறையுடனிருந்த முகவரியை, முகவரிக்காக நீ எடுத்துச் சென்றதாகச் சொல்லிவிடுகிறேன். அப்புறம்... தோழியை ஒரு பட்டிக்காட்

டுப் பெண்ணாக்கி விட்டால்? அப்படிப்பட்டவள் அலுப்புகிற வர் முகவரியெல்லாம் எழுதிக் கொண்டு இருப்பாளா, என்ன? கடிதத்தில் எழுத்துக்களைக் கொஞ்சம் கோணல்மாணலாக எழுதினால் தீர்ந்தது...! முட்டாளுக்குப் பொருத்தமான முட்டாள் தோழி!'' என்று கூறித் தன் ஜோக்கைத் தானே ரசித்துச் சிரித்தாள்.

வித்யாதரனிடம் வார்த்தைக்கு வார்த்தை திருப்பிக் கொடுத்தவள் இப்போது வாயடைத்துப் போய் வாளா இருந்தாள்.

இரவு உணவுக்கு வரவே அனுபமாவுக்கு விருப்பம் இல்லை. ''சும்மா வந்து உட்கார்ந்து எதையாவது கொறி. இல்லாவிட்டால் கிழவி என்ன ஏது என்று இங்கே வந்து உட்கார்ந்து விடப்போகிறாள்'' என்று அதட்டியதால்தான் வந்தாள்.

அப்போதும் மனம் பொறுக்காமல், ''அத்தையைக் கிழவி கிழவி' என்று சொல்லாதேயேன், கேட்கக் கஷ்டமாக இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு, ''ஏன்? அவள் கிழவிதானே? அவ்வளவாக வயதாகாத மாதிரி 'மேக்கப்' செய்து கொள்கிறாள். கிழவியைக் 'கிழவி' என்பதில் என்ன தப்பு? அத்தோடு நான் யாரை என்ன சொல்லி அழைப்பது என்று நீ சொல்லித்தரத் தேவையில்லை. அதற்கு உனக்கு அருகதையும் இல்லை'' என்று வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

இன்று கடைசிநாள் என்ற நிலையில் ஓயாமல் உறுத்தி வருத்துகையில் அவளால் சற்றும் இயல்பாக நடந்து கொள்ள முடியாது போயிற்று.

இந்த வீட்டிலும் கூட, அவள் ஒரேயடியாக மகிழ்ச்சிக் கடலில் முக்குளித்தாள் என்று சொல்ல முடியாதுதான். ஆனாலும் தேர்நிலை வந்து சேர்ந்து விட்டாற்போல ஒரு தோர் அமைதி, பாதுகாப்பான ஓர் உணர்வு இருந்தது இனி

அதுவும் இராதே!

முன்பு சித்தி வீட்டிலிருந்து கிளம்புகையில் விடியும் என்ற நம்பிக்கை இருந்தது. இப்போது கொஞ்சம் இருக்கும் வெளிச்சத்தையும் இழக்கப் போகிற நிச்சயம் அவளை அரித்தெடுத்தது. இந்த மனநிலையில் அவள் எப்படி சாதாரணமாக நடந்து கொள்வாள்?

சிவகாமி கவனிக்கிறாளோ என்று தோன்றும் போதெல்லாம் உப்புசப்பில்லாத விஷயம் என்றாலும் ஏதாவது வாயில் வந்ததைப் பேசுவதும் மற்றநேரம் தன் வேதனையில் உழல்வதுமாக நேரம் போக்கினாள்.

அனுராகா மட்டும் ஏதோ உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

உணவு முடிந்ததும், ''என்னம்மா, உன் சினேகிதி வந்த பிறகு உன்னை ஆளையே பார்க்க முடியவில்லையே. கொஞ்ச நேரம் என் அறையில் வந்து என்னோடு பேசிக் கொண்டு இருக்கிறாயா என்று அனுபமாவை அழைத்தாள் சிவகாமி.

போனால் அனுராகா ஆத்திரப்படுவாளே என்று அனுபமா தயங்குகையில், அவள் கையைப் பற்றி, ''எப்போதே ரொம்பவும் தூக்கம் வருகிறது என்றாள் என் நோழி. நான்தான் கட்டாயப்படுத்திச் சாப்பிட அழைத்து வந்தேன். பாவம்..!'' என்றாள் அனுராகா.

அவளது கை அழுத்தம் உணர்ந்து அனுபமாவும் அதையே வழிமொழிகவும், ஒத்துக் கொண்டு இருவரையும் அனுப்பி வைத்த சிவகாமி யோசனையில் ஆழ்ந்தாள்.

அவரால் அவர் என்ன யோசித்து என்ன செய்தும், அனுராகாவும், ரகுபதியுமாக விரித்த வலையில் அவளுடைய பிரியமான மருமகள் சிக்கிக் கொள்வதை அவரால் தடுக்க முடியாமல் போயிற்று.

27

சிறு வயதிலிருந்தே சிவகாமியின் வாழ்க்கைப் பாதையில் யாரும் மலர் பரப்பி வைத்திருக்க வில்லைதான்.

சிற்றன்னைக் கொடுமையை அனுபவித்தவர். எனவேதான் தாயிழந்த அனுபமாவிடம் மிகுந்த பரிவும் பிரியமும் தானாக உண்டாயிற்று.

திருமணமான ஒரு சில ஆண்டுகள், ஒரு குறுகிய காலகட்டத்தில் மாத்திரம் அவர் மகிழ்ச்சியால் திளைத்தார் எனலாம். ஆனால் அருமைக் கணவர் நோய்வாய்ப்பட்டு, மறைந்தே போனதிலிருந்து வெகுகாலம் பிரச்சினைகளே அவரது வாழ்வாகி விட்டிருந்தன. கடவுள் அருளோடு மாமியார் துணையும் இருக்கவே அத்தனை இடுக்கண்களையும் நல்லபடியாகவே களைய முடிந்தது.

மகனை வளர்ப்பதில் மிகவும் கவனமாக இருந்தார். ஒரே மகன்; வாழ்வின் பற்றுக்கோடே அவன்தான். எனினும் கண்ணுக்கு இமைபோல ஒரேயடியாகக் காவலெடுக்கவில்லை. ஒரேயடியாகக் கைப்பிடிக்குள் வைத்திருந்தால் உரிய காலத்தில் வருகிற மருமகளுக்கு உடனே வெறுத்து விடாதா? அம்மாவா மனைவியா என்று மகனுக்கு வாழ்க்கை கசந்து விடுமல்லவா? எனவே மகனுக்கு உரிமை கொடுத்தே வளர்த்தார்.

சிறு வயதின் அறியாமை காரணமாக மகன் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டால், தோன்றாத்துணையாக பின்னிருந்து அதைத் தீர்ப்பாரே தவிர நேரடியாகத் தலையிடுவதும் இல்லை. இதைச் செய்யாதே, அது கூடாது என்று

காதருகே கரைந்து கொண்டே இருந்து வெறுப்பேற்றுவதை விட, தானாகப் பட்டும், பிறரைப் பார்த்தும், தானே திருத்திக் கொள்ளும் அனுபவப் படிப்பு மேல் என்பது அவரது கொள்கை. அதன்படியேதான் மகனை வளர்த்தார். வளர்ந்தவகையில் மகனைப் பற்றி அவருக்குப் பெருமைதான். ஆனால்... இப்போது... மறுநாள் காலை உணவுக்காக இளம் பெண்கள் இருவரும் சாப்பாட்டு அறைக்குச் சென்றபோது, சிவகாமி டெலிஃபோனில் பேசிக் கொண்டிருந்தார்.

''வேலைதான் எப்போதும் இருக்கிறதே. வேண்டியவர்களைப் பார்க்க வேண்டுமானால், வேலையை ஒதுக்கி வைத்து விட்டுத்தான் வர வேண்டும். இன்று உன்னை... உங்களை என்று சொல்ல வேண்டுமா... வேண்டாமா? சரி சரி. கட்டாயம் உன்னை எதிர்பார்ப்பேன்... வைக்கட்டுமா'' என்று அவர் பேசி முடித்துத் திரும்பிப் பார்க்கவும், மணி ஓடிவந்து அந்த 'கார்ட்லஸ்' டெலிஃபோன் கருவியை வாங்கிச் சென்றான்.

இரு பெண்களையும் முறுவலால் வரவேற்று, அமர்ந்ததும் பரிமாறச் சொல்லிவிட்டு, தன் பேச்சை விவரித்தார். ''நம் வித்யாதரனுடைய நெருங்கிய சினேகிதன். பள்ளிப் படிப்பு முழுவதும் ஒன்றாகப் படித்தவர்கள்'' என்று கூறிச் சாப்பிடத் தொடங்கினார்.

உணவினிடையே விளக்கமும் தொடர்ந்தது. ''கல்லூரிப் படிப்பும் சேர்ந்துதான். வித்யா கொஞ்சநாள் தொழிலில் கூட இருந்து விட்டு எம்.பி.ஏ.க்காக அமெரிக்கா போனான். சத்யகுமார் பரீட்சையில் தேர்வாகிப் பயிற்சிக்கு போனான்... இப்போது மாற்றலில் இங்கே வந்திருக்கிறான். வந்ததும் சினேகிதனைப் பார்க்க வேண்டுமாம். சினேகிதன் ஊரிலிருந்து வந்தபிறகு பார்த்துக் கொள். முதலில் இந்த 'ஆண்டி'யைப் பார்க்க வந்து சேர் என்றேன்.... அனும்மா, இந்தக் கத்திரிக்காயைப் புளித்துவையலும் இட்டிலியுமாக ரொம்ப நன்றாயிருக்கி

றதே. சாப்பிட்டுப்பார். தாயம்மா, அம்மாவுக்கு எடுத்து வை'' என்று கூறிவிட்டு மீண்டும் தொடங்கினார்.

''வெறும் மாற்றல் இல்லை. பதவி உயர்வு. உதவி கமிஷனர்''

சட்டெனத் தலை நிமிர்ந்து, ''என்ன கமிஷனர்?'' என்று விசாரித்தாள் அனுராகா.

''உதவி... உதவி கமிஷனர்.''

''ச்சு... அதைக் கேட்கவில்லை. எந்தத் துறையில்? வணிக வரி, வருமானவரி, அறநிலையத்துறை என்று எத்தனையோ இருக்கிறதே, அதில் எது என்று கேட்டேன்'' என்றாள் அவள் பரபரப்பை அடக்கிக் கொண்டு.

இன்னும் ஒரு வில்வல் இட்டிலியைக் கத்திரிக்காய் துவையலில் புரட்டி வாயில் வைத்து ரசித்து மென்று விழுங்கி விட்டு சாவதானமாகப் பதில் சொன்னார் சிவகாமி. அவன் ஐ.பி.எஸ். பரீட்சை நன்றாகச் செய்ததாகச் சொன்னான். அப்படியானால் போலீசாகத்தான் இருக்க வேண்டும்" என்று வேடிக்கை போலச் சொன்னார்.

''கட்டாயம் வா வா என்றீர்களே. ஒரு போலீஸ்காரனையா இந்த வீட்டுக்கு அழைத்தீர்கள்?'' என்றபோது அனுராகாவின் குரல் கீரீச்சிட்டது.

''என்னம்மா செய்வது! இந்த வீட்டுக்கு மட்டும்தான் என்னால் ஒருவரை அழைக்க முடியும்? வேறு எந்த வீட்டுக்கும் வரச் சொல்லி நான் அழைத்தால் நன்றாயிராதே. அத்தோடு, அவன் வெறும் போலீஸ்காரனில்லை. சத்யகுமார் ஐ.பி.எஸ். போலீஸ் உதவி கமிஷனராக்கும்'' என்று பழைய குரலில் கூறினார் சிவகாமி.

வெறுப்பை மறைக்க முயற்சி கூடச் செய்யாமல் அவனை வெறித்து நோக்கினாள் அனுராகா.

அவரது சலனமற்ற பார்வை, சற்றும் தளராமல் அவளது பார்வையைத் தாங்கி நிற்கவும் அவளது முகம் கடுத்தது.

சிவகாமியின் முகத்தில் சோர்வுக் குறிபடரவும் சட்டென மாறி, ''எப்போது? எப்போது வரச் சொல்லியிருக்கிறீர்கள்?'' என்று ஆர்வம் போல விசாரித்தாள் அவள்.

''ம்ம்.... இப்போதே...''

''இப்போதேயா?'' என்று எழுந்து விட்டாள் அனுராகா.

அதைக் கவனியாததுபோலத் தொடர்ந்தார் பெரியவர். ''அவன் வந்தாலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அவனுக்கு ஒரே வேலையாம்! யாரோ ஒரு பொல்லாத பெண்ணாம். சரியான கிரிமினல். திருட்டு, கள்ளக் கையெழுத்து... என்று அவள் செய்யாத குற்றமில்லையாம். சென்னையில் பெரிதாக எதையோ செய்துவிட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்டாளாம். இப்போது மீண்டும் இந்தியாவுக்கு திரும்பியவள் இங்கே மதுரை வரை வந்த தகவல் இருக்கிறதாம். இங்கே கூட இரண்டு பெண்கள் இருக்கிறார்கள் வந்து பார்த்துக் கொள்'' என்றேன்.

''எபபோது வரப்போகிறார் என்று கேட்டேன்''

அவளை நேராக நோக்கி, ''மாலையில் சுமார் ஆறு மணிக்கு வருவான் என்று நினைக்கிறேன்'' என்றார் சிவகாமி.

இந்தப் பேச்சு எதிலும் கலந்து கொள்ள விருப்பம் இல்லாமல் பேசாமலேயே இருந்து விட்டாள் அனுபமா. அவள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனுராகாவிடம் சிரித்துப் பேச அத்தை முயற்சி செய்தது குறித்து அவளுக்குக் கொஞ்சம் சந்தோஷம்தான். ஆனால் அதை ஏற்று, அந்த லேசான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாமல், அனுராகா எரிச்சல் பட்டது அவளுக்குப் புரியாததோடு கவலையாகவும் இருந்தது. ஆனால் அதற்காக ஏதும் செய்யத் தோன்றவும் இல்லை.

அவள்தான் வித்யாதரனை ஒரு தரம் பாராமலேயே போகப் போகிறாள். பிறகு உலகம் நின்றென்ன? சுழன்றென்ன?

உணவு முடிந்த உடனேயே, ''அனுபமா, இன்று அறை முழுவதையும் திருப்பி அடுக்க வேண்டும் என்றாயே வா போகலாம்'' என்று அவளது கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போய் விட்டாள் அனுராகா.

''கையில் ஒன்றுமில்லாமல் போனால் வைத்து விட்டுப் போகும் கடிதத்துக்கு பொருத்தமாக இராது. உனக்கும் உருமாற்றுக்கு வேண்டுமே. சாதாரணமாய் இரண்டு செட் துணிகள் எடுத்து வை'' என்று அனுபமாவை ஏவிவிட்டு, சன்னல் புறம் சென்று சற்று நேரம் வெளியே வெறித்தாள்.

அனுராகாவிடம் எதிர்ப்பேச்சு பேசிப் பயனிராது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொண்டிருந்தாள் அனுபமா. எனவே மறுபேச்சின்றி, தனக்கு கட்டாயம் தேவை என்று தோன்றிய துணிமணிகளை எடுத்து வைக்கத் தொடங்கினாள்.

அப்படி எடுத்து வைக்கையில், அடுத்தவள் அறியாமல் அவள் எடுத்து வைத்த பொருள் ஒன்று. வித்யாதரனின் புகைப்படம். அவனைப் பார்க்கும் ஆவலில் நெஞ்சு துடிக்கும் போது இந்த நிழல் படம் கொஞ்சமாவது ஆறுதல் தராதா?

சேலைமடிப்பில் படத்தை வைத்து, பெட்டியில் வைத்த போது, ''அதைவிட உன்னிடம் இருப்பதில் விலை உயர்ந்த சேலைகளையே எடுத்து வை அனுபமா. ஜரிகை சேலைகள், நகைகள்... பணம்... எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டால் போகிற இடத்தில் பயன்படுமல்லவா? அதற்காகத்தான் சொன்னேன்'' என்றாள் அனுராகா.

''எனக்கு அதெல்லாம் எதுவும் தேவைப்படாது'' என்றாள் அனுபமா சுருக்கமாக.

''ஆனாலும் உன்னை வெறும் கையோடு அனுப்ப மனசில்

மனம் வருமா? பணம், நகை, நட்டு என்று உன்னிடம் எவ்வளவு இருக்கிறது?'' என்று விசாரித்தாள் மற்றவள்.

பாங்கில் பணம் இருக்கிறது. ஆனால் பாஸ் புத்தகத்தையும் செக் புத்தகத்தையும் வித்யாதரனின் 'ஷெல்ஃபி'ல் வைத்து விட்டுப் போவது என்று ஏற்கனவே அனுபமா முடிவு செய்திருந்தாள். சிவகாமியின் உருவில் மறைந்த தாயைக் கண்டிருந்த அவளுக்கு, அந்தத் தாய்க்குச் செய்த சேவைக்காகப் பணம் பெற்றுக் கொள்ளச் சற்றும் மனம் இல்லை. எப்போதும் கைப்பையில் வைத்திருக்க வேண்டும் என்று கூறி, சிவகாமி கொடுத்திருந்த ஆயிரம் ரூபாயை மட்டும் வைத்திருந்தாள். அவளது சாண் வயிற்றைக் கழுவ ஏதேனும் வீட்டு வேலை செய்தால் கூடப் போதுமானது. அந்த வேலை கிடைக்கும் மட்டும் செலவுக்குப் பணம் இருந்தால் போதும். வேறு செல்வம், சுகம் என்று எதுவும் அவளுக்கு அவசியமில்லை.

அனுராகா, நாவில் தேன் தடவிப் பேசியபோதும் அனுபமா அவளை உணர்ந்து கொண்டாள். இந்த ஆயிரத்தையும் அவளிடம் தாரை வார்க்க மனமற்று; ஒன்றும் இல்லை'' என்றாள் மெல்லிய குரலில்.

''பின்னே? உன் செலவுக்குத் தேவைப்பட்டால் என்ன செய்வாய்?'' என்று நம்பாத குரலில் கேட்டாள் அனுராகா.

''தர்மலிங்கம் அங்கிளிடம் கேட்டு வாங்கிக் கொள்ளும்படி அத்தைச் சொல்லியிருக்கிறார்கள்'' என்று பதிலிறுத்தாள் அனுபமா.

''அந்த வேலைக்காரனிடம் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டுமா? அழகுதான். சரி சரி. போய் அவனிடம் ஒரு லட்சம் ரூபாய் கேட்டு வாங்கிவா'' என்று அலட்சியமாக உதிர்த்துவிட்டாள் அடுத்தவள்.

திகைப்புடன் நோக்கினாள் அனுபமா.

''என்ன பேய் விழி விழிக்கிறாய்?'' என்று எரிச்சலுடன் வினவினாள் அனுராகா. கேட்டால் கொடுப்பதுதானே அந்த வேலைக்காரனின் வேலை?'' என்றாள் குரலில் உதாசீனத்துடன்.

''ஆயிரம் ரூபாய் என்றால் கூட அதை அத்தையிடம் கேட்டுக் கொண்டுதான் அங்கிள் கொடுப்பார்''

''கிழவி இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறாளாக்கும். சரி, தொலையட்டும். உனக்கு எப்படியும் நகைகள் தந்திருப்பார்களே?''

''அதெல்லாம் பெட்டகத்தில் இருக்கின்றன''

''சீக்கிரம் போய் எடுத்து வா''

''எனக்கு அந்த இரும்புப் பெட்டகத்தைத் திறக்கத் தெரியாது'' என்றாள் அனுபமா உள்ளூரத் திருப்தியுடன்.

''யாரிடம் பொய் சொல்லுகிறாய்?'' என்று சீறிவிழுந்தாள் அடுத்தவள். ''அனும்மா, அனும்மா என்று பல்லைத் தட்டித் தொட்டிலில் போட்டு ஆட்டாத குறையாகக் கெஞ்சினாள் அந்தக்கிழவி. இந்தப் பெட்டகம் திறக்க உனக்குச் சொல்லித் தராமலா இருப்பாள்? இந்த ரீலை நம்ப நான் தயாரில்லை'' என்றாள் கடுமையான குரலில்.

''கற்றுத் தருவதாகத்தான் சொன்னார்கள். இடையில் பிரியப் போகிற நமக்கு இது எதற்கு என்று நான்தான் மறுத்து விட்டேன்'' என்று அமைதியாக மொழிந்தாள் அனுபமா. பிறகு எது எப்படி எப்படி நடக்குமோ? நல்லவேளையாக என்னால் நட்டமிராது என்று உள்ளே எண்ணினாள்.

''முட்டாள்! அடி முட்டாள்!'' என்று கனன்று தன் ஆற்றாமையையும் ஆத்திரத்தையும் தீர்த்துக் கொண்டாள் அனுராகா

ஆனால் அனுபமாவின் விழிகளில் சினம் துளிர்க்கவும், குரலைத் தணித்து, ''எல்லாம் உனக்காகத்தான். ஏதோ, நாலு நகை எடுத்து வைத்துக் கொண்டால் சமயத்துக்கு ஆகுமல்லவா?

''சேச்சே!'' என்றாள் அனுபமா. ''அடுத்தவர் பொருள் எனக்கு எதற்கு?'' என்று பெட்டியை மூடி வைத்தாள்.

அவளை ஆத்திரத்துடன் உறுத்து நோக்கிய அனுராகா அனுபமா நிமிரவும் சட்டெனப் பார்வையை மாற்றிக் கொண்டாள். இருக்கிற தொல்லை போதும். இனி இவள் வேறு முறைத்துக் கொள்ளும்படி வைத்துக் கொள்ளும்படி விட்டுவிடக் கூடாது.

அனுராகாவின் உள்ளம் உலைக்களமாகக் கொதித்தது. இடையில் கிடந்த முட்டுக்கட்டைகளை எல்லாம் விலக்கி ஆயிற்று. இனிமேல் பயமில்லை என்று நினைத்தால் கிழவி கெடுத்து விட்டாளே. இடியைத் தலையில் போட்டு விட்டாள்! அவளைத் தேடும் போலீஸ் ஆபீஸரை வீட்டுக்கே அழைத்திருக்கிறாளே. இருக்கட்டும். இதேபோல ஓர் இடியை இவள் தலையிலும் இறக்காமல் இந்த ராதா-மாதவி-இப்போதைய அனுராகா விடப் போவதில்லை.

இந்த மாதிரி ஓர் இக்கட்டு நேரக்கூடுமோ என்று அஞ்சித் தான் இந்தியாவுக்கே வரக்கூடாது என்று இருந்தாள். ஆனால் அமெரிக்காவரை மோப்பம் பிடித்து வந்து விட்டார்களே. இருக்கிற கடைசி வழி என்று இங்கே வந்தால் இங்கேயும் கால் தரிக்க விடவில்லையே இந்தக் கிழவி! பாதகி.

இங்கிருந்து செல்ல வேண்டியிருப்பதே அநியாயம்! அதும் பணம் காசு, நகை நட்டு என்று ஒன்றுமே இல்லாமல் போக நேர்வது மகாக் கொடூரம்...

அனுராகாவின் பார்வை ஒரு கணம் அனுபமாவின் கழுத்துச்

சங்கிலி மீது ஆவலுடன் படிந்தது. ஆனால் இதை இவளாகவே கழற்றித் தரமாட்டாள். புனிதத்தாலி! பத்தினிப் பெண். இவளை ரகுபதியிடம் ஒப்படைக்கும்போது அவனும் இந்தச் சங்கிலியை விட்டுக் கொடுக்கப்போவதில்லை. இவளுக்காகப் பேசிய பணத்தையாவது ஒழுங்காகத் தருவானோ, என்னவோ? சும்மாவே, இது என் இடமில்லை, இங்கே 'லோகல்' ஆளிடம்தான் பணம் தேற்ற வேண்டும் என்று மூக்கால் அழுது கொண்டிருந்தான்...

எல்லாம் இந்தக் கிழவியால் கெட்டது.

எந்த வகையிலும் சிவகாமிக்குச் சந்தேகம் தோன்றி விடாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டாள் அனுராகா. ஆனால் அனுபமாவையும் சிவகாமியையும் வினாடி நேரம் கூட அவள் தனித்து விடவும் இல்லை. மதிய உணவு முடிந்து சிவகாமி ஓய்வெடுக்கச் சென்றபின், ஓர் அரைமணிநேரம் பொறுமையுடன் காத்திருந்து, சிவகாமி உறங்கி விட்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின் ஒரு வினாடி நேரம் கூட வீணாக்கவும் இல்லை.

''கிளம்பு கிளம்பு. நீ நடந்து சென்றால் வேலையாட்கள் சந்தேகப்பட்டு என்ன என்று கேட்கக்கூடும். அதைவிட, நானே உன்னைக் காரில் அழைத்துச் சென்று ஒரு தொலை தூரப் பஸ்ஸில் ஏற்றி விட்டுவிட்டுத் திரும்பி வந்து நீ ரயிலில் போவதாகச் சொல்லி விடுகிறேன்'' என்று அனுபமாவைக் கிளப்பி அழைத்துச் சென்றாள்.

அனுராகா அவளது பாதையிலிருந்து தன்னை விலக்குகிறாள் என்று மட்டும்தான் அனுபமா எண்ணியிருந்தாள். எனவே காரை ஓர் ஆட்டோ பின் தொடர்வதைப் பெரிதாகக் கவனிக்கத் தோன்றவில்லை அவளுக்கு.

ஆனால் ஆள் நடமாட்டமில்லாத ஒரு சாலையில் கார் நின்றுவிட, கூடவே நின்றுவிட்ட ஆட்டோவிலிருந்து ரகுபதி

இறங்கி வந்து காரில் ஏறவும் திகைத்தாள்.

ஏறியவன் ரகுபதி என்பதை உணர்ந்ததும், ஏதோ பெரும் சூது என்று உணர்ந்து காரிலிருந்து இறங்கி ஓட முயன்றாள்.

ஆனால் அனுராகாவின் உதவியோடு, ரகுபதி ஒரு மயக்க மருந்திட்ட கைக்குட்டையால் அவளது முகத்தை இறுக மூட, ஒரு நிமிடப் பலத்த போராட்டத்தின் பின் அனுபமா நினைவிழந்தாள்.

அனுபமாவோடு ரகுபதி ஆட்டோவில் சென்று விட, அவன் தந்த பணத்தை வெறித்துப் பார்த்தாள், அனுராகா.

அவள் குறிவைத்திருந்த பல நூறு லட்சங்கள் எங்கே, இந்த வெறும் இருபதாயிரம் ரூபாய் எங்கே? அத்தோடு ஒதுக்குப் புறமாய் இந்த வீட்டிலேயே திம்மதியோடு சுகபோகத்தில் வாழ்ந்து விடலாம் என்று எண்ணியது மாறி, மீண்டும் ஓடி ஓடி ஒளியும்படி ஆயிற்றே! எல்.... லாம்..

கொதிப்புடன் ஒரு டெலிஃபோன் பூத்தை நாடிச் சென்றாள். எதிர்முனையில் சிவகாமியின் குரல் கேட்டதும், ''ஏ கிழவி, பேசுவது யார் தெரிகிறதா? உன் மகனுடைய உண்மையான அமெரிக்காக் காதலி. போலியாக வந்த உன் பிரிய மருமகள் இப்போது எங்கே தெரியுமா? லாட்ஜில்! உன் மகன் அவளைப் பிடித்ததும் ஒரு லாட்ஜில்தான். முன்பு யாரை ஏமாற்றி விட்டு உன் மகனோடு வந்தாளோ, அதே ஆளிடமே அவளை ஒப்படைத்து விட்டேன். இந்நேரம் அவளைத் தொட்டிருப்பான். அப்புறம் எத்தனை பேருடனோ? கற்பனையில் கண்டு நன்றாக ரசித்து ரசித்து சந்தோஷப்படு, அதற்குள் உன் இதயம் வெடித்து உயிர் போகாமல் இருந்தால்'' என்று கூறி ரீசிவரை வைத்தாள்.

28

சிவகாமியின் உடல் நிலை, அனுபமா அஞ்சி நடுங்கிய அளவு மோசம்தான் என்றால் இப்போது உயிர் போயிருக்கும். பாதிக்குப் பாதியே உண்மை என்றாலும் குறைந்தது மார டைத்து மயக்கமேனும் போட்டிருப்பாள் கிழவி என்று எண்ணி ஒரு வக்கிரமான திருப்தியுடன் அனுராகா ரிசீவரைக் கீழே வைத்தபோது மெய்யாகவே சிவகாமிக்கு மயக்கம் போடாத குறைதான். அப்படி கதிகலங்கிப் போயிருந்தார்.

அனுராகாவைச் சிவகாமி சரியாகத்தான் எடை போட்டிருந் தார். ஒரு காலக்கட்டத்தில் அனுபவம் இல்லாத காரணத்தால் ஒயில் என்று எண்ணி வித்யாதரன் மயங்கி இருந்திருந்தான் தான். ஆனால் ரகுபதியைப் போலவே சிவகாமிக்கும் அவ ளைப் பார்த்ததும் அவளது தன்மை புரிந்து போயிற்று. வந்தவள் மருமகளுக்குத் தொல்லை கொடுக்கிறாள் என்பதை அறிந்தபிறகும், எதிலும் அனாவசியமாய் நேரடியாக மூக்கை நுழைக்கும் பழக்கம் இல்லாத காரணத்தால், 'நானிருக்கிறேன்' என்று கோடி காட்டியதோடு நிறுத்திக் கொண்டிருந்தார். அத்தோடு அனுபமா முட்டாள் அல்ல என்பதும் அவரது மதிப்பீடு. அதனால் அனுராகாவால் யாரையும் எதுவும் செய்துவிட முடியாது என்று நிச்சயம் நம்பியிருந்தார்.

அனுராகா, அவளாக விலகிச் சென்று விடட்டும் என்று எண்ணித்தான் 'சத்யகுமார்' ஐ.பி.எஸ்.' குண்டை அவர் போட்டது கூட. ஆனால் 'பூமராங்' மாதிரி அது திருப்பித்

தாக்கி விட்டதே!

அனுராகா சொன்னது பொய்யாகவே இருக்கக்கூடும் என்று அவருக்கு தோன்றவில்லை. அப்படி ஒரு பொய்யை அவள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அத்தோடு வீட்டில் அனுபமாவும் இல்லை.

அனுபமா, அனுராகாவைப் புரிந்து கொள்ளாமல் அவளிடம் ஏமாந்திருப்பாள் என்று சிவகாமிக்குத் தோன்றவில்லை. பின்னே, என்ன ஆயிற்று? அதைவிட முக்கியம், இப்போது அனுபமாவை எங்கென்று தேடி கண்டுபிடித்து எப்படிக் காப்பாற்றுவது?

வாழ்விலேயே முதல் முறையாகச் செய்வது அறியாமல் அவர் மலைத்து நின்றபோது சற்று நலுங்கிய தோற்றத்துடன் அவருடைய மகன் உள்ளே வரவும் பெருமளவு அப்பாடி என்றிருந்தது அவருக்கு.

மகன் சொடக்குப் போட்டு மந்திரத்தில் மருமகளை வரவ ழைத்து விடுவான் என்று அவர் எண்ணிவிடவில்லை. ஏதோ, ஒரு மூளைக்கு இரு மூளை யோசித்தால் ஏதாவது வழி கிடைக்கலாமே!

ஆனால் இவன் முன்பே வந்திருந்தால்...?

''உன்னை இரவிலேயே எதிர்பார்த்தேன்'' என்றார் சுருக்க மாக அவர். ''நேற்று டெலிஃபோன் செய்ததும் கிளம்பியிருப் பாய் என்று நினைத்தேன்.''

ஒரு வினாடி தாயின் முகத்தில் நிலைத்த வித்யாதரனின் பார்வையில், உடனே அகன்று சுற்றிலும் நோக்கித் திரும்பிய தும், ''கிளம்பினேன்தான். வழியில் ஒரு விபத்து'' என்றவன்

தாயின் பார்வையில் தன்னை வேகமாக ஆராய்வதைக் கண்டு, ''எனக்கல்ல. வழியில் ஒரு காரை அடித்துப் போட்டுவிட்டு நின்று பாராமல் போய்விட்டார்கள். குடும்பம் முழுவதும் நாலுபேர் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்தார்கள். வேண்டிய உதவி செய்துவிட்டுவரத் தாமதமாகி விட்டது. ஆனால் இங்கே என்ன ஆயிற்று? அனு எங்கே?'' என்று வினவினான்.

''காணவில்லை'' என்றவர் முடிந்த அளவு சுருக்கமாக, வேகமாக விஷயத்தை அவர் அறிந்த அளவில் சொல்லி முடித்தார் ரகுபதி என்றாள். ''அவன் இருப்பிடம்... பழைய இடம் உனக்குத் தெரியுமல்லவா?''

தாயை ஒருதரம் ஆழப்பார்த்துவிட்டு, ''அனுவை அங்கே தான் முதலில் தேடக்கூடும் என்று ரகுபதிக்கும், அனுராகாவுக்கும் கூடத் தெரியாமலா இருக்கும்? சென்னைக்குக் கொண்டு செல்லுமுன்பே மடக்கி விடுவோம் என்று தெரிந்துதான் இருக்கும்.... இல்லை. இங்கேதான் எங்காவது... அம்மா, சத்யா இங்கே வருவதாகச் சொன்னார்களே, வந்திருப்பான் அவனிடம் கேட்கலாம்'' என்று கூறி நண்பனை அழைத்தான்.

''உடுக்கை இழந்தவன் கைபோல்'' உடனே வந்து நின்றான் சத்யகுமார்.

விவரம் அறிந்ததும், ''கண்டுபிடித்து விடலாம்'' என்றான் உதவி கமிஷனராக.

''இன்றில்லா விட்டால் நாளை எப்படியும் கண்டு பிடித்துவிடலாம். ஆனால் இடைப்பட்ட நேரம்?... அப்போது என்னவோ ஆகும் என்றுதான் சொல்வதற்கில்லை'' என்று நண்பன் கவலைப்பட்டான்.

தோழனின் கையைப் பற்றி, ''அனு உயிரோடு இருந்தால் எனக்கு அது போதும், சத்யா'' என்றான் வித்யாதரன் உறுதியோடு.

விஷயம் ஊகித்து முகம் வெளுத்தபோதும், ''ஆமாம் அவள் எப்படி இருந்தாலும் என் மருமகளே'' என்றார் சிவகாமியும். உடனேயே, ''ஆனால் எப்படியப்பா கண்டு பிடிப்பாய்?'' என்று கலக்கத்துடன் விசாரித்தார்.

''போலீஸ்காரன் அறியாத குற்றம் கிடையாது ஆன்ட்டி. ஒரு நேரம் இல்லாவிட்டால் இன்னொரு நேரம் எப்படியும் தெரிந்து போகும். ஆனால் பலசமயங்களில், பல்வேறு நிர்பந்தங்களால் கண்டும் காணாதது போலக் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து... இல்லை என்று நிற்க வேண்டியதாகி விடுகிறது. அவ்வளவுதான்'' என்று கூறி, ஆங்கங்கே டெலிஃபோனிலேயே தொடர்பு கொண்டார் கமிஷனர். ''இந்த அண்டர் கிரவுண்டு ஆட்களைத் தட்டிக் கொடுத்து வைத்துக் கொண்டால் அவ்வப்போது உதவியும் கிடைக்கும்....''

நத்தை வேகத்தில் கழிந்த ஓர் இரண்டு மணி நேரத்தின்பின், ''இருக்குமிடம் கிட்டத்தட்டத் தெரிந்துவிட்டது'' என்றார். ''நீ என்னோடு வருகிறாயா... அல்லது...'' என்று நண்பன் முழுக்குமுன் கிளம்பி விட்டான் வித்தயாதரன்.

தாயின் கையைப் பற்றி அழுத்தி, ''முடிந்த அளவு அலட்டிக் கொள்ளாமல் இருங்கள், அம்மா'' என்று கூறி, நண்பனைப் பின் தொடர்ந்தான்.

மெல்ல நினைவு திரும்பியபோது ஒரு சின்ன அறையினுள் தான் தனியே இருப்பதை அனுபமா உணர்ந்தாள். ஒரு கணம் திகைத்தவளுக்கு உடனே எல்லாம் நினைவு வந்துவிட, பதறிக்

கொண்டு எழுந்தாள்.

அறைக்கதவு வெளிப்புறமாய்ப் பூட்டப்பட்டிருந்தது. மற்ற படி ஒரு பாத்ரூம் கூட இல்லாத மிகவும் சிறிய அறை. இங்கிருந்து எப்படித் தப்புவது?

தப்பும் வழி அவள் சிந்திக்கும்போதே கதவைத் திறந்து கொண்டு ரகுபதி உள்ளே வந்தான்.

அவள் விழித்து விட்டதைக் கண்டதும், உள்ளே தாளிட்டான். ''என்னம்மா கண்ணு, முன்னே மாதிரி ஓடி விடலாம்னு பார்த்தியா? அனுபவப்பட்டவன் பாரு, வெளியே பூட்டிக் கொண்டுபோய் விட்டேன். இங்கே தப்பவே முடியாது. நீயாகவே படிந்து விட்டால்.''

பதறிப்போய், ''இல்லையில்லை. ரகுபதி, தயவு செய்து என்னை விட்டுவிடு'' என்று கெஞ்சியபடியே பின்னடைந்த போது அவளது கால்கள் லேசாகத் தடுமாறின.

சில தினங்களாகவே சரியாக உண்ணாதது, மயக்க மருந்தின் வேகம்... ''கடவுளே இந்த மிருகத்திடமிருந்து அவள் எப்படித் தப்புவாள்?''

''ரகுபதி, தயவு செய்து விட்டுவிடு. உன் காலில் விழுகிறேன்...''

''அதைவிடக் கட்டிலில் விழுகிறேன் என்றால்...'' என்று ஏதேதோ அசிங்கமாகப் பேசியபடி அவன் நெருங்குகையில் கதவு தட்டப்பட்டது.

ஓட்டை வழியாகக் கவனித்துவிட்டு, கதவைத் திறந்து அங்கேயே நின்று, வந்த ஆளிடம் பேசினான் ரகுபதி.

''நான்தான் சரக்கோடு வரேன்னு சொன்னேனே, நீ போ ஒரு மணி நேரத்திலே வரேன்''

''அதெல்லாம் முடியாது. பணம் வாங்கிட்டாயில்லை? பொருளை உடனே ஒப்படைக்க வேண்டியதானே உன்வேலை?''

''எங்களுக்குள்ளே ஒரு கணக்கு இருக்குது. அதைத் தீர்த்ததும்....''

''ஊகும்... அதெல்லாம் எங்க முதலாளிகிட்டே பேசிக்கோ. பணம் கொடுத்தாச்சுதுன்னா பொருள் அவருது. அவர் பார்த்து யாருக்கு...''

இந்தப் பொருள், சரக்கு என்ற வார்த்தைகள் எல்லாம் தன்னைக் குறிப்பன என்பதை உணர்ந்த அனுபமாவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. முட்டி மோதிப் பிடித்துத் தள்ளி விட்டு ஓடிவிடலாம் என்றாலோ கதவை மறைத்து நின்றவர்கள் இரண்டுபேர். ஒருவனையே வெல்வது கடினம்.

வாக்குவாதம் முடிந்து, வந்தவன் கையில் ஓர் ஐம்பது ரூபாயைக் கொடுத்து, சற்று தாமதித்து வருமாறு அனுப்பி விட்டு மீண்டும் அனுபமாவிடம் திரும்பினான் ரகுபதி.

அவளைப் பொறுத்த வரையில் ஜீவமரணப் போராட்டம் தான். அவள் நம்பிக்கை இழக்கும் தருவாயில் மீண்டும் கதவு இடிபட்டது.

''நான்தான் உனக்குத் தனியாகப் பணம் தந்தேனே...'' என்று ரகுபதி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே வெளியே இருந்து உதைத்த உதையில் கதவு கீல் கழன்று விழுந்தது.

பாய்ந்து வந்த வித்யாதரன், ரகுபதியைத் துவைத்து எடுத் தான். கீழே கிடந்த ரகுபதியின் நெஞ்சில் உதைக்கக் காலைத் தூக்கியபோது, ''போதும் வித்யா'' என்று நண்பனைத் தடுத்தான் சத்யகுமார். ''உயிர் போய்விடக்கூடாது, பார்'' என்றவர், உடன் வந்த போலீசாரிடம், ''பிடித்துக் கொண்டு போய்க் கவனித்து அனுப்புங்கள். இனி வித்யாதரன் குடும்பத் துப் பக்கமே இவன் திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாது'' என்று உத்திரவிட்டு விட்டு, ''வித்யாதர்....'' என்று நண்பனி டம் மீண்டும் திரும்பியவர், அவன் மனைவியை அணைத்துக் கொண்டு நிற்கவும் புன்னகை செய்து, ''அப்படியே தங்கச்சி யைக் காருக்குக் கூட்டிப்போப்பா'' என்று தானும் கிளம்பினார்.

''நீங்கள் இருவரும் பின்னே வசதியாக அமர்ந்து கொள் ளுங்கள். நானே வீட்டில் விட்டுவிடுகிறேன். அங்கே ஆன்ட்டி வேறு கவலையாகக் காத்துக் கொண்டிருப்பார்கள்'' என்றபடி ஜீப்பில் ஒட்டுபவர் இடத்தில் ஏறி அமர்ந்தார்.

அதுவரையில் ஏதோ கனவுலகத்தில் நடப்பவள் போன்று வித்யாதரனுடைய கை வளைவில் அவனை ஒட்டிக் கொண்டே வந்த அனுபமா, சட்டென விறைத்தாள்; ''அத்தை! அய்யோ, நான் வீட்டிற்கு வந்தால் அத்தைக்கு ஆபத்தாயிற்றே'' என்றாள் பதட்டத்துடன்.

''அம்மாவுக்கு ஒன்றும் இல்லை, அனு....'' என்ற வித்யாத ரன், அவள் மீண்டும் மறுத்துபேச வாயெடுக்கவும், ''அனு, அம்மாவின் நோயே ஒரு கட்டுக்கதை. அத்தோடு நம் விஷயமும் அம்மாவுக்குத் தெரியும். எல்லாம் போகும்போது சொல்கிறேன், ஏறு'' என்றான்.

ஜீப் செல்லத் தொடங்கியதும், அவள் கேள்வியாய் நோக்க, ''அனுராகா மயக்கம் தீர்ந்து நான் இந்தியாவுக்குத் திரும்பி

வருவதற்காக, டாக்டர் அங்கிள், தருமலிங்கம் இவர்களோடு சேர்ந்து அம்மா நடத்திய நாடகம்தான் இந்த நோய்'' என்றான் வித்யாதரன்.

அவன் பேச்சை ஜீரணிக்க முயன்றபடியே, ''வந்த பின்?'' என்று வினவினாள் அனுபமா.

''மீண்டும் சென்றுவிடக் கூடாதல்லவா?

''உங்களுக்கு எப்போது... எப்படித் தெரியும்?

அவள் முகத்தில் குழப்பம் குறைந்து கூர்மை பரவுவதைக் கவனித்து, சிறு தயக்கத்துடன், ''பணத்தை உன்னிடம் கொடுத்து சோதித்தபோது சந்தேகம் வந்தது. கொஞ்சம் ஊன்றிப் பார்க்கத் தொடங்கியதும் தெளிந்து போயிற்று'' என்றான் அவன்.

''அப்போதேயா? ஆனால் அது சோதனைதான் இல் லையா? அப்போது சோதனை இல்லை என்றீர்களே?''

''நீ நினைக்கிற மாதிரி இல்லை என்றேன்.... தப்பாக நினைக்கக் கூடாது, அனு. அந்தச் சோதனை அம்மா உனக்காகத்தான் வைத்தார்கள்''

''எப்படி?''

''நீ அனுராகா இல்லை என்று கண்டு விட்டார்கள். பணத்திற்காக மட்டும் என்று வந்திருந்தாயானால் அதை எடுத்துக் கொண்டு ஓடிவிட வாய்ப்புக் கொடுத்தார்கள்.''

''ஓ! கார் ஓட்டக் கற்றுக் கொடுத்து, காரைக் கொடுத்து, நாள் முழுவதும் தனியே விருப்பம்போலச் சுற்றச் சொல்லி..... கவளே!''

அவன் முகம் கன்றுவது கண்டு, ''அனு, ப்ளீஸ், நீ அம்மாவின் நிலையிலிருந்தும் பார்க்க வேண்டும்.... யோசி...'' என்றான் வித்யாதரன் சற்றுக் கெஞ்சுதலாகவே.

சில நிமிடங்கள் மவுனமாக வெளியே நோக்கியவள் மீண்டும் திரும்பியபோது முகம் தெளிந்திருந்தது.

''அப்போதே தெரியும் என்றால் நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லையே?'' என்று வினவினாள் அவள்.

''ஒரோர் சமயங்களில் அப்படியும் தோன்றியதுண்டு. அன்று நகைப் பெட்டியைப் பெட்டகத்தில் வைக்கும்போது ரொம்பவும் உன்னிடம் சொல்லிவிடத்தான் வாய் வந்தது....ஆனால்...''

''ஆனால்?''

''அதுபற்றிப் பிறகு சொல்லுகிறேன். இப்போது வீடு நெருங்கிவிட்டது. உனக்கு அம்மாவிடம் கோபம் இல்லையே?'' என்று கவலையுடன் வினவினாள் வித்யாதரன்.

ஆனால் ஜீப்பில் மருமகளைக் கண்டதும் இருகை விரித்து வந்த மாமியாரை, ஜீப் சரியாக நிற்பதற்கு முன்பாகவே குதித்து இறங்கி ஓடிச் சென்று அவள் அணைத்துக் கொண்டதைக் கண்டபிறகு, அந்தக் கேள்வியே அவசியமற்றது என்று நிம்மதியோடு உணர்ந்தான்.

''என் கண்ணம்மா, உனக்கு ஒன்றுமில்லையடா? சே, எனக்கு முதலிலிருந்தே சந்தேகம். புருவமும், தலைமுடியும் வித்தியாசமாய்த் தோன்றினாலும் அவள் முகத்தைப் பத்திரிகையில் பார்த்ததாய் ஓர் எண்ணம். இதை முதலிலேயே சொல்லியிருந்தால் நீ இந்த வேதனைப்பட்டிருக்க வேண்டாம்''

என்று வருத்தமாக உரைத்தார் சிவகாமி.

''இதுவே நல்லது ஆன்ட்டி...'' என்றார் 'வயர்லஸ்'சில் ஏதோ பேசிவிட்டுத் திரும்பி வந்த சத்யகுமார், ''இப்போது அந்தப் பெண்ணை ரயில் நிலையத்தில் பிடித்துவிட்டோம். குற்றவாளியை மதுரையில் கண்டுபிடித்தோம் என்று முடிந்துவிடும். உங்கள் வீட்டில் கைதாகி இருந்தால் உங்களுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு என்று பெரிய கசமுசாவாகி இருக்கும். ஒரு நன்மை நடப்பதற்காகக் கொஞ்சம் கஷ்டப்பட்டால்தான் என்ன, சொல்லுங்கள்?''

''அது சரிதான், சத்யா. நான் கூட முதலில் நினைத்தேன், விபத்தில் அடிபட்டுக் கிடந்த குடும்பத்துக்கு உதவி செய்யப் போனதால் என் குடும்பம் கலைந்து விடும்போல் தெரிகிறதே, இதுவா கடவுளின் நியாயம் என்று உள்ளூர ஆத்திரப்பட்டேன். இப்போது வேறுமாதிரிப் புரிகிறது'' என்றான் வித்யாதரன்.

ஒரு நாள் விருந்துண்ண வருவதாக உறுதிகூறி, சத்யகுமார் விடைபெற்றுச் சென்றபின் சிவகாமியுடைய குடும்பம் உள்ளே சென்றது.

செல்லுகையில், ''நீ புத்திசாலி என்று நினைத்தேன். ஆனால் அனுராகாவிடம் இப்படி மாட்டிக் கொண்டாயே!'' என்றார் சிவகாமி.

''என்ன செய்வது அத்தை? அவள் சொன்னபடி நடக்காவிட்டால் உங்களிடம் எல்லாம் சொல்லி விடுவேன் என்று பிரட்டினாள். உங்களுக்கோ அதிர்ச்சி தாங்காது என்று டாக்டர்...''

''கடவுளே! நீங்கள் இருவரும் பிரியாமல் இருப்பதற்காகச்

சொன்ன பொய்! இப்படித் திருப்பி அடித்துவிட்டதே!'' என்று கூறியபடி அமர்ந்த மாமியாரை வியப்புடன் நோக்கி, ''உங்களுக்கு இது.... நான் அனுராகா இல்லை என்பது எப்படித் தெரிந்தது?'' என்று விசாரித்தாள் மருமகள்.

மருமகள் கையைப் பற்றி வருடி, ''இந்த கை சொல்லியது. இயல்பாகவே மிருதுவான கைக்கும் மிருதுவாக்கப்பட்டட கைக்கும் உள்ள வேறுபாடு தொட்டால் தெரிந்துவிடும். என் மகன் திருப்பி திருப்பி அனுராகா பற்றி எழுதியதெல்லாம் அந்த வழுவழுவும் மொழுமொழுவும். அந்த ஒருநாள் தாமதம் வேறு. அப்போதே புரிந்து விட்டது''

''அப்போதேயா?!''

இரு இளையவர்களின் முகத்தைப் பார்த்ததும் பெரியவருக்குச் சிரிப்பு வந்தது. நமுட்டுச் சிரிப்புடன், ''முந்திய தலைமுறைக்கு மூளை மட்டு என்று நினைத்து நடித்தீர்களல்லவா? நானும் நடித்தேன். அத்தோடு, உங்களுக்குத் தெரியாமலே விவரமும் அறிந்து'' என்றபோது வித்யாதரன் குறுக்கிட்டான்.

''ஒரேடியாகத் 'தெரியாமல்' என்று நினையாதீர்கள், அம்மா. முதலில் 'அனுபமா என்று அழைக்கப் போவதாக நீங்கள் சொன்னதும் ஏதோ கண்டு கொண்டீர்கள் என்று எனக்குத் தோன்றிவிட்டது. நான் உங்கள் பிள்ளை என்பதை மறந்து விட்டீர்களே! துப்பறியும் ஏஜன்சி மூலம் அனுபமா பற்றி விசாரித்தீர்களே, அந்த ஏஜன்சிதானே அவசியத்துக்கு நம்ப 'செக்யூரிட்டி' பார்ப்பதும். அங்கே தருமலிங்கம் அங்கிளைப் பார்த்ததுமே ஊகித்துவிட்டேன். சும்மா என்றால் அனுபமாவின் வீடு பற்றித் தெரிந்து கொள்ள வருடக்கணக்கில் ஆகியிருக்கும் தெரியுமா? ஏஜன்சி ஆட்களுக்குத் 'தற்செயலாக'க் கிடைத்த அந்தத் தகவல்கள் நான் வேறு ஆட்கள் மூலம்

கொடுத்ததுதான் தெரியுமா?'' என்று கூறி இருபெண்களையுமே அசர வைத்தான்.

''அம்மாவும் பிள்ளையும் கெட்டிக்காரர்கள்தான். நான்தான் முட்...'' என்று வருத்தமான முறுவலுடன் அனுபமா கூறத்தொடங்க மற்ற இருவரும் குறுக்கிட்டு, ''அதெல்லாம் இல்லை'' என்று அவசரமாக மறுத்தனர்.

''எத்தனை தரம் பதில் சொல்ல முடியாமல் என் வாயை அடைத்திருக்கிறாய்?'' என்றான் வித்யாதரன்.

''நீ முட்டாளில்லை, கண்ணம்மா. சற்று அதிகமாகப் பாசம் வைப்பவள். அதிக அன்பும் அறிவுக் கண்ணை மூடிவிடும் தெரியுமா? அப்போதும் உனக்கும் உறுத்தல் ஏற்பட்டதை உணர்ந்து எத்தனை தடவை கஷ்டப்பட்டுப் பெருமூச்சு வாங்கிக் கொண்டு படுத்திருக்கிறேன், தெரியுமா?'' என்று பாவனையோடு சிவகாமி கூற மூவருக்கும் சிரிப்பு வந்தது.

''ஆனால்....'' என்று யோசனையோடு மாமியாரை நோக்கினாள் அனுபமா.

''ஆனால் என்னம்மா?''

''உங்களுக்கு உடம்பு சரியில்லை என்று உங்கள் பிள்ளை எவ்வளவு வேதனைப்பட்டார் தெரியுமா? அந்தத் துன்பம் அவருக்கு நீங்கள் தரலாமா?''

''வேதனைப்படுவான் என்று தெரியும்தான். ஆனால் அனும்மா, உனக்கு குழந்தை குட்டி என்று பிறந்து வளரும் போது தான் உனக்கு இது நன்றாகப் புரியும். நோய் நொடி என்று வரும்போது கதறக் கதறத்தான் மருந்து ஊற்ற வேண்டும். காயம்பட்டு வந்து நிற்கும்போது வலிக்க வலிக்கத்

தான் புண்ணைச் சுத்தம் செய்து மருந்திட வேண்டும்.

''.... இந்த ஒரு தடவை இந்தப் பேச்செடுத்துப் பேசி முடித்து விடலாம். இந்த அனுராகா என் மகனைப் பீடித்திருந்த நோய், பிழை என்றுகூடப் பாராமல் பிரியமாகப் பேசினேன். அவனை வெளியே அனுப்பி விட்டு எவ்வளவு திமிராகப் பேசினாள் தெரியுமா? அதுவும் முதல் தடவை பேசும்போதே! அவள் குணமாக்கப்பட வேண்டிய வியாதி என்று அப்போதே தெரிந்து கொண்டேன்.

''அவளுடையது உண்மை அன்பாகவும் இருக்கலாமே'' என்றாள் அனுபமா விடாமல்.

''உண்மை அன்பென்றால் இவனுக்காக உடன் வந்திருப் பாளே!''

அது சரியே என்று உணர்ந்த அனுபமா பேசாதிருக்கவும், சிவகாமி இருவரையும் கிளப்பினார். ''போங்கள். இருவரும் அலைச்சலில் அலுப்பும் அழுக்குமாக இருப்பீர்கள். போய் குளித்துவிட்டுச் சாப்பிட வாருங்கள். அனு சில நாட்களாகவே சரியாகச் சாப்பிடவில்லை. அதிலும் இன்று பட்டப்பட்டினி''

''நானும்தான் அம்மா. சாப்பாட்டு நினைவே வரவில்லை.''

''பேசக்கூட நிறைய இருக்கும். ஆனால் குளித்து சாப்பிட்டு விட்டு அப்புறம் பேசலாம். சீக்கிரம் வாருங்கள். எனக்கும் பசிக்கிறது.... '' என்றார்.

உணவானதும், ''வயதாகி விட்டதில்லையா? இந்தப் பரப ரப்பு எனக்குத் தாங்கவில்லை. தூங்கப் போகிறேன். நீங்களும் செல்லுங்கள்'' என்று அனுப்பி வைத்தார்.

தனிமை இருவர் நாவையும் கட்டிப் போட்டது போல

அவர்களது அறைக்குள் சென்றபின் சிறிது நேரம் அங்கே மவுனம் நிலவியது.

ஒருவாறு, ''அனு'' என்று தொடங்கிய வித்யாதரன் அவ ளும் பேச வாயெடுக்கவும் தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

''வந்து... என்மேல் உள்ள அன்பால் அத்தை உங்களுக்குப் பிடிக்காத திருமணத்தில் உங்களை....''

''பிடிக்காத திருமணமா? அப்படியிருந்தால் இந்தத் திரும ணத்தை என்னால் ஒத்திப் போட்டிருக்க முடியாதா? அனு, ஜீப்பில் பிறகு சொல்கிறேன் என்றேனே இப்போது கேட்டுக் கொள். அன்று பெட்டகத்தின் அருகே உன்னிடம் உண்மை சொல்லிவிட எவ்வளவோ மனம் துடித்தும் சொல்லாத காரணம் என்னவென்று நினைத்தாய்? அம்மாவின் நோய் பொய்யென்று தெரிந்தால் நீ என்னை மணக்க மறுத்துவிடு வாயோ என்ற பயம்தான். நீ உண்மை அறியுமுன் சட்டப்படி உன்னைக் கட்டிப் போட்டுவிடும் ஆவல்தான்.

''நம்ப முடியவில்லையா அனு? முதலிலேயே எப்படியோ தொலையட்டும் என்று உன்னை விட்டு விட என்னால் முடியவில்லை. உன் வீட்டில்.... அந்த மணவாள நாயுடு உன் கையைப் பற்றிய போது என்னால் பொறுக்க முடியவில்லை. அன்று நான் பல் துலக்கி விடுமுன் சோ.ீபாவில் உட்கார்ந்தப டியே கண்ணயர்ந்தாயே உன்னை அணைத்து ஆறுதல் அளிக்க வேண்டும் என்று பெரும் ஆவல் வந்தது; கண்ணுக்குள் வைத்துக் காக்கும் வெறி வந்தது. ஆனால் இதே மடத்தனத்தை இன்னொரு தகுதியற்ற பாத்திரத்தில் வைத்த நினைவும் உடனேயே வந்தது. அதனால்தான் அந்த மாதிரிக் கோபம், ருத்தல் எல்லாம்.

''சூடுபட்ட பூனை என்று கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா?... என்ன? எதுவானாலும் நான் சொல்லி முடித்தபின் சொல்கிறாயா அனு?'' என்று மேலும் தொடர்ந்தான்.

''அப்புறம்....'' என்று தொடங்கியவன் முகம் கன்ற சற்றுத் தயங்கினான். ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மீண்டும் தொடங்கினான். ''அன்றைக்கு .... நீ ஒன்றும் அறியாத சின்னப் பெண், அனு. உன்னை... நான்... அனு, எனக்குள் இப்படி ஒரு மிருகம் இருக்கக் கூடும் என்று நான் நினைத்ததே இல்லை.... மறுநாள் உன் முகத்தை நேராகப் பார்த்துப் பேச வெட்கி ஓடிவிட்டேன்.

''ஆனால் நிர்வாகி, அனுராகா என்று ஒருத்தி வந்திருப்பதாகச் சொல்லவும் பயந்து விட்டேன். அன்று மயங்கியிருந்த நாளில் கூட அவளது தன்னலம் குறித்து வியந்திருக்கிறேன். ஒன்று வேண்டும் என்று நினைத்து விட்டால் கிடைக்க எந்த வழியையும் பயன்படுத்துவாள், கிடைக்கும் வரை ஓயவும் மாட்டாள். அவள் இங்கே வந்திருக்கிறாள் என்றால் அது நல்லதற்கல்ல என்றுதான் ஓடி வந்தேன்.... வந்தால்... அதற்குள்....''

வேகமாக அவள் அருகே வந்து அவளை இறுக அணைத்துக் கொண்டான் வித்யாதரன். ''அனு, இந்தச் சில மணி நேரங்கள்! அப்பப்பா! கடவுளே. இனி உன்னைப் பிரிவது என்றால் என்னால் முடியவே முடியாது, அனு... ப்ளீஸ், என் பிழைகளை எல்லாம் மறந்து நீ என்னுடனேயே இருக்க வேண்டும்.... அனு, நீ அப்போது ஏதோ சொல்ல வந்தாயே.. இனி சொல்லு. ஆனால் பிரிந்து செல்ல வேண்டும் என்று மட்டும் சொல்லி விடாதே. அதற்கு மட்டும் நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். வேறு என்னவானாலும் சொல்லு

அப்போது என்ன சொல்லப் போனாய்?''

உள்ளூரப் பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு, அவளது முகத்தை அவன் பார்க்க முடியாதபடி குனிந்து கொண்டு ''ஆண் பூனைக்கு மட்டும்தான் சூடு உறைக்குமா என்றுதான் கேட்க வாயெடுத்தேன்'' என்று மென்குரலில் உரைத்தாள் அனுபமா.

அவசரமாக அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான் வித்யாதரன்.

''என்னது? ஆ... ஆனால் நீ ரகுபதி மேல் காதல் என்று சொல்லவில்லையா?''

''வேறு என்ன சொன்னாலும் நீங்கள்தான் ஒத்துக் கொள்ளவதே இல்லையே! திருப்பித் திருப்பிக் கேட்டுக் கேட்டுப் போரடித்தீர்களே...''

''ஆனால்... ஆனால்....'' அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. ''அன்று அம்மா பிழைத்துக் கொள்வார்கள் என்று சொன்னபோது கூட முதலில் மகிழ்ந்தவள் உடனே முகம் வாடினாயே? விடுபட முடியாதே என்றுதானே?''

''இல்லையே! நீங்கள் சந்தோஷப்படவே இல்லையே, விடுபட முடியாதே என்றுதானே அப்படி என்று நினைத்தல்லவா வேதனைப்பட்டேன்.... அப்புறம்...'' என்று முகம் சிவிர்த்தாள்.

''அப்புறம்? அப்புறம் என்ன சொல்லு'' என்று பரபரத்தான் அவன்.

''.... வந்து... அன்றைக்குத்தான் ஒருவழியாகக் கொஞ்சம்

தைரியம் உண்டாயிற்று. ஆனால் மறுநாள் ஆளையே காணோம் என்றதும், தன்னை மீறித் தவறு செய்து விட்டு, பார்க்கக்கூடப் பிடிக்காமல் ஓடி விட்டீர்கள் என்று ஒரே வேதனை...'' அனுராகாவின் பெயரை வேண்டுமென்றே கூறாது விடுத்தாள், அனுபமா. அதுதான் ஏற்கெனவே தெளிவுபடுத்தப்பட்ட விஷயமாயிற்றே!

''தேவுடா! தேவுடா!! எல்லாம் வடிகட்டிய மண்டுத் தனம். இரண்டு பேருக்கும்தான். உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ள இருவருக்குமே புத்தியில்லையே! இதுமாற... அனு, ஏதோ உனக்கும் பிள்ளை குட்டி பிறந்தால் ஏதோ புரியும் என்று அம்மா சொன்னார்களே! சீக்கிரமாய்ப் பெற்றுக் கொண்டு புரிந்து கொள்ளும் புத்திபெற முயற்சி செய்யலாமே?''

கன்னம் சிவந்தபோதும் கிளுகிளுத்துச் சிரித்தபடி, எல்லை யற்ற காதலும், அளவிட முடியாத மன ஆறுதலுமாக கணவன் மார்பில் முகம் புதைத்தாள் அனுபமா.